Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.1.50 United Kingdom: £1.20



கலை

யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தி

ஒரு வரலாற்று அதிசயம்

NAZHIKAI
London

APRIL 2015

# நாழிகை

International Tamil Newsmagazine



## இலங்கை - இந்திய நட்புறவில் மீனவர் பிரச்னை

## தமிழ்நாட்டு மீனவர்களின் நடவடிக்கையும் கோரிக்கையும் நியாயமானதா?



TASTE it Today!
Quento
Fly high with a fruit Fizzzz.
BRAND Niru
Quento
Fly high with a fruit Fizzzz.
1.5 Litre

**நாழிகை** | உள்ளடக்கம்




08 | இலங்கை
சிங்கள தீவினுக்கோர் பாலம் அமைப்போம்

20 | இந்தியா
மோடி ஆட்சியில் இந்துத்துவ ஆதிக்கம்?

24 | உலக விவகாரம் - மத்திய கிழக்கு
இஸ்லாமிய இராச்சியம் முறியடிக்கப்படுமா அல்லது விஸ்வரூபம் எடுக்குமா?

28 | உலக விவகாரம் - ரஷ்யா
நெம்றசோவ் கொலை புட்டினுக்கு எதிரான சக்திகளின் செயல்?

14 | அரசியல் - இலங்கை
ஒரு நம்பிக்கை சமிக்ஞை


30 | அட்டை செய்தி அரசியல் - இலங்கை
இந்திய மீனவர் ஊடுருவல் நியாயமானதா?

34 | இலங்கை - யாழ்ப்பாணம்
நிலக்கீழ் நீரில் கலந்த கழிவு எண்ணெய்

41 | கலை
யாழ்ப்பாணம் வி. தட்சணாமூர்த்தி ஒரு வரலாற்று அதிசயம்

38 | விளையாட்டு - கிரிக்கெட்
ஒரு நாள் போட்டிகளில் ஒரு புத்துணர்வு

44 | சினிமா
சாதி, வீரம், மீசை!






**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: X, No: 2
**Editor:** S Mahalingasivam **Published by:** Pannews Limited 123 Twyford Road Harrow Middx HA2 0SJ
**Tel: 00 44 208 422 5699 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com
**www.nazhikai.com**

**Anual Subscription** (12 issues): **UK** £22.00 **Europe** £30.00 **Canada** $30.00 **India** Rs200.00 **All Other Countries** £35.00
Payable to **Pannews Limited**
**Canada:** 880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6 **Tel: 416 613 2770**

# தமிழரின் சாணக்கியம்

'வாராது போல வந்ததாக' ஓர் ஆட்சி மாற்றம் இலங்கையில் வந்தது. அந்த மாற்றத்தில் புதிய ஜனாதிபதியாகியிருக்கும் மைத்திரி பால சிறிசேனவுக்கு பெரும்பான்மைத் தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பினரும், பெரும்பான்மைத் தமிழ் மக்களும் தங்கள் ஆதரவை நல்கினர்.

இன்னும், இந்த ஆட்சி மாற்றத்துக்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் அதன் சூத்திரதாரிகளுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் பங்கேற்றதோடு, வாக்களிப்பில் சிங்கள மக்களோடு தமிழ் மக்களும் அமோக அளவில் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில், தேர்தல்களின் பின்னர் அரசாங்கங்களை அமைப்பதில் தமிழர்கள் இலங்கையின் இருபெரும் பெரும்பான்மைக் கட்சிகளுக்கும் தங்கள் ஆதரவை அளித்ததும், இரு கட்சிகளாலும் அவர்கள் ஏமாற்றப்பட்டதும் உண்மையேதான். இம்முறை, இதில் சற்று மாறுதலாக தங்கள் ஆதரவுடன் இலங்கையில் ஜனாதிபதியொருவர் தெரிவாவதற்கு தமிழர்கள் துணையாகியிருக்கிறார்கள்.

எனின், இந்த அவதானத்துடனான ஓர் அரசியல் அணுகுமுறை தமிழ் மக்களினதும் தலைவர்களினதும் பரஸ்பர பொறுப்பாகிறது.

பதவியேற்றபின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கிறார். இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருக்கிறார். அத்துடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கும் விஜயம் செய்திருக்கிறார்.

இவை அனைத்தும், முன்னைய அரசின் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளிலும், நடவடிக்கைகளிலும் உன்னிப்பான விதத்தில் மாறுபடுபவை. அத்துடன், இலங்கையின் தமிழர் பிரச்னையுடனும் இவை கனதியைக் கொண்டவை.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியும், பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரோனும் ஜனாதிபதி சிறிசேனவுடன் இலங்கைத் தமிழர் பிரச்னைபற்றியும் அழுத்தமான அக்கறையைத் தெரிவித்துப் பேசியிருக்கிறார்கள்.

எனின், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இலங்கைத் தமிழர்களின் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்களும் அவர்களுக்கு அநுசரணை அளிப்பவர்களும் இந்த அரசியல் மாற்றத்தை மிகுந்த பொறுப்புடனும் கவனத்துடனும் யதார்த்தத்துடனும் அணுகி செயல்பட கடப்பாடுடையவர்கள்.

ஏமாற்றிவிட்டார்களென்றோ, ஏமாற்றப்பட்டோமென்றோ அல்லாமல், வாராது போலவந்த ஒரு மாற்றத்தில், அந்த சந்தர்ப்பத்தைத் தமிழர் தங்கள் சாதுரியத்தில் வென்றவர்களென்றாகவேண்டும்.

சுதந்திரத்துக்குப் பின்னான இலங்கைத் தமிழர்களின் அரசியல் வரலாற்றின் இப்போதைய கட்டத்தில், அவர்களின் அரசியல் தமைமையின் விசுவாசமான கடமை இது. ■

சில வரிகளில்

லீ குவான் யூ

# ஆசியாவின் யுக புருஷர்



ஏழு தினங்கள் துக்க அனுஷ்டிப்புக்கு பின்னர் இடம்பெற்ற சிங்கப்பூரின் 'தந்தை' லீ குவான் யூவின் இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொட்டும் மழையிலும் வீதியெங்கனும் திரண்டு தமது இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

சில வார காலம் மருத்துவ மனையில் அநுமதிக்கப்பட்டிருந்த, 91 வயதான லீ குவான் யூ மார்ச் 23ஆம் தேதி மரணமுற்றபோது, 23ஆம் தேதியிலிருந்து 29ஆம் தேதிவரை சுமார் 15 லட்சம் மக்கள் அவருடைய பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கனவையும் நனவாக்கலாம் என்பதை நிரூபித்து, கனவு தேசமொன்றை கட்டியெழுப்பிய தலைவர் உலகத்தில் லீ குவான் யூ ஒருவராகவே இருக்கமுடியும். செல்வத்தில், நவீனத்தில், ஒழுங்கில், கட்டுப்பாட்டில், நிர்வாகத்தில், ஒட்டுமொத்தமாக அனைத்திலும் முதன்மை நாடாக, அனைவரையும் பிரமிப்பில் ஆழ்த்திவரும் நாடு சிங்கப்பூர் என்றால், அந்த நாட்டுக்குக் கிடைத்த தலைவர்போன்ற ஒரு தலைவர் எமக்கும் வேண்டும் என்று ஏங்க வைத்தவரும் இவரே. உலகத்தையே சிங்கப்பூரை நோக்கி திரும்பிப்பார்க்க வைத்தவர்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்ற லீ குவான் யூ, 1959இலிருந்து சிங்கப்பூரை ஆட்சிபுரிந்துவரும் மக்கள் நடவடிக்கை கட்சியை ஆரம்பித்து, சிங்கப்பூரின் முதல் பிரதமராக பதவியேற்றவர், 1990 வரை 31 ஆண்டுகள் பிரதமராக பதவிவகித்து, 2011ஆம் ஆண்டுவரை அமைச்சரவையில் தொடர்ந்தும் அங்கம்வகித்தார். இறக்கும்வரை, தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராகவுமிருந்தார்.

1957இல் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம்பெற்ற மலேசியாவிலிருந்து, 1965இல் சிங்கப்பூர் தனிநாடாக சுதந்திரம்பெற்றது. ஜனநாயகம், சுதந்திரம் என்ற பெயரில் நாட்டின் முன்னேற்றம் தடைப்படுவதை ஒருபோதும் அநுமதிக்காத லீ, கருத்துச் சுதந்திரம், செய்தி ஊடகங்கள், மற்றும் எதிர்க்கட்சிகளின்மீதும் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும் தயக்கம் காட்டவில்லை.

மலாய் மக்களுடன் தமிழ் மக்களும் கணிசமான அளவில் வாழும் சிங்கப்பூரில் அவர்களது உரிமைகளையும் லீ மதித்தார். ஈழத் தமிழர் விவகாரத்திலும் அவரின் நிலைப்பாடு தெளிவானதும் உறுதியானதும் வெளிப்படையானதாகவுமிருந்தது.

பல உலகத் தலைவர்கள் இறுதி வைபவத்தில் கலந்துகொண்டனர்.

HSBC

The world's local bank

# கறையுற்ற

# உலக உள்ளூர் வங்கி

உலகத்தின் 'உள்ளூர் வங்கி' என்ற வர்த்தக விளம்பரத்தோடு, இறுமாப்பாக இயங்கிவந்த பிரிட்டனின் எச்எஸ்பிசி (HSBC) இன்று, சட்டவிரோத வியாபாரிகள், ஊழல் மோசடியாளர்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பெரும் பிரபல்யங்களின் பதுக்கல் பணத்தின் பாதுகாப்புப் பெட்டகமாக அறியப்படுகிறது.

மிகப் பெரும் ஊழல் மோசடிப் பேர்வழிகளின் கணக்குகளைப் பேணி, அவர்களது பணத்தைப் பாதுகாக்கும் விவகாரத்தில் எச்எஸ்பிசி பாராமுகமாக இருந்ததாக ஆரம்பத்தில் கருதப்பட்டபோதும், இவ்வாறான வாடிக்கையாளர்களில் பலர் தமது வரிப்பணங்களைச் செலுத்தாமல் தவிர்ப்பதற்கு எச்எஸ்பிசி உதவியிருக்கிறது என்பதே இன்று ஆத்திர அலை அந்த வங்கியை நோக்கி பாய்வதற்கு காரணம்.

இதுவரையில் எச்எஸ்பிசியின் தலைமையகம் அமைந்திருக்கும் பிரிட்டன் தவிர்ந்த அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம், ஆர்ஜென்ரீனா உள்பட பத்து நாடுகளில் குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளையும் எதிர்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் எச்எஸ்பிசி, உலகின் 203 நாடுகளைச் சேர்ந்த ஒரு லட்சத்து 6 ஆயிரம் வாடிக்கையாளர்களின் 118 பில்லியன் டொலர் பணத்தை இவ்வாறு பாதுகாப்பதாக அறியப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரச வரித்திணைக்களத்தின் 2010ஆம் ஆண்டு அறிக்கையைத் தொடர்ந்து எச்எஸ்பிசியின் வரி ஏய்ப்பு விவகாரம் வெளிச்சத்துக்கு வந்திருந்தபோதிலும், கடந்த பெப்ரவரி மாதப் பகுதியில் பிரபல சர்வதேச நாளிதழ்கள் இதனை அம்பலப்படுத்தத் தொடங்கியதன் பின்னரேயே மக்களின் கவனத்தை இது ஈர்த்தது.

சுவிற்சர்லாந்து எச்எஸ்பிசியின் நடவடிக்கைக்காக எச்எஸ்பிசி நிர்வாகம் வருத்தம் தெரிவித்து, அதனைத் திருத்திக்கொள்வதாக அறிவித்தபோதிலும், விவகாரத்தின் வீச்சைக் கட்டுப்படுத்த அது உதவவில்லை. பிரிட்டனைச் சேர்ந்த 7 ஆயிரம் வாடிக்கையாளர்கள் 21.8 பில்லியன் டொலரையும், பிரான்ஸைச் சேர்ந்த 9 ஆயிரத்து 187 வாடிக்கையாளர்கள் 12.5 பில்லியன் டொலரையும் சுவிற்சர்லாந்து எச்எஸ்பிசியில் பதுக்கியிருக்கும் அதேவேளை, சுவிற்சர்லாந்திலுள்ள 11 ஆயிரத்து 235 பேரின் கணக்குகளில் 31.2 பில்லியன் டொலர் காணப்படுவதாகவும் அறியப்பட்டுள்ளது.

இந்தியாவிலும் எச்எஸ்பிசி விவகாரம் புதிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. ஆக, 678 இந்தியர்களே சுவிஸ் வங்கியில் கணக்குகளைப் பேணி, கறுப்புப் பணத்தை பதுக்கியிருப்பதாக கருதப்பட்ட வேளையில், அந்த எண்ணிக்கை இரு மடங்கானது என்று புதிய தகவல்கள் அம்பலப்படுத்தியிருக்கின்றன.

இந்திய அரசியல்வாதிகளும், தொழிலதிபர்களும், வைர வியாபாரிகளும் இவ்வாறு பணத்தைப் பதுக்கியிருப்பது தெரியவந்திருப்பதையடுத்து, அப்பணத்தை நாட்டுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படவேண்டும் என்ற அழுத்தங்களும் அங்கு அதிகரித்திருக்கின்றன.

ஸ்பெயின் நாடிலும் இந்த விவகாரம் சச்சரவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. நாலாயிரம் ஸ்பெயின் நாட்டவர் சுவிஸ் எச்எஸ்பிசியில் கணக்குகளை வைத்திருப்பதாகவும், அதில் பெரும்பாலானோர் தாம் செலுத்தவேண்டிய வரிப்பணத்தைச் செலுத்தாது வரி ஏய்ப்பில் ஈடுபட்டதாகவும் தகவல்கள் வெளிப்படுத்துகின்றன.

சொந்த நாடுகளையே சுரண்டி மோசடிசெய்து சொத்துக்களைத் திரட்டியவர்களின் திருட்டுச் செல்வத்தைப் பாதுகாக்க துணைபுரிந்தது மட்டுமன்றி, அந்நாட்டு மக்களுக்கே உரித்தான வரிப்பணத்தைச் செலுத்தாது ஏய்ப்பதற்கு உதவியது எச்எஸ்பிசி புரிந்திருக்கும் மன்னிக்கமுடியாத குற்றம் என்று உலகின் செல்வாக்குமிக்க பத்திரிகைகள் சாடிவருகின்றன.

பனாமா, வேர்ஜின் தீவுகள்போன்ற நாடுகளிலுள்ள வங்கிகளில் பணத்தைப் பதுகியிருப்பவர்களை கவர்ந்திழுக்கும்வகையில் திட்டங்களை அறிவித்து, தமது வங்கியில் பணத்தை வைப்பிலிடும் நடவடிக்கைகளிலும் எச்எஸ்பிசி ஈடுபட்டிருந்தது என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிவரும் பிரெஞ்சு நாளேடு 'லூ மொண்ட்', எச்எஸ்பிசி வாடிக்கையாளர்கள் வரி ஏய்ப்பில் ஈடுபடுவதற்கு உதவியதற்கான ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஆதார தகவல்களைத் திரட்டியிருப்பதாகக்கூறி, அதன் பிரதிகளை அனைத்துலக புலனாய்வு செய்தியாளர் சம்மேளனத்திடம் கையளித்துமிருக்கிறது. இன்னும், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 9 ஆயிரத்துக்கும் அதிகமான வாடிக்கையாளர்களில் 99.8 வீதமானவர்கள் வரி ஏய்ப்பில் ஈடுபடுவதற்கு எச்எஸ்பிசி உதவியதாக அழுத்தம் திருத்தமாக இது கூறுகிறது.

இவையனைத்துக்கும் பதிலளித்து விளக்கம் தருமாறு வங்கியின் முன்னாள் மற்றும் தற்போதைய நிர்வாகிகள் பல்முனை விசாரணைகளை எதிர்கொள்கிறார்கள். மறுபுறத்தில், பல கௌரவமான பொறுப்புக்களை வகித்துவந்த முன்னாள் மற்றும் தற்போதைய நிர்வாகிகளைத் தமது பதவிகளிலிருந்தும் பொறுப்புக்களிலிருந்தும் விலக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும் இந்த விவகாரம் ஏற்படுத்தியிருக்கிறது.

உலகின் பெரும் செல்வந்தர்களின் வைப்பீட்டை எதிர்பார்த்து, அதனை ஊக்குவிப்பதற்காக அவர்கள் தமது நாடுகளுக்கு செலுத்தவேண்டிய வரிப்பணத்தை செலுத்தாது ஏய்ப்பதற்கு உதவி, இன்று வல்லமை நாடுகளின் சீற்றத்துக்குள்ளாகியுள்ள எச்எஸ்பிசி இத் தாக்கத்திலிருந்து இலகுவில் மீள்வது சாத்தியமல்ல.

வங்கித் துறையில் முன்னணி வகிக்கும் எச்எஸ்பிசி அதற்கு எதிராக முடுக்கிவிடப்பட்டுவரும் சட்ட நடவடிக்கைகளின் முடிவில், வரலாற்றில் அதிகம் தண்டப்பணம் செலுத்திய வங்கி என்பதிலும் முதலிடம் வகிக்க நேரிடலாம்.




No. 9 Nageswaran Road, T. Nagar, Chennai-600 017 Tel: 2434 4115 Web: www.nalli.com

# பதவியும் பக்குவமும்

## கெட்டிக்காரர்களையோ, அநுபவம் உள்ளவர்களையோ மூத்த அரசியல்வாதிகள் அருகில் வைத்துக்கொள்ள விரும்புவதில்லை

எதிர்க்கட்சி எதுவும் இல்லை என்ற அளவுக்கு அமோக பெரும்பான்மையுடன் டெல்லியில் ஆட்சியைப் பிடித்த ஆம் ஆத்மி கட்சி, இப்போது உள்கட்சி பூசல்களால் திணறுகிறது. இதற்குக் காரணம், கட்சித் தலைவரும் டெல்லி முதல்வருமான அரவிந் கேஜ்ரிவாலின் சர்வாதிகாரப்போக்கு என்று அதிருப்தியாளர்கள் சொல்கிறார்கள். கட்சியின் முக்கிய பிரமுகர்களான வக்கீல் பிரஷாந் பூஷனும் பேராசிரியர் யோகேந்திர யாதவும் கட்சியின் அரசியல் விவகாரக் குழுவிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அரவிந் கேஜ்ரிவால்மீது இப்போது சொல்லும் குற்றச்சாட்டுக்களைத் தேர்தலுக்கு முன்பே சொல்லியிருந்தால் கட்சி இந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்காது என்று சொல்லலாம்.




விலக்கப்பட்டுள்ள பிரஷாந் பூஷணும் யோகேந்திர யாதவும் ஆம் ஆத்மி கட்சிக்கு பெருமை சேர்த்தவர்கள். இவர்கள் கூறும் குறைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டியவை. இந்த இருவரும் அரவிந் கேஜ்ரிவாலுக்கு தெரிவித்த முக்கிய விஷயங்கள், வேட்பாளர் தேர்வில் நடைபெற்ற சில தவறுகள்; தேர்தலுக்கு நிதி வாங்கியதில் கவனமின்மை; மற்றும் மூத்த கட்சி உறுப்பினர்களைப் புறந்தள்ளும் அளவுக்கு புதியவர்கள் பெறும் ஆதரவு.

அறிவித்த இலட்சியங்களை ஆம் ஆத்மி கட்சி முழுமையாக பின்பற்றவில்லை என்று பிரஷாந் பூஷணும் யோகேந்திர யாதவும் சொல்வதை மயாங்க் காந்தி என்ற மூத்த உறுப்பினர் ஆதரிக்கிறார். ஓலையில் உள்ள விஷயத்தை ஒதுக்கிவிட்டு, ஓலைதாங்கியை அடிக்கும் எதிரிநாட்டு மன்னன்போல நடந்துகொள்கிறார் அரவிந் கேஜ்ரிவால். வேட்பாளர் தேர்வில் தவறுகள் இருந்தன என்று கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சொன்னால், அதை அரசியல் விவகார குழுவில் விவாதிக்கவேண்டும். சொல்லப்படும் குறைகளுக்கு முகம்சுளித்து, குறை சொன்னவர்களை அவமானப்படுத்திய கேஜ்ரிவால், கட்சித் தலைமைப் பதவியை துறப்பதாக சொன்னார். எதற்கெடுத்தாலும் பதவி விலகுவேன் என்பதும், பிரச்னையின் மையத்துக்கு வரமாட்டேன் என்பதும் இவரது துணிவின்மையையும் பக்குவமின்மையுமே காட்டுகிறது. துணிவில்லையேல் தலைமை இல்லை. துணிவு ஒரு முக்கியமான தலைமைப் பண்பு.

பிரஷாந் பூஷண் விவரமறிந்த பிரபலமான வழக்கறிஞர். சில ஊழல் வழக்குகளில் சிலரை வகையாக பிடித்திருக்கிறார். யோகேந்திர யாதவ், அரசியலின் கொள்கைப் போக்குகளையும் நடைமுறைகளையும் நன்கறிந்த, மிகவும் பக்குவப்பட்ட பேராசிரியர். இந்த இருவரும் கட்சிக்கு மரியாதை தேடிக்கொடுத்தவர்கள். இவர்களைத்தொடர்ந்து, பல பெரிய மனிதர்கள் கட்சியில் சேர்ந்தார்கள். பிரஷாந் பூஷணும் யோகேந்திர யாதவும் கட்சியிலிருந்து விலகமாட்டோம் என்றும், கட்சியை உடைக்கமாட்டோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு பக்குவம் இருக்கிறது. கெட்டிக்காரர்களையோ, அநுபவம் உள்ளவர்களையோ மூத்த அரசியல்வாதிகள் அருகில் வைத்துக்கொள்ள விரும்புவதில்லை. அவர்களுக்கு வேண்டியது ஆமாம்சாமிகளே என்ற நியதிப்படி, கேஜ்ரிவால் இப்போதே மூத்த அரசியல்வாதி ஆகிவிட்டார். காக்காய் பிடிப்பவர்களுக்கு பணிந்தால், இப்போது பெற்ற வெற்றியை இனி இவர் எப்போதும் பெறமுடியாது.

காலம்காலமாக அரசியலில் அடிமட்டத்திலிருந்து தொண்டனாக பணிபுரிந்து, படிப்படியாக உயர்ந்து வந்தவரல்ல அரவிந் கேஜ்ரிவால். சூறாவளிக் காற்றில் அடித்துச் செல்லப்பட்டு, கோபுரமேறிய ஒரு கசங்கிய காகிதமே. அனா ஹஸாரேயின் ஊழல் எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டபோதே கேஜ்ரிவாலுக்கு அரசியல் ஆசை துளிர்த்துவிட்டது. எனவே, ஊழல் எதிர்ப்பு இயக்கத்தில் கிடைத்த செல்வாக்கைப் பயன்படுத்தி, ஆம் ஆத்மி கட்சியைத் தொடங்கினால் அதில் தவறில்லை. ஆனால், எந்தக் காரணங்களுக்காக கட்சி தொடங்கப்பட்டதோ அவற்றை இவரே நீர்த்துப்போகச்செய்யலாமா என்றுதான் அதிருப்தியாளர்கள் கேட்கிறார்கள்.

சிறுபிள்ளைத்தனத்துக்கும் சர்வாதிகாரத்துக்குமிடையில் சிக்கித் தவிக்கும் கேஜ்ரிவால், கட்சியை ஒற்றை மனிதனின் கட்சியாக மாற்றினால் அடுத்த தேர்தலில் நிச்சயம் தோற்பார். கூத்தாடிக்கூத்தாடிக் குடத்தைப் போட்டுடைத்த பின்னரும் ஆண்டிக்குப் புதிய குடம் கொடுத்தார்கள் மக்கள். அதையும் போட்டுடைப்பேன் என்கிறார் ஆண்டி. உடைத்துவிடுவாரென்றால் அவருக்கு மூன்றாவது குடம் கிடைக்காது. இதை நன்றாக புரிந்துகொள்ள வேண்டிய அரசியல் ஆண்டி, ஆம் ஆத்மி கட்சித் தலைவரான அரவிந் கேஜ்ரிவால்.



# சிங்கள தீவினுக்கோர் பாலம் அமைப்போம்

**இலங்கை - இந்திய உறவுப் பாலத்தை மட்டுமன்றி, அரசியல் ரீதியில் இலங்கையில் இனங்களிடையேயான உறவுப் பாலத்தின் அவசியத்தையும் பிரதமர் மோடி இடித்துரைத்தார்**

தண்டாயுதன்

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம்





இலங்கைக்கு 28 வருடங்களின்பின்னர் முதல்தடவையாக உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவின் பதினைந்தாவது பிரதம மந்திரி நரேந்திர மோடி மார்ச் மாதம் 12ஆம் தேதி இலங்கை வந்திருந்தார். இவ்விஜயத்தின் முக்கியத்துவம் என்னவெனில், யாழ்ப்பாணத்துக்கும் நரேந்திர மோடி விஜயம் மேற்கொண்டமையேயாகும். இதன்மூலம், யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த முதலாவது இந்திய பிரதமர் என்ற பெருமையையும் மோடி பெற்றுள்ளார்.

சுவாமி விவேகாநந்தரை தனது மானசீக குருவாக வழிபடுபவர் பிரதமர் நரேந்திர மோடி. தனது பெயரில்கூட விவேகாநந்தரின் இளமைக்கால பெயரான நரேந்திரர் என்ற பெயரையும் கொண்டிருப்பவர்.

1897ஆம் ஆண்டு தனது அமெரிக்க பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு தாயகம் திரும்பும் வழியில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் சுவாமி விவேகாநந்தர். அந்த விஜயத்தின்போது யாழ்ப்பாணத்துக்கும் விவேகாநந்தர் சென்றிருந்தார்.

இதனையடுத்து, 1927ஆம் ஆண்டு மகாத்மா காந்தியும், அவரைத் தொடர்ந்து இலக்கிய மேதை ரவீந்திரநாத் தாகூர் 1937ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

மகாத்மா காந்தி யாழ்ப்பாணத்தில் பரவலாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் உரையாற்றினார். யாழ்ப்பாணத்தில் மகாத்மா காந்தி, ‘அடங்கா தமிழர்’ சி. சுந்தரலிங்கத்தின் நல்லூர் இல்லத்தில் தங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது, பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்துக்கு பயணம்செய்தவேளை, மகாத்மா காந்தி தங்கியிருந்த இல்லத்தின் வரலாற்றை அறிந்த சிலர், நரேந்திர மோடியையும் அங்கே ஒருசில நிமிடங்களாவது வந்துபோகச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால், மோடியின் பயண ஏற்பாடுகள் புதுடில்லியில் பல வாரங்களுக்கு முன்னரேயே திட்டமிடப்பட்டதால், அவரைக் காந்தி தங்கிய இல்லத்துக்கு வரவழைக்க முடியவில்லை.

ஆயினும், சுவாமி விவேகாநந்தரை மானசீக குருவாகக் கொண்டவரும், மகாத்மா காந்தியின் பிறப்பிடமான குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவருமான மோடியின் யாழ்ப்பாண விஜயம் அரசியல் ரீதியாக மட்டுமல்ல, வரலாற்று ரீதியாகவும் சிறப்புப்பெற்றதாகவே காணப்படுகிறது.

இந்திய பிரதமர் மோடி யாழ்ப்பாண நகருக்கு மட்டும் செல்லவில்லை. குடாநாட்டில் மிகக் கெடுபிடிகளுக்குள்ளாகியிருந்த வலிகாமம் வடக்கு பிரதேசத்துக்கும் சென்று, கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் வழிபாட்டிலும் ஈடுபட்டார். இதன்பின்னர், இளவாலைப் பகுதிக்குச் சென்று இந்திய உதவித் திட்டத்துடன், இடம்பெயர்ந்த மக்களுக்கென

**மோடி பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று, வடக்கு - கிழக்கு பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென குறிப்பிட்டிருந்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பு சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பொறுமை என்பவற்றைக் கையாண்டு, புதிய அரசுடன் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் அவர் கேட்டிருந்தார்**



யாழ்ப்பாணத்தில் இந்திய உதவித் திட்டத்துடனான வீடு கையளிப்பு





கட்டப்பட்ட வீடுகளில் ஒன்றையும் பயனாளி ஒருவருக்கு அவர் கையளித்திருந்தார்.

முப்பது வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் யுத்தம் ஆரம்பமானபோது, மக்களின் இடப்பெயர்வுகள் வலிகாமம் வடக்கிலிருந்தே முதலில் ஆரம்பமாகின. பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்திருந்தனர். இன்று, அவர்களின் வாழ்விடங்கள் பற்றைக் காடுகளும் புதர்களுமாக, வீடுகள் அத்திபாரக் கற்களுமின்றி இடித்து உடைக்கப்பட்டு நாசமாக்கப்பட்ட நிலையில் காட்சிதருகின்றன.

பிரதமர் மோடியினுடைய இலங்கை விஜயம் மனிதாபிமான பிரச்சனைகளுக்கும், இலங்கை - இந்திய உறவில் புதிய அணுகுமுறைகளுக்கும் பெரிதும் வழியமைத்ததாகவே காணப்படுகிறது.

யுத்தத்துக்குப் பின்னர் வடபகுதிக்குப் பயணம்செய்த இரண்டாவது பிரதமராகவும் மோடி விளங்குகிறார். மோடிக்கு முன்னதாக, 2013ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரோன் யாழ்ப்பாணத்துக்குச் சென்று, சுன்னாகத்திலுள்ள சபாபதி முகாமில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களையும் சந்தித்திருந்தார். இலங்கையில் இடம்பெற்ற

பொதுநலநாடுகள் மாநாட்டுக்கு வந்தவேளையில் பிரிட்டிஷ் பிரதமர் கமரோன் வடக்கே சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்திருந்தார்.

இலங்கையின் இன்றைய அரசியல் நிலபரத்தைப் பொறுத்தவரை புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசு, வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு மன ஆறுதலை அளிக்கூடிய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதை அவதானிக்கமுடிகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் லண்டனுக்கும் விஜயம் செய்திருந்தார். லண்டன் பயணத்துக்கு முன்னதாக அவர் யாழ்ப்பாணத்துக்கு சென்றதோடு, அங்கே யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, ஆளரவமற்றிருக்கும் வலிகாமம் வடக்கு பகுதிக்கும் சென்றிருந்தார்.

வலிகாமம் வடக்கு பிரதேசம், மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் சுடுகாடுபோலவே காணப்படுகிறது. ஒரு கட்டடம்கூட அங்கே காணப்படாத நிலையில், காங்கேசன்துறையில் மட்டும் ஒரு பெரும் மாளிகை கட்டப்பட்டு, நவீன அலங்காரங்களுடன் இந்து சமுத்திரத்தை நோக்கியதாக அமைந்திருந்ததை ஜனாதிபதி சிறிசேன கண்டித்திருந்தார். அம் மாளிகைக்குள் ஜனாதிபதி சிறிசேனவுடன் வடமாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோரும் சென்று, அதன் நிர்மாணத்தை வியப்போடு பார்த்தனர்.

அம் மாளிகை கட்டப்பட்டிருந்தது வேறெவருக்குமல்ல, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே, வடக்கே தமது பாவனைக்காக அதனைக் அமைத்திருந்தார்.

எனவே, ரோமாபுரி எரியும்போது அதன் மன்னர் பிடில் வாசித்த கதையாகவே, வலிகாமம் வடக்கில் மக்கள் வீடு, வாசல்களை இழந்தும், தமது உறவுகளைப் பறிகொடுத்தும் இன்றுவரை, காணாமல்போனோரைக் கண்டுபிடித்துத் தருமாறும், சிறையிலுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறும் வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களையும் நடாத்தி வருகின்றனர். பிரதமர் மோடி யாழ்ப்பாணத்துக்கு வந்த சம யத்திலும் பாதிக்கப்பட்ட மக்கள் அங்கு ஒரு கவன ஈர்ப்பு ஆர்ப் பாட்டத்தை நடாத்தியிருந்தனர்.

இந்நிலையில், காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதிக்கான மாளிகை, சொகுசுடன் அவரால் ஆடம்பரமாக வலிகாமம் வடக்கில் வாழமுடியுமானால், அங்கே பூர்வீகமாக வாழ்ந்த மக்களால் ஏன் அங்கு வாழமுடியாது? என்ற கேள்வியை எழுப்புவதாக இருக்கிறது. அண்மையில், தமிழ் தேசிய கூட்டமைப்பு நடாத்திய ஆய்வில் பல உல்லாச விடுதிகள், ஹோட்டல்கள் என்பன படையினரின் பாவனைக்காக வடக்கே அமைக்கப்பட்டுள்ளன என்ற தகவல் வெளியாகியுள்ளது.

எனவே, இடம்பெயர்ந்த மக்களை அவர்களது பூர்வீக இடங்களில் மீளக் குடியமர அநுமதிக்காது, அரசாங்கம் படைத்தரப்புக்காகவும் தனது சொந்த தேவைக்காகவும் காணி நிலங்களைப் பலாத்காரமாக பறித்தெடுத்துள்ளதையே மஹிந்த ராஜபக்ஷவின் மாளிகை விவகாரம் அம்பலப்படுத்தியுள்ளது.

மூன்று தசாப்தகால யுத்தத்தை 2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டுவந்ததாக மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மார்தட்டிக்கொண்டது. ஆயுத போராட்டத்தில் ராஜபக்ஷ அரசு வெற்றிபெற்றிருக்கலாம். ஆனால், அது வடக்கு - கிழக்கு தமிழ் மக்களை உணர்வுபூர்வமாக வெற்றிகொள்ளத் தவறியதோடு, தொடர்ந்தும் அவர்களது பூர்வீக பிரதேசங்களில் அவர்களை அடக்கி ஆளமுற்பட்டதையே வடக்கின் நில அபகரிப்பு செயல்பாடுகள் வெளிப்படுத்தியுள்ளன. ராஜபக்ஷ அரசு யுத்தத்தை நிறைவுசெய்து ஓர் அரசியல் தீர்வை முன்வைக்காது, வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள்மூலமாக பேரினவாத மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவே முற்பட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி தேர்தலில் வடக்கு - கிழக்கு மக்கள் வழங்கிய தீர்ப்பு மஹிந்த ராஜபக்ஷவைச் செயலிழக்க வைத்ததோடு, பேரினவாதத்துக்கு ஒரு பேரிடியாகவும் அமைந்திருந்தது.

புதிய ஆட்சியாளரைப் பொறுத்தவரை, வடபகுதி மக்களின் மனிதாபிமான பிரச்னைகளை அணுகி, அவற்றைத் தீர்ப்பதில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்தவிதத்திலேயே, வடக்கே வலிகாமம் பகுதியில் இந்திய பிரதமர் மோடியின் விஜயமும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வடபகுதிக்கான பயணமும் அமைந்திருந்தன.


இருந்தபோதிலும், வலிகாமம் வடக்கு மக்கள் தமது பூர்வீக இடங்களில் தம்மை மீள் நிலைநிறுத்த மேலும் நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளதையே அங்கு காணப்படும் இடிபாடுகள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் பலதரப்பட்டவர்களாலும் மிக உன்னிப்பாக அவதானிக்கப்பபட்டதாக பிரதமர் மோடியின் இலங்கை விஜயம் அமைந்திருந்தது. இலங்கைப் பாராளுமன்றத்தில் ஜவஹர்லால் நேரு (1957), இந்திரா காந்தி (1973), மொரார்ஜி தேசாய் (1979) ஆகியோருக்குப் பின்னர் உரையாற்றிய நான்காவது இந்திய பிரதமராக மோடி சிறப்புப்பெற்றிருந்தார். மோடி தனது பாராளுமன்ற உரையின்போது, மகாகவி சுப்பிரமணிய பாரதியாரையும் குறிப்பிட்டு, அவர்பாடிய 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்...' என்ற பாடலை ஞாபகப்படுத்தியமை, இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களைவிட, பிராந்திய அரசியலின் உறுதிப்பாட்டில் இந்தியா மிகுந்த அவதானமாக இருப்பதை எடுத்துக்காட்டியிருந்தது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவையே அதிரவைக்கும் விதத்தில், சீனா இலங்கையில் தனது இருப்பை மிக ஆழமாகவே பதித்துவிட்டிருந்தது. எனவே, ராஜபக்ஷ அரசின் வீழ்ச்சி சீனாவின் வேதாளப் பிடியை இலங்கையில் சற்றுத் தளர்த்தியுள்ளதை அவதானிக்கமுடியும். சீன உதவியுடன் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட பிரமாண்டமான துறைமுக நகர நிர்மாண பணிகள் தற்சமயம் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மோடி பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று, வடக்கு - கிழக்கு பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென குறிப்பிட்டிருந்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சந்தித்தபோது, சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பொறுமை என்பவற்றைக் கையாண்டு, புதிய அரசுடன் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் அவர் கேட்டிருந்தார்.

இந்நிலையில், சிங்கள தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்ற பாரதியின் பாடல் வரிகளை பிரதமர் மோடி இலங்கைப் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டமை, இலங்கை - இந்திய உறவுப் பாலத்தை மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவும் இனங்களிடையே உறவுப்பாலமொன்றை அமைக்க வேண்டியதன் அவசியத்தையும் இடித்துரைப்பதாகவே அமைந்திருந்தது. ■


"Make Your Dream Home Come True"
RESIDENTIAL, COMMERCIAL
& INVESTMENTS
What is New in Real Estate Market?
Is this the the Best time to sell or Buy?
What is the Current Market Value of our Property?
What Should We Know about Investment and Commercial Properties?
Call Param G 1-416-230-1107
RIGHT AT HOME
REALTY INC. BROKERAGE
PARAM GNANASWARAN
REAL ESTATE BROKER
RIGHT AT HOME REALTY INC., BROKERAGE
HOME OFFICE:
401-7045 EDWARDS BLVD
MISSISSAUGA, ONT.L5S 1X2
PH# 905-565-9200
MAIN OFFICE:
202-895 DON MILLS ROAD
TORONTO, ONT.M3C 1W3
PH# 416-391-3232
Creaa Design

## இலங்கை தமிழர் பிரச்னையில்

# ஒரு நம்பிக்கை சமிக்ஞை

### மோதலுக்கு காரணங்களைத் தேடி, தமிழர்களின் அரசியல் நகர்வுகள் தவறாகிவிடக்கூடாது

ராஜாஜி

இலங்கையில் எழுபது ஆண்டுகாலமாக தீர்வின்றி தொடரும் அரசியல் நெருக்கடிக்கு ஒரு தீர்வைத் தரக்கூடிய காலம் தற்போது கனிந்திருப்பதாக பல்வேறு தரப்பிலிருந்தும் நம்பிக்கை வெளிப்படுகிறது.

தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதில் தொடர்ந்தும் தோல்வியையே காணும் இலங்கை ஆட்சியாளர்களின் மற்றொரு முகமாகவே புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழர்களில் ஒரு பகுதியினரால் சந்தேகக் கண்ணோடு நோக்கப்படுகிறார். அதேவேளை, இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கு தீர்வை வழங்கக்கூடிய மிக உகந்த சூழ்நிலையில் அதிகாரத்தை எட்டியிருப்பவராகவும் அவர் கருதப்படுகிறார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில், மாறுபட்ட கள நிலையில் புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவி ஏற்றுள்ளமை; தேர்தலில் வெற்றிகொள்வதற்காக ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் வேறுபாடுகளைக் களைந்து தமக்குள் பொது வேலைத் திட்டமொன்றை வகுத்துள்ளமை; இந்தக் கூட்டுக்குள் சில இனவாத கடும்போக்கு குழுக்களும் கைகோர்த்துக் கொண்டுள்ளமை; வெறுப்புக்குள்ளான ஆட்சியாளரை மாற்றியேதீர வேண்டும் என்று அணிசேர்ந்து கொண்ட பெரும்பான்மை மக்களின் எண்ணம் நிறைவேற சிறுபான்மை இனமும் தனது வாக்குப் பலத்தைச் சேர்த்து வெற்றியைத் தேடிக்கொடுத்தமை; இன்னும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மேற்குலக நாடுகள் சிறிசேன அரசுமீது காட்டும் மென்போக்கும், வழங்கும் ஆதரவும்போன்ற பல்வேறு வலுவான காரணிகள் இலங்கையின் அரசியல் கள நிலையில் மாறுபட்ட, முன்னொருபோதும் இல்லாத ஒரு புதிய சூழ்நிலையை தோற்றுவித்துள்ளன.

தமிழர் விவகாரத்தில் மிக உணர்வுபூர்வமான விடயங்களான காணாமல் போனவர்கள் தொடர்பான உண்மையான நிலைப்பாடு; விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசி



# இலங்கை அதிபரின் அறிவிப்புகள் அனைத்தும் ‘வெறும்’ வார்த்தைகள் என்பதைத் தாண்டி, செயல்களாக மாறுவதைக் காணவே பிரிட்டன் விரும்புகிறது

**- டேவிட் கமரோன்**



இல. 10, டவுணிங் தெரு. பிரிட்டிஷ் பிரதமரின் உத்தியோக வாசஸ்தலம் முன்பாக டேவிட் கமரோன், மைத்திரிபால சிறிசேன

யல் கைதிகள் விவகாரம்; பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பறிக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் நிலம் போன்ற விவகாரங்களில் புதிய அரசும் மௌனப்போக்கைக் கடைப்பிடித்து, முன்னைய அரசின் அணுகுமுறைகளையே பிரதிபலிக்கின்றது.


இதேவேளை, முன்னைய அரசாங்கத்தால் முற்றாக புறக்கணிக்கப்பட்டு வந்த பல அத்தியாவசிய கோரிக்கைகளை நிறைவேற்றியதன்மூலம் தமிழர்களை நோக்கிய நல்லெண்ண சமிக்ஞைகளை காண்பிக்கவும் புதிய அரசு தவறவில்லை.

வட மாகாண ஆளுநர் பொறுப்பிலிருந்து இராணுவ அதிகாரி அகற்றப்பட்டு பொது நிர்வாகி ஒருவர் நியமிக்கப்பட்டமையும், சிங்கள மொழியிலேயே நாட்டின் தேசிய கீதம் பாடப்படவேண்டும் என்ற முன்னைய அரசின் கடினமான நிலைப்பாட்டை தளர்த்தியிருப்பதையும் இதில் குறிப்பிடலாம்.

புதிய அரசாங்கத்தின் இவ்வாறான நகர்வுகளே, தமிழர்கள் விவகாரத்தில் நல்லெண்ண சமிக்ஞைகள் தென்படுவதாக பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரோன் கூறுவதற்கும் காரணமாக அமைந்திருக்கிறது எனவும் கருதமுடியும்.

பொதுத் தேர்தலைத் தொடர்ந்து, முதல் தடவையாக மேற்கு நாட்டுப் பயணம் மேற்கொண்டிருந்த புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரித்தானிய பயணமும் அவதானிகளால் உன்னிப்பாக நோக்கப்பட்டது. பொதுநல நாடுகள் தின வைபவத்தில் பங்கேற்க வந்திருந்தபோது மைத்திரிபால சிறிசேனவை தமது உத்தியோக வாசஸ்தலத்தில் வரவேற்று பேச்சு நடாத்திய டேவிட் கமரோன், இலங்கையின் புதிய அதிபர்மீது பிரிட்டன் நம்பிக்கை வைத்திருப்பதாக தெரிவித்தார். புதிய அதிபர் பதவியேற்ற ஒருசில வாரங்களில் தமிழர்கள் தொடர்பாக முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தமக்கு அந்த நம்பிக்கையை அளிப்பதாகவும் கூறினார்.

இலங்கையின் புனரமைப்பு தொடர்பான புதிய ஜனாதிபதியின் முன்முயற்சிகளை பிரித்தானியா ஆதரிப்பதாகவும் ஊழல் மோசடி ஒழிப்பு, பிளவுபட்ட இலங்கையை ஒன்றுபடுத்த முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் போன்றவற்றை வரவேற்பதாகவும் கூறிய டேவிட் கமரோன், இராணுவத்தின் பயன்பாட்டுக்காக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலத்தில் ஒருபகுதி தமிழர்களுக்கு திருப்பி வழங்கப்படுவது, பொது நிர்வாகத்திலிருந்து இராணுவ மயமாக்கலை அகற்றும் வகையில் ஆளுநர்களாகவிருந்த இராணுவ அதிகாரிகளுக்கு பதிலாக பொது நிர்வாகி




பொதுநல நாடுகள் தின வைபவத்தில் வெஸ்ற்மின்ஸ்ரர் அபே முன்பாக ஆர்ப்பாட்டம்

களை நியமித்திருப்பது, மீள்குடியேற்றத் துறைக்கு தமிழர் ஒருவரையே அமைச்சராக நியமித்திருப்பது, நாட்டின் நீதித் துறையின் உயர் பதவியான உயர் நீதிமன்ற நீதியரசராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது போன்ற நடவக்கைகளை இணைத்துப் பார்க்கும்போது, இலங்கை புதிய பாதையில் பயணிப்பதற்கான புதிய தொடக்கம் இவையென்று தாம் கருதுவதாகவும் கமரோன் தெரிவித்தார்.

இணக்கப்பாடு தொடர்பாக புதிய அதிபர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தேவையான ஒத்துழைப்பை பிரிட்டன் வழங்கும் என்றும் உறுதியளித்த டேவிட் கமரோன், மைத்திரிபால சிறிசேனவின் அறிவிப்புகள் அனைத்தும் 'வெறும்' வார்த்தைகள் என்பதையும் தாண்டி, செயல்களாக மாறுவதைக் காணவே பிரிட்டன் விரும்புகிறது என்றும் அழுத்தமாக குறிப்பிட்டிருந்தமை உற்று நோக்கப்படவேண்டிய ஒன்று.

இன்னொரு வகையில் கூறுவதானால், புதிய அரசு தமிழர் விடயத்தில் நேர்மையாக நடந்துகொள்ளுமா என்ற சந்தேகம் நிலவுவதை பிரிட்டன் உணர்வதாகவும், அதனை நிவர்த்தி செய்யும் வகையில் புதிய அதிபர் நடந்துகொள்ளவேண்டும் என்ற அறிவுரையாகவும் இதனைக் கொள்ளமுடியும்.

இன்னும், மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரிட்டனின் மிகத்தெளிவான நிலைப்பாடும் இங்கு அவதானிக்கத்தக்கது. இலங்கையின் போர்க் குற்றங்கள் உள்பட, ஏனைய மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை ஏற்கவைப்பதிலும், மனித உரிமைகள் தகுந்த முறையில் நிலைநாட்டப்பட்டு மேம்படுத்தப்படவேண்டும் என்பதிலும் பிரிட்டன் மிகவும் உறுதியாக இருப்பதாக அண்மையில் எழுதிய கட்டுரை ஒன்றில் டேவிட் கமரோன் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை திட்டமிட்டபடி மார்ச் மாதம் வெளியிடப்படாமையினால் தமிழர்களுக்கு ஏற்படும் ஏமாற்ற உணர்வை ஏற்றுக்கொள்வதாகவும் அதில் சுட்டிக்காட்டியிருந்த கமரோன் அதேவேளை, இந்த அறிக்கை வெளியிடப்படுவதற்கான கால அவகாசம் செப்ரெம்பர்வரை ஒத்திப்போடப்படிருப்பதன் விளைவாக இலங்கையின் புதிய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையைத் திருப்திசெய்யும் வகையில் நடந்துகொள்ளவும், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மாறுதல்களை வெளிப்படுத்த இலங்கை அரசுக்கு வாய்ப்பு கிட்டியிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.



ஆர்ப்பாட்டகாரர்களுக்கு கையசைத்து
மைத்திரிபால சிறிசேன

இதனால், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையின் விளைவாக புதிய அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிடும் நல்லெண்ண நகர்வுகள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்று மேற்குலகத்தின் முன்னெச்சரிக்கை நகர்வும் புலப்படுவதை அவதானிக்கலாம்.

மனித உரிமை மீறல்கள் விவகாரத்திலும் போர்க்குற்ற விசாரணைகள் நடைமுறையிலும் ஐக்கிய நாடுகள் சபை இவ்வாறு வேறு நாடுகளுக்கும் கால அவகாசம் வழங்கியிருக்கிறது. இன்னும், மனித உரிமை மீறல்கள் அறிக்கை போர்க்குற்ற விசாரணைக்கு பரிந்துரை வழங்கினாலும், போர்க்குற்ற விசாரணை ஆரம்பிக்கப்படுவதற்கு தனியான நடைமுறைகள் உள்ளன என்பதும் உடனடியாக அது தொடரப்படுவதில்லை என்பதும் அவதானத்துக்குரியது.

இங்குதான் பிரித்தானிய பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான லண்டனில் சில தமிழர்களால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் குறித்து கவனம் கொள்ளவேண்டியுள்ளது. தமிழர் நெருக்கடிக்கு ஒரு தீர்வை முன்வைக்கக்கூடிய பொருத்தமான ஒரு தருணத்தில் இலங்கையின் புதிய ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் முன்னெடுப்பது இந்த வேளையில் பொருத்தமானதா என்பதும் ஆய்வுக்கானது.

புலம்பெயர் தமிழ்க் குழுக்கள் முன்னைய காலங்களில் நடாத்திய ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டது போன்று மக்கள் பெரும் எண்ணிக்கையில் காணப்படாவிட்டாலும் ஒரு நூறுபேர், பதாகைகளுடன் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் காணப்பட்டனர். இவர்களில் பலர் இன்னமும் புகலிடக் கோரிக்கை அங்கீகரிக்கப்படாமல், நாட்டின் புதிய அரசியல் சூழ்நிலை காரணமாக அவை நிராகரிக்கப்படலாம் என்ற சந்தேகத்தில் உள்ளவர்கள் என்றும் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தமது அகதி கோரிக்கைக்கு வலுசேர்க்கும் வகையில் புதிய ஆதாரங்களை ஏற்படுத்தவே இவ்வாறான நிகழ்வுகளில் பங்கேற்பதாக அவதானி ஒருவர் குறிப்பிடுகிறார்.

எது எவ்வாறிருப்பினும், போராட்டங்களினாலும் தொடர் அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டு மோதல்கள் மற்றும் கோர யுத்தத்தின் அழிவுகளில் இன்னமும் மீண்டுகொள்ளவேண்டிய இனத்தின் நெருக்கடியான நிலையை தெரிந்துகொண்டும், இலங்கை அரசாங்கத்துடனும் அதன் தலைமையுடனும் மட்டுமன்றி, இந்தியா மற்றும் மேற்கு நாடுகளுடனும், இன்னும் ஐக்

கிய நாடுகள் சபையுடனும்கூட மோதல் போக்கைத் தொடர்வதற்கு காரணங்களைத் தேடி, போராட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடும் அரசியல் அநுபவமும் விவேகமும் அற்ற புலம்பெயர் குழுக்களின் தலைவர்களினால் தமிழ் மக்கள் மீண்டும் தவறாக வழிநடாத்தப்படும் அபாயம் காணப்படுகிறது.

மறுபுறத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அமெரிக்காவுக்கும் எதிராக நடாத்தப்படும் ஆர்ப்பாட்டங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவர்களின் உருவப்படங்கள் எரிக்கப்படுவதற்கு என்ன காரணம் என்பது கேள்வி எழுப்புவதற்குரியது.

அண்மைக் காலமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் விமர்சனங்கள் புலம்பெயர் நாடுகளில் இயங்கும் தமிழர் அமைப்புக்களிடமிருந்து எழுந்தவண்ணம் உள்ளன. குறிப்பாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோருக்கு எதிரான விமர்சனங்கள் தீவிரமடைந்திருக்கின்றன.

லண்டனிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போதும் இவ்விரு தலைவர்களின் உருவப்படங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களினால் எரிக்கப்படிருந்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை அறிக்கை வெளியிடுவது ஒத்திவைக்கப்பட்டமைக்கு சாதகமான காரணங்கள் உள்ளன என்று சுமந்திரன் தெரிவித்திருந்ததையும், இலங்கையின் சுதந்திரதின கொண்டாட்டங்களில் அவரும், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் கலந்துகொண்டமையையும் கூறி, புலம்பெயர் தமிழ் மக்களை இவர்களுக்கு எதிராக தூண்டிவிடும் நடவடிக்கைகளும் தொடரப்பட்டன.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கை வெளியிடுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு இலங்கையிலும் பிரிட்டனிலும் நடத்தப்பட்ட போராட்டங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் சுமந்திரனுக்கு எதிரான போராட்டமாகவே காணப்பட்டன. புலம்பெயர் தமிழர்கள் சிலர் இவர்களின் படங்களின் மீது ஏறிநின்று கால்களால் மிதித்த சம்பவங்களை அவதானிகள் நாகரீகமற்ற, கவலைக்குரிய செயல்களாகவே நோக்குகிறார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமைப் பதவியை சம்பந்தனிடமிருந்து தட்டிக்கொள்வதிலும் தனது ஆளுமை காரணமாக வளர்ந்துவரும் சுமந்திரனை அரசியலிலிருந்து அகற்றும் சூழ்ச்சி நடவடிக்கையாகவும் இந்த போராட்டங்கள் அவதானிக்கப்படுகின்றன. மிகவும் அண்மைக் காலத்திலேயே அரசியலில் பிரவேசித்த சுமந்திரன் தேசிய மட்டத்தில் தென்னிலங்கை அரசியல்வாதிகளினாலும் அதேவேளை, சர்வதேச தலைவர்களாலும் பரவலாக அங்கீகரிக்கப்படுகிறார்.

தமிழ் அரசியல் விவகாரங்களில் ஆக்கபூர்வமான பணியை ஆற்றிவரும் இவர் ராஜதந்தர சிந்தையும் வாதிடும் திறமையும்கொண்ட இளம் தலைவராக மாறிவருவதே அவருக்கு எதிரான செயல்பாடுகளுக்கு காரணம் என்றும் சிலர் கருதுகிறார்கள்.

ஆரம்பால தமிழ்த் தலைவர்கள் போலவே யாழ்ப்பாணத்தில் பிறந்து, கொழும்பில் படித்து சட்ட அறிஞராக தொழில்புரியும் சுமந்திரன், தமிழ் தேசிய கூட்டமைப்பில் இணைந்து செயலாற்றுமாறு அழைக்கப்படும் வரையில் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் எந்த அரசியல் ஈடுபாட்டையும் கொண்டிருக்கவில்லை. அரசியலுக்கு வருவதற்கு முன்னர் விடுதலைப் புலிகளுடனோ அல்லது ஏனைய போராளிக் குழுக்களுடனோ எதுவித தொடர்பும் கொண்டிருந்திருக்கவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனால் இனங்காணப்பட்டு, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட அவருக்கு எதிர்வரும் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் தொகுதி ஒதுக்கப்பட இருப்பதுவே அவருக்கு எதிராக போராட்டம் முன்னெடுக்கப்படுவதற்கு முக்கியமான காரணமென கருதப்படுகிறது.

பாராளுமன்ற பொதுத் தேர்தல் நெருங்கும் வேளையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் எதிராகவும் போராட்டம் முன்னெடுக்கப்படுவதால் இதில் தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சார்ந்த ஒருசாராரின் பின்புலமே இதற்குக் காரணம் என்ற சந்தேகம் பரவலாகவே வலுவாக எழுந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் அரசியல் நடாத்துபவர்களுக்கு அடுத்த தேர்தலில் காத்திருக்கும் புதிய நெருக்கடியும் இதில் காரணமாகிறது. புதிய தேர்தல் ஒழுங்கு முறையின்கீழ் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதிலிருந்து ஏழாக குறைவடைய உள்ளது. யாழ் மாவட்டத்திலிருந்த மக்கள் போர் இடப்பெயர்ச்சி, மற்றும் வெளிநாட்டு குடிப்பெயர்வு காரணமாக குறைவடைந்ததால் ஏற்பட்ட பிரதிநிதித்துவ குறைபாட்டினால் தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் காங்கிரஸ், தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றுக்கு இடையே நிலவும் கடும் போட்டிகளின் வெளிப்பாடே சம்பந்தன், சுமந்திரனுக்கு எதிரான கடும் தாக்குதல் போராட்டமாக உள்ளது.

இங்கும் வரலாறு திரும்புவதையே அவதானிக்கமுடிகிறது.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் 70 ஆண்டு காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்கள் வஞ்சிக்கப்பட்டு தென்னிலங்கை ஆட்சியாளர்களினால் ஏமாற்றப்பட்டது எவ்வளவு தூரம் உண்மையோ அதேபோன்று, பதவிகளை தக்கவைப்பதற்கும் தேர்தலை வெற்றிகொள்வதற்கும் உணர்ச்சிகர அரசியலை கையிலெடுத்து அவதூறுகளைப் பரப்பி துரோகி பட்டங்களை வழங்கி இனத்தின் வளமான எதிர்காலம் சொந்த தலைமைகளாலும் தமிழ் அரசில்வாதிகளாலும் பாழடிக்கப்பபட்டது என்பதும் உண்மையே.

அந்தவகையிலேயே தற்போது புலம்பெயர் சமூகமும் வழிநடத்தப்படுவது துர்ப்பாக்கியமானது.

தமிழ் தேசிய விடுதலைக்கான அமைப்புகளில் ஒன்றாக அறியப்பட்ட உலக தமிழர் பேரவைகூட தற்போதைய அரசியல் சூழ்நிலையின் மென்தன்மையை அநுசரித்து இலங்கையின் புதிய அரசின் நடவடிக்கைக்கு கால அவகாசம் அவசியம் என்று சாதுர்யமாக கருத்து வெளியிட்டிருக்கும் நிலையில் ஒருசில குழுக்கள் மட்டும் சில நடவடிக்கையில் ஈடுபடுவது புதிரானது.

இலங்கைத் தமிழினத்துக்கு காலம் பதில் சொல்ல தயாராகும் ஒரு வேளையில் தமிழ் மக்களின் நகர்வுகள் தவறாகி விடக்கூடாது என்பதே அவதானிகள் கொள்ளும் ஆதங்கம். ■


TIME TRAVEL
Call us now for the best rates to
SRI LANKA, MALDIVES, DUBAI, MALAYSIA, INDIA & MANY MORE..
BEST PRICE GUARANTEE
Your number 1 choice worldwide air travel at UNBEATABLE PRICES
SriLankan Airlines
الطيران العماني OMAN AIR
الاتحاد ETIHAD AIRWAYS
QATAR AIRWAYS القطرية
JET AIRWAYS
IATA
ATOL PROTECTED
Visit us or call us at
020 8429 8333
www.timetraveluk.com
RAYNERS LANE
432 Alexander avenue
Harrow, Middlesex
HA2 9TW
KINGSBURY
530A Kingsbury road
London
NW9 9HE



# மோடி ஆட்சியில் இந்துத்துவ ஆதிக்கம்?


**தன்னுடைய இந்து அடையாளத்தை மோடி காண்பிப்பது குற்றமும் தந்தரமுமாகிறது. இப்படி, இதனை வெளிப்படையாக காண்பிப்பது செல்வாக்குக்கும் வெற்றிக்குமானதென்பதை அவர் நன்கு அறிவார். ஆனால், அது தேர்தலுக்கு முன்பான நிலை. இப்போது, அவர் ஆளவேண்டும்; சாதிக்கவேண்டும்**

**ஆர். மணி**

இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சி (பா. ஜ. க.) அல்லது தேசிய ஜனநாயக கூட்டணி (தே. ஜ. கூ.) அரசு ஆட்சிக்கு வந்ததும் தமது திட்டங்களை வலியுறுத்தி இந்துத்துவ குழுக்களின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. ராஷ்ட்ரிய ஸ்வம்ய சேவா சங் (ஆர். எஸ். எஸ்.), விஸ்வ ஹிந்து பரிசத் அல்லது பஜ்ராங் தள் அல்லது எந்த இந்துத்துவ குழுவாகவிருந்தாலும் அவற்றின் நிகழ்ச்சிநிரல் ஒன்றே. அதாவது, சமூகத்தில் விசேடமாக, சிறுபான்மையினரிடையே பதட்டத்தைத் தோற்றுவிப்பது மாத்திரமல்ல, அரசுக்குள்ளேயும் குழப்பங்களை உருவாக்கி, அதன்மூலம் பிரதமர் நரேந்திர மோடிமீது ஆத்திரத்தைக் கிளப்புவது.

ஆர். எஸ். எஸ். தலைவர் மோகன் பஹ்வத் அண்மையில் தெரிவித்த கீர்த்தி அல்லது அபகீர்த்திமிக்க வார்த்தைகள் இந்தவிதத்தில் மிக அண்மைச் சம்பவம். பெப்ரவரி இறுதியில் வட இந்தியாவில் வைபவம் ஒன்றில் பேசுகையில், பஹ்வத் அன்னை தெரேசாவைப் பற்றி இப்படிச் சொன்னார்: "தெரேசா வறியவர்களுக்கும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சேவைசெய்தார். ஆனால், அவரது செயல்களில் ஓர் உள்நோக்கம் இருந்தது; அது, மதமாற்றம்.'' இது, அநேகமாக அனைத்து அரசியல் கட்சிகளிடையேயும், கிறீஸ்தவ சமூகத்திலும் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. பாராளுமன்றம் ஸ்தம்பிதமடைந்தது; ஆனாலும், வழக்கம்போலவே பிரதமர் நரேந்திர மோடியிடமிருந்து எந்தவித பதிலும் இல்லை. ஒரு கூட்டத்தில் விளக்கமளிக்கவேண்டிய ஒரு நிலைக்கு பா. ஜ. க. தள்ளப்பட்டது. மத்திய அமைச்சரவையின் இரண்டு முஸ்லிம்களில் ஒருவரான முக்தார் அபாஸ் நக்வி, அன்னைமீது அரசாங்கம் உண்மையிலேயே பெருமதிப்பைக்கொண்டிருக்கிறது என்று ராஜ்ய சபாவில் தெரிவித்தார். ஆனால், இது எதிர்க் கட்சியினரையும் கிறீஸ்தவ சமூகத்தையும் திருப்திப்படுத்திவிடவில்லை.

2014 மேயில் மோடி ஆட்சிக்கு வந்ததிலிருந்து, பல்வேறு இந்துத்துவ குழுக்களும் மேற்கொள்ளும் செயல்களில் ஒரு வகைமுறை இருக்கிறது. "பஹ்வத்தின் பேச்சு உண்மையில் இந்த முறையி




லேயே அமைகிறது. இந்தியாவில் மாத்திரமன்றி முழு உலகிலுமே வணக்கத்தோடு பெரிதும் மதிக்கப்படும் அன்னை தெரேசாவைப்பற்றி பஹ்வத் பேசியிருக்கிறார். மனித குலத்துக்கு அன்னை தெரேசா ஆற்றிய கருணை மிக்க சேவை எல்லோரும் அறிந்ததே. ஆனால், சமூக உணர்ச்சிகளை மேலும் தூண்டிவிடும் விதத்தில் சங் பரிவார் மூளையைக் குழுப்ப முயல்கிறது.'' - கடந்த பல வருடங்களாக இந்தியாவில் சங் நடவடிக்கைகளை மிகுந்த கரிசனையுடன் அவதானித்துவரும் ஒரு சிரேஷ்ட பத்திரிகை யாளரான பி. லக்ஷ்மன் கூறுகிறார். ஆனால், பஹ்வத்தைப் பகிரங்கமாகவே ஆதரிக்கும் பா. ஜ. க. தலைவர்கள் இருக்கிறார்கள். "பஹ்வத் கூறியதில் எதுவும் தவறில்லை. உண்மையில், அன்னை தெரேசாவை மேற்கோள் காட்டி அவரின் சுயசரிதையாளர்களே இதனைக் கூறியிருக்கிறார்கள்.'' - பா. ஜ. க.வின் பெண் எம். பி. யான மீனாட்சி லேகி கூறுகிறார். இனக் கலவரங்களைத் தூண்டுவதில் பிரசித்தமான பா. ஜ. க. வின் சகாவும் மகாராஷ்டிர அரசியல் கட்சியுமான சிவசேனா, பஹ்வத் கூறியவற்றை வெளிப்படையாகவே ஆதரிக்கிறது. பஹ்வத் கூறியதில் எந்தத் தவறும் இல்லை என இது கூறுகிறது.

ஜனவரி மாத இறுதியில் அதிபர் பராக் ஒபாமா இந்தியாவுக்கு விஜயம் செய்தவேளை, மோடி அரசுக்கு ஓர் ஆலோசனை தெரிவித்திருந்தார். மத சமரசத்தின் செழிப்பில்தான் இந்தியா அது கொண்டுள்ள உண்மையான வளங்களின் சாதனையை வெல்லமுடியும் என்று அவர் கூறியிருந்தார். அவ்வேளையில், இந்தியாவின் உள்விவகாரங்களில் ஒபாமா மூக்கை நுழைப்பதாக சங் குழுக்களிடமிருந்தும், பக்க சார்பற்ற அவதானிகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சிலரிடமிருந்தும் சில எதிர்ப்புகள் எழுந்தன. ஒபாமா இதனைக் கூறியவேளையில் பூனாவில் நடைபெற்ற விஸ்வ ஹிந்து பரிசத் கூட்டமொன்றில் அதன் தலைவர் பிரவீன் தொகாடியா பேசுகையில், இந்தியா தன்னை ஓர் இந்து ராஜ்யமாக பிரகடனப்படுத்தினால் மட்டுமே அது சுபீட்சத்துடனான ஓர் உலக வல்லரசாக மாறமுடியும் என்று பகிரங்கமாக கூறினார். வழக்கம்போலவே எதிர்க் கட்சிகள் பா. ஜ. க. வையும் சங் பரிவாரையும் சாடினாலும், அதில் ஆளும் நிர்வாகம் பெரும் அக்கறை கொள்ளவில்லை.

மோடி பதவியேற்றதிலிருந்து, இனக் கிளர்ச்சிகளை உருவாக்கும் நோக்குடன் சங் அமைப்புகள் பல இடங்களில் பேசியிருக்கின்றன. இக் குழுவைச் சார்ந்த இந்து மகாசபை, மகாத்மா காந்தியைக் கொலைசெய்த நாதுராம் கோட்சேக்கு நாடு முழுவதிலும் சிலைகள் எழுப்பப்படவேண்டும் என்று கூறுகிறது. வழக்கம்போலவே மோடி இதற்கும் பிரதிபலிப்பு எதனையும் வெளிப்படுத்தவில்லை. உண்மையில், இந்து மகாசபை உத்தர பிரதேச மாநிலத்தின் மீரூற்றில் கோட்சேக்கு சிலை ஒன்றை நிறுவ முயற்சித்தது; ஆனால், உரிய நேரத்தில் உள்ளூர் நிர்வாகமும் பொலீசும் சரியானவிதத்தில் அதனை முறியடித்தன.

ஆனால், சங்கின் மிகவும் குழப்ப

மான நடவடிக்கை, அது ஆரம்பித்துள்ள 'கார் வாப்சி'. 'கார் வாப்சி' என்பது, தாய் மதத்துக்கு அதாவது, இந்து மதத்துக்கு மீளவும் மாறுதல்; இந்தியா முற்றிலும் ஓர் இந்து தேசமாகவேண்டும்; ஆகவே, பிற மதங்களுக்கு, குறிப்பாக இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களுக்கு மாற்றப்பட்டவர்கள் மீண்டும் கட்டாயமாக இந்து மதத்துக்கு கொணரப்பட வேண்டும் என்று விஸ்வ ஹிந்து பரிசத், பஜ்ராங் தள் முதலிய இந்து அமைப்புகள் பகிரங்கமாக கூறுகின்றன. இவை, பிற மத மக்களை ஒருங்கிணைத்து, 'கார் வாப்சி'க்கான வைபவங்களை ஒழுங்குசெய்கின்றன. உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார் ஆகியவை இவர்களின் பிரதான இலக்குகள். இம் மூன்று மாநிலங்களும் நாட்டின் ஹிந்தி மண்ணாக அழைக்கப்படுபவை; உண்மையில், இந்திய மக்கள் தொகையில் கணிசமான அளவினர் இங்கு வாழ்கின்றனர்.



'கார் வாப்சி' வைபவமொன்று

'கார் வாப்சி'க்கு சென்று, இந்து மதத்துக்கு திரும்பியவர்களை செய்தியாளர்கள் தொடர்புகொண்டபோது, இந்து மதத்துக்கு மீண்டும் திரும்புவதற்காக பங்கீட்டு அட்டைகள், அரசாங்க உத்தியோகங்கள், பணம் முதலிய ஊக்குவிப்புகள் தமக்கு வழங்கப்பட்டதாக இவர்களில் பலர் தெரிவித்திருக்கிறார்கள். சென்னையிலும்கூட இந்து மக்கள் கட்சி என்ற ஒரு சிறு இந்து அமைப்பு, 'கார் வாப்சி'க்காக ஒரு சிறு வைபவத்தை ஏற்பாடுசெய்து நடாத்தியது. இதன் தலைவர்களை பொலீசார் தடுத்துவைத்தாலும், இக் குழுக்களின் தொண்டர்கள் வறிய கிறிஸ்தவ குடும்பத்தவர்கள் பத்துப்பேரையாவது இந்து மதத்துக்கு மாற்றுவதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இந்து மதத்துக்கு மீண்டும் மாறிய இவர்கள், சில வருடங்களுக்கு முன்னர் ஒரு கிறிஸ்தவ குழு தமக்கு பணம் கொடுத்து தங்கள் மதத்தில் இணைத்துக்கொண்டார்கள் என்று கூறுகிறார்கள்.

இந்த விவகாரம் இந்திய பாராளுமன்றத்தை சுமார் ஒரு வாரகாலம் அதிரவைத்தாலும், பிரதமர் சலனமின்றி அமைதியாகவே இருந்துவிட்டார். ஒரு வார்த்தை அவர் பேசவில்லை. அமைதியாக சபை நிகழ்ச்சிகளை அவதானித்துவிட்டு, சில நிமிடங்களின் பின்னர் அவர் சபையிலிருந்து வெளியேறிவிட்டார். இதுதொடர்பில் பேசுமாறு எதிர்க்கட்சிகள் விடுத்த தொடர் வற்புறுத்தல் எவ்வித பயனும் அளிக்கவில்லை. பாராளுமன்றத்தின் குளிர் கால அமர்வு முழுவதும் இப்படி அடித்துச்செல்லப்பட்டது.

அவதானிகள் ஒருபிரிவினர், மோடி இதனை உண்மையிலேயே அநுமதிக்கிறார் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். "இது, ஆளும் பா. ஜ. க. வினதும் மோடியினதும் திட்டமிட்ட செயல். தமது தேர்தல் வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்ற முடியவில்லை என்று, மக்களின் கவனத்தை திசைதிருப்பும் விதத்தில் திட்டமிட்டு இத்தகையவற்றை அநுமதிக்கிறார்கள். சில பா. ஜ. க. எம். பி. க்களோ அல்லது சங் அங்கத்தவர் ஒருவரோ எங்கோ ஏதாவது 'உளறிவிட்டால்' எதிர்க்கட்சிகள் அனைத்தும் அதில் நின்று கூத்தடித்து அரசை வற்புறுத்தித் தூண்டுகின்றன. இது உண்மையில், முக்கியமான பல கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய அதன் கடமையிலிருந்து அரசாங்கம் தப்பித்துக்கொள்வதற்கே அதற்கு உதவியாகிறது. ஆம், ஒருவிதத்தில் அரசாங்கத்தின் பொறியில் எதிர்க்கட்சியினர் சிக்கிவிடுகிறார்கள்'' - என்கிறார், சென்னையை மையமாகக் கொண்ட பத்திரிகையாளரும் அரசியல் அவதானியுமான சி. ஜேம்ஸ்.

சில அரசியல் நிபுணர்களிடையே மற்றொருவித பார்வையும் உண்டு. சங்கின் ஒரு பிரிவு மோடியைத் தொடர்ந்து அவதானித்து, அவரின் தேர்தல் வாக்குறுதிகள் எதனையும் செய்யவிடாமல் பார்த்துக்கொள்ள விரும்புகிறது. "விஸ்வ ஹிந்து பரிசத் தலைவர் பிரவீன் தொகாடியா மோடியின் பரம எதிரி. இருவரும் நல்ல நண்பர்களாகவிருந்து குஜராத்தில் பா. ஜ. க. வின் வளர்ச்சிக்கு மூலகாரணமாக இருந்தவர்கள். ஆனால், மோடி குஜராத்தின் முதலமைச்சரானதும் இருவரும் பிரிந்தார்கள். இப்போது, இவர்கள் இருவரும் நேருக்குநேர் சந்திப்பதில்லை. மோடியின் சாதனைகளை மறைக்க தொகாடியா எதனையுமே செய்வார். தொகாடியாவின் நடவடிக்கைகளில் இப்போது இதனைப் பார்க்கமுடியும். ஆர். எஸ். எஸ்ஸிலும் ஒரு பிரிவினருக்கு மோடிமீது அவ்வளவு விருப்பில்லை. அவர்களும் தொகாடியா போன்றவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டுகின்றனர்'' என்று, நீண்டகாலம் குஜராத்தில் வாழ்ந்து குஜராத் அரசியலில் நிபுணத்துவம் பெற்றவ



**'கார் வாப்சி' என்பது, தாய் மதத்துக்கு அதாவது, இந்து மதத்துக்கு மீளவும் மாறுதல். இந்தியா முற்றிலும் ஓர் இந்து தேசமாகவேண்டும்; ஆகவே, பிற மதங்களுக்கு, குறிப்பாக இஸ்லாம், கிறீஸ்தவ மதங்களுக்கு மாற்றப்பட்டவர்கள் மீண்டும் கட்டாயமாக இந்து மதத்துக்கு கொணரப்படவேண்டும்**

ரான சிரேஷ்ட பத்திரிகையாளர் கே. பி. ராஜீவ் கூறுகிறார்.


இன்று, அவதானிகளும் அரசியல் நிபுணர்களும் பலர் சிந்திக்கும் பிரதான கேள்வி, இந்த சக்திகளை மோடியால் எப்போதாவது வென்றுவிட முடியுமா? என்பதே. "தன்னுடைய இந்து அடையாளத்தை மோடி காண்பிப்பது குற்றமும் தந்தரமுமாகிறது. இப்படி, இதனை வெளிப்படையாக காண்பிப்பது செல்வாக்குக்கும் வெற்றிக்குமானதென்பதை அவர் நன்கு அறிவார். ஆனால், அது தேர்தலுக்கு முன்பான நிலை. இப்போது, அவர் ஆளவேண்டும்; சாதிக்கவேண்டும்.'' - அரசியல் விஞ்ஞான ஆராய்ச்சி அறிஞரான ஏ. சுப்புராஜ் கூறுகிறார்.

தனது முதலாவது சுதந்திர தின உரையில், எல்லா சர்ச்சைக்குரிய விவகாரங்களிலும் ஒரு பத்து ஆண்டுகால ஒத்திவைப்பு தேவை என்று மோடி குறிப்பிட்டார். இதன் பொருள், இப்போது எழுப்புவதுபோன்ற இவ்விடயங்களைப்பற்றி சங் பரிவார் பேசக்கூடாது என்பதே. ஆனால், சில நாள்களிலேயே மோடியின் குடும்ப அங்கத்தவர்கள் (சங்கைச் சேர்ந்தவர்கள்) தமது தாக்குதலைப் பலமாகவே தொடங்கினார்கள். இன்று மோடி, மகாபாரதத்தின் புகழ்பெற்ற பாத்திரமான திருதராஷ்டிரனைப்போலாகிறார். நடப்பவை அனைத்தையும் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆனால், புதுடில்லியில் கிறீஸ்தவ தேவாலயங்கள் தொடர்ந்து தாக்கப்பட்டபோது அவரிடமிருந்து சில வார்த்தைகள் வெளிப்பட்டன. புதுடில்லியில் வைபவமொன்றில் பேசுகையில், தங்கள் மதத்தைப் பேணவிரும்பும் ஒவ்வொருவருக்கும் தனது அரசாங்கம் முழு பாதுகாப்பையும் உறுதிசெய்யும் என்று அவர் கூறியிருந்தார்.

கிறீஸ்தவ சமூகம் இதில் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தாலும், இந்தியாவில் இன்று சிறுபான்மை இனத்தவரிடையேயும், அமைதியை விரும்பும் மக்களிடையேயும் ஓர் அச்சமும் நம்பிக்கையீனமுமே நிலவுகிறது. அடல் பிஹாரி வாஜ்பாய் போன்றவரல்ல மோடி என்ற எண்ணம் அவதானிகள் பலரிடம் நிலவுகிறது. "மோடி நிச்சயமாக வாஜ்பாய் அல்ல." பா. ஜ. க. வின் முதல் பிரதமர் வாஜ்பாய் அரவணைத்துச் செல்லும் போக்குடையவர்; எல்லோருக்கும் இடமளித்தார். ஆனால், மோடி இன்னமும் சங் பரிவார் மனிதராகவே தெரிகிறார்'' என்கிறார், பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான லக்ஷ்மி முருகன்.

ஆனால், வேறுசிலர், மோடி புத்திசாலித்தனமான அரசியல்வாதி; அனைத்தையும் நன்கே புரிந்துகொள்வார் என்கிறார்கள். "ஆம், மோடி மிகவும் புத்திசாலி. வாஜ்பாய் மிதவாதியாக விருந்து பெரும் லாபதெனையும் ஈட்டவில்லை. அவர் தோற்கடிக்கப்பட்டார். ஆனால், மோடி தனது கடும்போக்கு அரசியலில் லாபத்தைப் பெறுகிறார். வாழ்வின் வெற்றியைப்போல வெற்றி வேறெதுவுமில்லை; இந்திய அரசியலில் மற்றெல்லோரையும்விட மோடி இதனை நன்கே தெரிந்தவர்.'' - சென்னையைச் சேர்ந்த பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகருமான பி. ஜனக் பாபு கூறுகிறார்.

விமர்சனங்கள் எப்படியெனினும், இந்திய அரசியலில் இன்று மோடி வெல்லவியலாத ஒரு மன்னர். அடுத்த நாலரை ஆண்டுகள் இந்தியாவை அவர் ஆள்வார். இடதுசாரிக் கட்சிகளும் மதசார்பற்ற சக்திகளும் இந்திய அரசியலில் ஓரங்கட்டப்பட்ட ஒருநிலையில் மோடி இந்தியாவின் பிரதமரானார். மதசார்பற்ற சக்திகளும் ஜனநாயக சக்திகளும் சங் பரிவாரின் முறையற்ற போக்குகளை எதிர்த்துப் போராட ஒன்றிணைந்தாலன்றி, அடுத்துவரும் மாதங்கள், வருடங்களில் நிலைமைகள் மோசமடையலாம். மோடி பிரதமர்; நிச்சயமாக இந்தியாவின் 120 கோடிக்கும் அதிகமான மக்கள் ஒவ்வொருவருக்கும் பிரதமர். ஆனால், அவர் அவரது கடந்த காலங்களின் கைதியாக இருக்கும்வரை எதுவுமே நிகழ வாய்ப்புண்டு; எதிர்காலத்தை எவருமே எதிர்வுகூறமுடியாது.



## இஸ்லாமிய இராச்சியம்:

# முறியடிக்கப்படுமா அல்லது விஸ்வரூபம் எடுக்குமா?

**உலகெங்கிலுமிருந்து இளம் இஸ்லாமிய சமூகத்தை கவர்ந்திழுப்பதில் வெற்றியும்கண்டிருப்பதால் உலக நாடுகள் தடுமாறிப்போயுள்ளன**

**ஸ்ரீதரன்**

மத்திய கிழக்கின் ஜோர்டான், லெபனான் நாடுகளின் எல்லைகளை உடைத்தெறிந்து பாலஸ்தினத்தை விடுவிப்பதுவே அடுத்த இலக்கு என்றுகூறி, செயலில் இறங்கியிருக்கும் ஐ. எஸ். அல்லது இஸ்லாமிய இராச்சியத்தின் நகர்வுகள் அமெரிக்காவை தனது பரம வைரிகளான தலிபான்களுடனும் அல் கைடாவுடனும் கைகோர்க்கும் நிலைக்கு தள்ளியிருக்கிறது.

சிரியாவில் பஷர் அல்-அஸாத்தின் ஆட்சியை அகற்றுவதற்கு கடுமையாக போராடிவரும் அமெரிக்காஅதனை தளர்த்திவிட்டு, அவருக் கும் நேசக்கரம் நீட்டுவதற்கு இறங்கிவந்திருப்பது இஸ்லாமிய இராச்சியத்தின் அற்புதமான வளர்ச்சியையும் அதன் வியூகங்கள் குறித்து அமெரிக்கா கொண்டிருக்கும் அச்சத்தையுமே காண்பிக்கிறது.

ஐ. எஸ். அமைப்பினால் பாரிய சவாலை எதிர்கொள்வதை உணர்ந்து அதற்கேற்ப செயல்படத் தொடங்கியிருக்கும் அமெரிக்கா, அதனை முறியடிப்பதற்கு தமது முன்னைய வைரிகளான தலிபான்கள், அல்-கைடா போன்ற இஸ்லாமிய இயக்கத்தினரின் உதவியை நாடுவதிலேயே கவனம் செலுத்துகிறது.

தலிபான்களிலும் அல்-கைடா அமைப்பிலும் காணப்படும் குழுக்களில் ஒரு பகுதியினரை வளைத்துக் கொள்வது அவசியம் என்று அமெரிக்காவின் தேசிய புலனாய்வு அமைப்பின் இயக்குநர் ஜேம்ஸ் குளோபர் குறிப்பிடுவதன்மூலம், உலக அரசியல் அவதானிகள் மட்டத்தில் எழுந்திருக்கும் மேற்படி சந்தேகம் தற்போது உறுதியாகியிருக்கிறது.

ஏற்கனவே சிரியாவில் இயங்கும் ஹம்ஸ் அமைப்புக்கு அனைத்து உதவிகளை தாராளமாக வழங்கியும் ஐ. எஸ்.



என்கிற இஸ்லாமிய இராச்சிய அமைப்பை அந்த இயக்கத்தால் வெற்றிகொள்ள முடியவில்லை என்று விசனமடைந்திருக்கும் அமெரிக்கா, தற்போது ஐ. எஸ்ஸுக்கு எதிராக பல்வேறுவகையான வியூகங்களை வகுத்துவருவதில் வியப்பேதும் இல்லை.

பாகிஸ்தானின் துணையோடு ஐ. எஸ்ஸுடன் முரண்படும் ஏனைய இஸ்லாமிய ஆயுத குழுக்களை வளைத்துப்பிடிக்கும் முயற்சிகள் ஏற்கனவே முடுக்கிவிடப்பட்டுள்ளன. தலிபான் அமைப்பின் அல் கொரசன் தஹ்ரிக் ஈ பிரிவை கடுமையாக எதிர்க்கும் அமெரிக்காவும் பாகிஸ்தானும் முல்லா ஒமர் தலைமையிலான தலிபான் அமைப்புடன் அநுசரித்துப்போக தயாராகிவிட்டன.

தஹ்ரிக் இ தலிபான்களுக்கு எதிராக முல்லா ஒமர் தலைமையிலான தலிபானை களமிறக்குவது குறித்து பரிசீலித்துவரும் அமெரிக்கா, தற்போது சிரியாவில் அல்-கைடாவின் மற்றொரு கிளையாக அறியப்படும் ஜபத் அல் நுஸ்ராவுக்கும் மறைமுக ஆதரவு வழங்குவது குறித்தும் ஆலோசிப்பதாகவும் கூறப்படுகிறது. அல்-கைடாவுக்கு தடை விதித்திருக்கும் அதேவேளை, அதன் மற்றொரு முகமான ஜபத் அல் நுஸ்ராவுக்கு தடை விதிக்காது மென்போக்கை கடைப்பிடிப்து ஒன்றும் அமெரிக்க தந்தரோபாயத்துக்கு புதிதானதல்ல.

அதேவேளை, பலதடவைகளில் தானே வளர்த்துவிட்ட அமைப்புகளுக்கு எதிராக போராடவேண்டிய நிலைக்குள்ளான அமெரிக்கா, ஜபத் அல் நுஸ்ராவை ஐ. எஸ்ஸுக்கு எதிராக பயன்படுத்துவது குறித்து பரிசீலித்துக்கொண்டிருக்கிறபோதிலும் ஜபத் அல் நுஸ்ரா எளிதாக அமெரிக்காவை நம்பிவிடுமா என்பதும் சந்தேகமே.

இந்தவேளையிலேயே, ஐ. எஸ். அமைப்பையும் உருவாக்கியது அமெரிக்காவே என்று அதன் உளவுத் துறை இரகசியங்களை அம்பலமாக்கி சச்சரவுகளை ஏற்படுத்திய ஸ்நோடன் கூறுகிறார்.

இஸ்ரேலுக்கு பாதுகாப்பை வழங்கு வதற்காக ஐ. எஸ். உருவாக்கப்பட்டதாகவும் அமெரிக்கா, பிரிட்டன், இஸ் ரேல் ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சியில் தோற்றுவிக்கப்பட்டதே ஐ. எஸ். என்றும் அண்மையில் ஈரானிய செய்தி நிறுவனமான ‘இர்னா’வுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் ஸ்நோடன் குறிப்பிட்டார். ஐ. எஸ். அமைப்பின் தலைவரான அல் பாக்தாதி அமெரிக்க படைகளால் 2004ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டதாகவும் அமெரிக்காவு டனான இரகசிய இணக்கப்பாட்டுக்குப் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டு, ஐ. எஸ். அமைப்பு உருவானதாகவும் ஸ்நோடன் தெரிவிக்கிறார்.

இஸ்ரேலின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டு, அதற்காகவே ஆயுதங்களையும் வழங்கியிருந்ததாகவும், மொசூல் மற்றும் கிர்குக் நகரங்களில்

இஸ்ரேல் தயாரிப்பு ஆயுதங்களை ஐ. எஸ். அமைப்பு பயன்படுத்தியதாகவும் குர்திஷ் படையினர் தெரிவித்திருந் ததை ஆதாரம்காட்டும் ஸ்நோடன், சிரியாவில் இஸ்ரேலிய மருத்துவ மனை ஒன்றில்தான் காயமடைந்த ஐ. எஸ். போராளிகளுக்கு சிகிச்சை வழங் கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியிருக் கிறார்.

எது எவ்வாறிருப்பினும், அமெரிக் காவையும் மேற்குலகையும் முன்னைய காலங்களில் இலக்கு வைத்த இஸ்லா மிய அமைப்புகளிலிருந்து மாறுபட்ட வகையில் ஐ. எஸ். என்னும் அமைப்பு செயல்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இஸ்லாமிய ஷரியத் சட்ட விதிகளுக்கு முரணானவர்கள் என்று கருதப்படுபவர்களை இரக்கமின்றி கொலைசெய்வது முதல், இனச்சுத்திக ரிப்பு, மதச்சுத்திகரிப்பு போன்ற அநாக ரிகமான நடடிக்கைகள்வரை வெகு சாதாரணமாக மேற்கொள்ளும் ஐ. எஸ். அமைப்பு, தனது உறுப்பினரை திருமணம்செய்ய மறுக்கும் இளம் பெண்களை கொடூரமாக கொலை செய்து வீசி எறியும் பாதகத்தையும் மதத்தின் பெயரால் நாளாந்தம் நடாத் துவதும் இதில் அடக்கம். மனித நேயத் துக்கும் போராட்ட தர்மத்துக்கும் ஒவ் வாத அனைத்தையும் கையிலெடுத்து போரிடும் ஐ. எஸ். அமைப்பின் வருமா னத்தை முடக்குவதால் அதன் வீரியத் தைக் குறைக்கலாம் என்றும் மேற்கு லகு கருதுகிறது.

ஈராக்கிலும் சிரியாவிலும் பெரும ளவு எண்ணெய் வயல்களை கட்டுப் பாட்டில் வைத்திருந்து எண்ணெய் விற்பனைமூலம் பெரும் வருமா னத்தை பெருக்குவதை தடுப்பதனால் ஐ. எஸ்ஸுக்கு பொருளாதார முடையை ஏற்படுத்தலாமென கணக்கிடும் மேற்கு லகம், ஐ. எஸ். அமைப்பிடமிருந்து எரி பொருள் கொள்வனவு செய்வதை தடுப்பதற்கு தீமானம் இயற்றவுள்ளது.

ஆனால், துருக்கியிலும் ஈரானிலும் உள்ள இடைத் தரகர்கள்மூலம் எரி பொருள் விற்பனையை ஐ. எஸ். தொடர்வதை எந்த தீர்மானத்தினாலும் தடுத்துவிடமுடியாது என்பதும், ஈராக் கின் பழமைவாய்ந்த புராதன சின்னங் களை விற்றல், ஆள்கடத்தல், பணய கைதிகளாக்கி கப்பம் கோருதல், பெண் களை பாலியல் அடிமைகளாக விற் பனை செய்தல், சிறுபான்மை மதத்தி னர் இஸ்லாமை தழுவிக்கொள்ள வேண்டும்; இல்லையேல் பெருந்தொ கைப் பணத்தை தண்டமாக செலுத்தி விட்டு வெளியேறவேண்டும் என்பது போன்ற கடுமையான சட்டங்கள் மூல மும் ஐரோப்பாவிலும் ஏனைய உலக நாடுகளிலும் செயல்படும் மதபீடங்க ளினாலும் கணிசமான தொகையை ஐ. எஸ். அமைப்பு பெற்றுக்கொள்ளும் என்பதும் அவதானிகளின்கருத்து.

எல்லாவற்றக்கும் மேலாக, உலகெங் கிலும் பரந்து வாழும் இஸ்லாமிய இளைஞர்களையும் யுவதிகளையும் கவர்ந்திழுத்து தனது அமைப்பில் இணைத்துக்கொள்வதற்கு ஐ. எஸ். அமைப்பு உலகின் செல்வாக்கும் பயன் பாடும் அதிகம்கொண்ட சமூக வலைத் தளங்களான முகநூல், ருவிட்டர் போன்றவற்றின் மூலமாக பாரிய பரப்பு ரைகளை முன்னெடுத்திருப்பதும் அதன்மீது இவ்வாறான பொருளாதார தடை எதுவும் பலனளிக்காது என்ப தைக் காட்டுகிறது.

உலகெங்குமிருந்து இளம் இஸ்லா மிய சமூகத்தை வளைத்தெடுப்பதில் ஐ. எஸ். வெற்றியும் கண்டிருப்பதால் உலக நாடுகள் தடுமாறிப்போயிருக்கின்றன என்பதும் உண்மையே.

ஐ. எஸ். அமைப்பில் இணைந்து கொள்ளும் இஸ்லாமிய சிறுவர்களுக் கான சர்வதேச தரத்திலான பாடசா லையும் நடாத்தப்படுவதோடு, வள மான வாழ்க்கையைப்பெற ஐ. எஸ். அமைப்பில் இணைந்துகொள்ளு மாறு சமூக வலைத்தளங்களில் ஆள் சேர்ப்புகள் பெருமளவில் நடத் தப்படு கின்றன. ஐ. எஸ். உறுப்பினர்கள் மட் டும் 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ருவிற்றர் கணக்குகளையும் பல லட்சத் துக்கும் அதிகமான முகநூல் கணக்குக ளையும் இயக்குவதாகவும் அமெரிக்கா நடாத்திய ஆய்வு கண்டறிந்திருக்கிறது.

ஐ. எஸ். அமைப்பின் மையமான சிரியா மற்றும் ஈராக் ஆகிய நாடுகளி லிருந்தும், ஏனைய நாடுகளில் உள்ள அதன் அபிமானிகளாலும் இந்த சமூக வலைத்தள கணக்குகள் பேணப்பட்டு வருவதுடன், உலகில் சமூக வலைத்த ளங்களை தீவிரவாத செயல்பாடுகளுக் காக திறம்பட பயன்படுத்தும் பிரிவின ராக ஐ. எஸ். அமைப்பினர் இனங்கா ணப்பட்டுமுள்ளனர். இன்னும், சமூக வலைத்தள பரப்புரைகள் ஐ. எஸ். அமைப்புக்கு பெரு வெற்றியளித்திருப் பதுடன் நாள்தோறும் நூற்றுக்கும் அதிகமானவர்கள் வெளிநாடுகளிலி ருந்து சிரியாவுக்கும் ஈராக்குக்கும் பய ணிப்பதாகவும் புள்ளிவிபரங்கள் காட் டுகின்றன.

**அமெரிக்காவையும் மேற்குலகையும் முன்னைய காலங்களில் இலக்குவைத்த இஸ்லாமிய அமைப்புகளிலிருந்து மாறுபட்ட வகையில் ஐ. எஸ். என்னும் அமைப்பு செயல்பட்டுவருகிறது**

இதனாலேயே, நடப்பாண்டின் இறுதிக்குள் சுமார் பத்தாயிரம் ஐரோப் பியர்கள் ஐ. எஸ். அமைப்புடன் இணைந்து ஜிகாதிகளாக செயல்படும் அபாயம் உள்ளதாக பிரான்ஸ் பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக் மற்றும் சிரியா நாடுகளில் உள்ள இஸ்லாமிய அமைப்புக்களில் ஏற்கனவே மூவாயிரம் ஐரோப்பியர்கள் ஜிகாதிகளாக செயல்பட்டுவருவதாக வும் 2015 இறுதிக்குள் அந்த எண் ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டும் அபாயம் உள்ளதாகவும் கூறும் பிரெஞ்சு பிரதமர் மனுவல் வல்ஸ், தாய் நாட்டுக்கு எதிராக ஆயுதங்களை ஏந் திய சுமார் 90 பிரெஞ்சு ஜிகாதிகள், அங்கு இடம்பெற்ற மோதல்களில் ஏற் கனவே இறந்திருக்கலாமெனவும் தெரி வித்தார்.

ஜேர்மன் நாட்டிலிருந்தும் இளை ஞர்கள், யுவதிகள் உள்பட 650க்கும் அதிகமானவர்கள் ஐ. எஸ். அமைப்பில் இணைந்துள்ளதாக மற்றொரு தகவல் கூறுகிறது.

பிரான்ஸ், பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகளைப்போல நாட்டைவிட்டு

வெளியேறி, ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பில் இணையும் பழக்கமானது ஜேர்மனியிலும் பரவிவருகிறது என்று ஜேர்மன் உள்துறை அமைச்சர் தெரிவிக்கிறார்.

இதுவரை, 650க்கும் அதிகமான ஜேர்மனியர்கள் ஐ. எஸ். அமைப்பு உறுப்பினர்களால் மூளைச்சலவை செய்யப்பட்டு அவர்களுடைய நாட்டுக்கு வரவழைக்கப்பட்டுள்ளதாகவும், இது பாதுகாப்பு அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், ஆயிரம் ஜேர்மனியர்கள் ஐ. எஸ். அமைப்புடன் இணைய தயார் நிலையில் இருக்கிறார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

சொந்த நாட்டைவிட்டு ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகளுக்கு ஐ. எஸ். அமைப்பில் இணைந்துகொள்ள செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும் அதேவேளை, அங்கு பயிற்சிகளை முடித்துக்கொண்டு தாய்நாடுகளுக்கு திரும்பி, ஆயுதங்களை லாவகமாக கையாள தெரிந்துள்ளவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும், இது மிகவும் ஆபத்தான சூழ்நிலை என்றும் ஜேர்மன் அமைச்சர் எச்சரிக்கிறார்.

இன்னொரு வகையில், ஐ. எஸ். அமைப்பு இளம் பெண்களையும் மாணவிகளையும் கவர்ந்திழுப்பது அவதானிக்கப்பட்டு, குறித்த நாடுகளில் பலத்த அதிர்வலைகளை இது ஏற்படுத்தியிருக்கிறது. ஐ. எஸ். உறுப்பினர்களை மணமுடிக்கவே அதிக பதின்மவயது மாணவிகள் ஆர்வம் காட்டுவதாக அறியப்படுகிறது. அதனாலேயே, ஈராக், சிரியா போன்ற நாடுகளுக்கு காதல் சாகச பயணம் செய்யவேண்டாம் என்றும், அங்கு சென்று ஜிகாதி மணமக்கள் ஆகவேண்டாம் என்றும் அவுஸ்திரேலிய அரசு எச்சரிக்கை விடுக்கிறது.

ஐ. எஸ். அமைப்பில் இளம் பெண்கள் சேர்வது முட்டாள்தனமானது என்றும் வருத்தமளிக்கும் விடயம் என்றும் அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் ஜூலி பிஷப் கவலை வெளியிடுகிறார். வழக்கத்துக்கு மாறாக சிரியாவுக்கு இளம் பெண்கள் செல்வது அதிகரித்துவருவதாகவும் இளம் பெண்கள் மூளைச் சலவைசெய்யப்பட்டு, குடும்பத்தினரைவிட்டு பிரிக்கப்படுவதாகவும் ஐ. எஸ். அமைப்பில் சேர்வதற்கு அவுஸ்திரேலியாவிலிருந்து 110க்கும் மேற்பட்ட பெண்கள் சென்றுள்ளனர் எனவும் அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கிறது.

இதேவேளை, பிரிட்டனிலிருந்தும் பெருமளவிலான மாணவிகள் ஐ. எஸ். அமைப்பு உறுப்பினர்களைத் திருமணம் செய்துகொள்ள ஆர்வமாக உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அண்மையில், மூன்று மாணவிகள் ஐ. எஸ். அமைப்பில் சேர்வதற்காக வீட்டுக்கும் தெரியாமல் நாட்டைவிட்டு வெளியேறிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியதையடுத்து, மேலும் பலர் ஐ. எஸ். அமைப்பில் இணைந்திருப்பது தொடர்பான தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

பிரிட்டனிலிருந்து சுமார் 700 இஸ்லாமியர்கள் ஈராக் மற்றும் சிரியாவுக்குச் சென்று, ஐ. எஸ். அமைப்புடன் இணைந்து போரிட்டதாகவும், அவர்களில் 320 பேர் தற்போது நாடு திரும்பியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் மிகவும் அபாயகரமானவர்கள் என்றும், பிரிட்டனில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடும் சாத்தியம் அல்லது ஐ. எஸ். அமைப்புக்கு மேலும் ஆட்களைத் திரட்டும் வாய்ப்பு உள்ளது என்றும் இத் தகவலை வெளியிட்ட 'ரெலிகிராப்' பத்திரிகை எச்சரித்துள்ளது.

ரஷ்ய பெண் ஒருவர் தனது இரண்டு பெண் குழந்தைகளை ஐ. எஸ். அமைப்பில் சேர்த்திருக்கும் சம்பவமும் செய்தி ஊடகங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. ரஷ்யாவின் செசன்யாவை சேர்ந்த இந்த இளம் தாய் நெதர்லாந்தில் வாழ்ந்துவந்ததாகவும் 7 மற்றும் 8 வயதில் உள்ள இரண்டு பெண் குழந்தைகளையும் விமானமூலம் கடத்திச் சென்று சிரியாவின் ரக்கா நகரத்தில் ஐ. எஸ். அமைப்பில் கையளித்ததாகவும் வெளிவந்த தகவலை நெதர்லாந்து அரசு உறுதிசெய்துள்ளது.

ஐ. எஸ். அமைப்புமீதான கவர்ச்சி, ஆசியாவிலுள்ள இஸ்லாமிய இளைஞர்களையும் ஈர்த்திருக்கிறது. ஐ. எஸ். அமைப்பில் இணைந்து செயல்படவும் அதற்கு உதவவும், தமது சொத்துக்களை விற்றும் வங்கியில் கடன் பெற்றுமுள்ளார்கள் என்று மலேசிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுபோன்றே, ஐ. எஸ். ஆதரவாளர்கள் சீனாவிலும் ஆள்திரட்டலில் ஈடுபடுவதாகவும், ஒரு தொகுதியினர் ஆப்கானிஸ்தான் வழியாக ஈராக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் இன்னொரு தகவல் கூறுகிறது.


ஐ. எஸ். அமைப்பின் ஆள்திரட்டல் உலகின் கிழக்கு முனையான அவுஸ்திரேலியாவிலிருந்து அமெரிக்காவரை முனைப்புடன் நடைபெறும் நிலையில், ஐ. எஸ். அமைப்பை முறியடிப்பதற்கு ஏனைய நாடுகள் அளித்துவரும் ஆதரவு சமீபகாலமாக அதிகரித்து வருவதாக ஈராக் பிரதமர் தெரிவித்துள்ளார். ஐ. எஸ். அமைப்பை முறியடிப்பதற்கு அமெரிக்காவின் தலைமையில் ஜோர்டான், கட்டார், சவூதி அரேபியா, பாகிஸ்தான் மற்றும் அரேபிய நாடுகள் கூட்டாக செயல்பட்டு வருவதாகவும் அவர் பட்டியலிடுகிறார்.

ஐ. எஸ். அமைப்புக்கு எதிராக போதிய எண்ணிக்கையில் கூட்டு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், அவர்களின் நிலைகள்மீதான வான்வழித் தாக்குதல்களை அதிகரித்திருப்பதாகவும் ஈராக் தரப்பு மேலும் தெரிவிக்கிறது.

ஈராக்கில் தாக்குதலில் ஈடுபட்டு கைதாகி தண்டனை அநுபவித்துவரும் ஐ. எஸ். அமைப்பு உறுப்பினர்கள் தங்களால் பாதிக்கப்பட்டோரை நேரில் சந்தித்துப்பேசும் தொலைக்காட்சி நிகழ்ச்சி பெரும் வரவேற்பை பெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது.

ஐ. எஸ். அமைப்பால் பொதுமக்களுக்கு ஏற்படும் பல்வேறு பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியாக ஈராக் அரசின் அல் ஈராக்கி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'சட்டத்தின் பிடியில்' என்ற நிகழ்ச்சியில் ஐ. எஸ். அமைப்பினர் தாக்குதல் நடத்திய இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு குண்டுவெடிப்பு, துப்பாக்கிச்சூடு போன்ற தாக்குதல்கள் எவ்வாறு நிகழ்த்தப்பட்டன என்பதைக் காண்பித்ததையடுத்து, இச்சம்பவங்களில் உயிரிழந்தோரின் உறவுகள் மற்றும் பாதிக்கப்பட்டோர் அழைத்துவரப்பட்டு, இத் தொலைக்காட்சி நிகழ்ச்சி உணர்வுபூர்வமாக தொடர்கிறது.

பார்வையாளர்களையும் ஐ. எஸ். அமைப்பினரையும் பெரும் உளவியல் தாக்கத்துக்குள்ளாக்கும் இவ்வாறான நடவடிக்கைகளாலும் அமெரிக்கா வகுக்கும் புதிய வியூகங்களாலும் ஐ. எஸ். முறியடிக்கப்படுமா? அல்லது, உலகளாவிய இளம் இஸ்லாமிய ஆதரவோடு ஐ. எஸ். மேலும் விஸ்வரூபம் எடுக்குமா என்பதை வெகு இலகுவில் எதிர்வு கூறிவிடமுடியாது. ■




## நெம்ற்சோவ் கொலை

# புட்டினுக்கு எதிரான சக்திகளின் செயலா?

**உலகின் கண்களில், விசேடமாக மேலை நாடுகளில் உண்மையிலேயே இது புட்டினுக்கு களங்கத்தையே ஏற்படுத்தியிருக்கிறது**

**ஆர். மணி**

ரஷ்ய அதிபர் விளடிமிர் புட்டினைப் பகிரங்கமாகவே கண்டனத்துக்குள்ளாக்கிவந்த ரஷ்யாவின் பிரபல எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான பொறிஸ் நெம்ற்சோவின் கொலை, ரஷ்ய கூட்டமைப்பில் மாத்திரமல்ல, ஐரோப்பாவின் பல இடங்களிலும், மேலைத்தேய நகரங்களிலும் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. நீண்டகாலமாகவே புட்டினைக் கண்டனத்தோடு விமர்சித்துவந்த 55 வயதான நெம்ற்சொவ் பெப்ரவரி 27ஆம் தேதி நள்ளிரவு கிரெம்ளினுக்கு மிக அருகே, பாலமொன்றின் அருகில் நடந்துவருகையில் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார். தனியொருவரான கொலையாளி, நெம்ற்சோவின் பின்புறமிருந்து நான்கு தடவைகள் சுட்டபின்னர் காரொன்றில் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டபோது, நெம்ற்சோவின் 23 வயதான உக்ரைனைச் சேர்ந்த காதலி கனா டுறிற்ஸ்காஸவும் அவருடன் அருகில் நடந்துவந்து கொண்டிருந்தார்.

நெம்ற்சோவ் கொலைசெய்யப்பட்ட அவ்வேளையில் அவ்விடத்தில் இணைக்கப்பட்டிருந்த கண்காணிப்பு கமெராக்கள் இயங்கவில்லை என்று ரஷ்ய உள்ளக அமைச்சை மேற்கோள் காண்பித்து சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன. "அப்பகுதியில் கமெராக்கள் சரியாக இயங்காததால் தெளிவான அடையாளங்கள் கிடைக்காமல்போகலாமென அஞ்சுகிறேன். ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் பலத்த பாதுகாப்புக்குரிய இடங்களிலொன்றான இப்பகுதியில், இது முற்றிலும் கவலையீனமானது'' என்று, இக்கோரக்கொலை நிகழ்ந்த இரு தினங்களில் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டது.

மார்ச் முதலாம் தேதி நடைபெற்ற நெம்ற்சோவின் மரணச் சடங்கில் 70 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டார்கள். கொலையைக் கண்டிக்கும் பதாகைகளை அவர்கள் தாங்கிநின்றார்கள். இப் பதாகைகள் கொலையைக் கண்டித்ததுடன் புட்டினையும் கடுமையாக விமர்சித்தன. 'புட்டின் இல்லாத ரஷ்யா' என்ற வாசகத்துடன் பல பதாகைகள் காணப்பட்டன. கொலைக்கு ரஷ்ய ஆட்சியாளர்களே பொறுப்பு என்று மரண வைபவத்தில் கலந்துகொண்டவர்கள் குற்றம்சுமத்தினர். "இன்றைய ரஷ்ய ஆட்சியாளர்கள் ஊழல் மலிந்தவர்கள். பொதுமக்களிடமிருந்தோ அல்லது எதிர்க்கட்சிகளிடமிருந்தோ சவால்களை அநுமதிக்க மாட்டார்கள். நெம்ற்சோவ் அத்தகைய ஒரு பெரும் தலைவர். அதனால், அவர்களுக்கு அவர் ஒரு பேரிடைஞ்சலாகவிருந்தார்'' என்று, அங்கு கலந்துகொண்டவர்களை ஆதாரம்காட்டி, மற்றொரு செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இக் கோழைத்தனமான செயலைப் புரிந்தவர்கள் யாரென்பது தெரியாதபோது, பல கேஷ்யங்கள் கூறப்பட்டன. ரஷ்யா இப்போது ஓர் எதேச்சாதிகார நாடாகிவிட்டது. எதிர்காலத்தில் இத்தகைய கொலைகளைத்தான் ஒருவர் எதிர்கொள்ளவேண்டும். "புட்டினின் ஆட்சி ஏற்கனவே ஓர் எதேச்சாதிகார ஆட்சியாக மாறிவிட்டதென்றே நாம் அஞ்சுகிறோம். சர்வதேச நடைமுறைகளை புட்டின் துச்சமாக கருதுகிறார். உக்ரைனின் கிரிமியா குடா நாட்டை ரஷ்யாவுடன் இணைத்தமை இதற்கான ஆதாரம். இது, கிழக்கு உக்ரைனில் பிரிவினைவாதிகளின் யுத்தத்தில் தேசியத்தைப் பரப்பி, அபிப்பிராய பேதத்தை அடக்குகிறது.'' - இரங்கல் ஊர்வலத்தில் கலந்துகொண்ட ஒருவர் கூறினார். புட்டினின் உக்ரைன் கொள்கை தொடர்பில் நெம்ற்சோவின் கடுமையான விமர்சனம் சில மாதங்களாகத் தொடர்ந்த ஒன்று என்றும், இது, தனது மனதில்பட்ட எந்த விவகாரத்திலும் புட்டின்மீதான விமர்சனக் குரலை இந்த ஊழல் எதிர்ப்பு போராட்ட வீரர் தணிக்கப்போவதில்லை என்பதனை மேலும் வெளிப்

படுத்தியதாகவும் மொஸ்கோவிலிருந்து வெளியாகும் பிரபல வர்த்தக தினசரி குறிப்பிட்டது. "அவரது கொலைக்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர்கூட புட்டினின் உக்ரைன் கொள்கையை கண்டித்த நெம்ற்சோவ், பைத்தியகாரத்தனமானதும், ஆக்கிரமிப்பும் மனிதாபிமானமற்றதுமென்று அதனைக் குறிப்பிட்டார்.'' - நீண்டகாலமாக அரசியல் ஸ்திரத்தன்மையை எதிர்பார்க்கும் ஒரு நாட்டில் இக் கொலை, மரண வைபவத்தில் கலந்துகொண்டவர்கள் பலரிடையே உண்மையில் மாறுபட்ட கருத்தைத் தோற்றுவித்தது. ரஷ்யாவின் பாதுகாப்பு, உளவு சேவையான கே. ஜி. பி. யின் முன்னாள் முகவர் ஒருவரான புட்டின், நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தினாலும், அவரது தற்போதைய ஆட்சி ஜனநாயக மரபுகளையும் அரசியல் நீதியையும் சற்றேனும் பொருட்படுத்தாத, அசல் சர்வாதிகார ஆட்சியேயன்றி வேறல்ல. "இந்த பின்னணியில் தான் நெம்ற்சோவின் கொலையை நோக்கவேண்டும். ஆட்சிக்கு அவர் அச்சுறுத்தலாகவிருந்தார். இன்றைய ரஷ்ய ஆட்சியாளர்கள் குற்றவாளிகளேயன்றி வேறல்லர். அனைத்து சர்வதேச உரிமைகளையும் இவர்கள் புறந்தள்ளி, கிரிமியாவைக் கைப்பற்றி, உக்ரைனுடன் யுத்தத்தை ஆரம்பித்தார்கள்'' என்று, பௌதிக பேராசிரியர் ஒருவரை மேற்கோளிட்டு செய்தி நிறுவனம் ஒன்று கூறியது.

ஆனால், அவதானிகளில் இன்னொரு பிரிவினரும், மொஸ்கோவில் சில தசாப்தங்களாக வாழ்பவர்களும் சிலர் நெம்ற்சோவின் இக் கொலை, ரஷ்யாவின் நலனையும் வளர்ச்சியையும் விரும்பாத சில சக்திகளின் செயல் என்று தெரிவித்தார்கள். இது ஒரு வெளியிடத்து தலையீடாக தெரிகிறது. ரஷ்யாவுக்குள்ளே நிலைமையைச் சீர்குலைக்க, மேலைத்தேய சக்திகளின் அநுசரணையுடனோ அல்லது அது இல்லாமலோ உக்ரைன் பாதுகாப்பு சேவை மேற்கொண்ட செயல் இது. ரஷ்யாவில், 70 - 80 வீத ஆதரவு உள்ளபோது, நெம்ற்சோவ் செயலற்ற ஒரு சக்தியே. ஏற்கனவே உக்ரைன் யுத்தம், எண்ணெய் விலையேற்றம், ரஷ்யாவுக்கெதிரான மேலைநாடுகளின் பொருளாதார தடைபோன்ற, பெருகும் பல பிரச்னைகளில் மூழ்கியிருக்கையில் இதில் புட்டின் மற்றொரு பிரச்னையையும் ஏன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று, ரஷ்யாவில் கடந்த நாற்பது வருடங்களாக வாழ்ந்துவரும் தமிழ்நாட்டு வர்த்தகர் ஒருவரான ஆர். பாஸ்கரன் வினவுகிறார். இவ் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் மேலைத்தேய செய்தி நிறுவனங்கள் செயல்படுவதாக அவர் குற்றம் சுமத்துகிறார்.

"ஆம், இதற்காக மேலலைத்தேய செய்தி நிறுவனங்களைத்தான் பெருமளவில் குற்றம் சுமத்தவேண்டும் என்று நான் நினைக்கிறேன். ரஷ்யா ஒரு பூதம்; அண்டை நாடுகளை ஏப்பம்விட அது எண்ணுகிறது என்ற விதமாக, அவற்றின் பக்கசார்பான செய்திகள் அமைகின்றன. அது உண்மையல்ல. மேலை நாட்டு செய்தி நிறுவனங்களில் சித்தரிக்கப்படுவதுபோல் இங்குள்ள நிலைமை அவ்வளவு மோசமானதல்ல. ஆனால், துரதிருஷ்டவசமாக ரஷ்ய செய்தி நிறுவனங்களும் ரஷ்ய அரசும் அதிபர் புட்டினும் இவற்றுக்கு உண்மையிலேயே தகுந்த பதில் அளிக்காமை பெரும் தவறே. உக்ரைன் தொடர்பில் மேலைத்தேய செய்தி நிறுவனங்கள் வெளிப்படுத்தும் பிம்பம் முழுக்கமுழுக்க ஒருபக்கச் சார்பானதே. ரஷ்ய நலன்களைத் தகர்த்தொழிப்பதும் சர்வதேச விவகாரங்களில் முற்றாக அந்நியப்படுத்துவதுமான நோக்குடன் அமைந்தவை'' என்கிறார் பாஸ்கரன்.

ரஷ்ய எதிர்க்கட்சிகள், ஆரோக்கியமான அரசியல் செல்பாடுகளிலன்றி, இத்தகைய துயர நிகழ்வுகளின் மூலம் மட்டுமே தங்களைப் பலப்படுத்தமுடியும் என்று, ரஷ்யாவில் சுயாதீன அரசியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். ரஷ்யாவில் இன்று எதிர்க்கட்சிக்குள் அநேக பிரச்னைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னைகள் பலவற்றில் அவற்றால் ஒன்றிணைய முடிவதில்லை. இவை ரஷ்ய நலன் சார்ந்தவை அல்ல என்பது அவர்களே கூறிக்கொள்வது. நேர்மையான நோக்கில் எதிர்க்கட்சிகளால் ஒன்றிணையமுடிவதில்லை. எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் நிலையில்கூட இல்லை. "அவர்களுடைய நடவடிக்கையைப் பாருங்கள். தேசியவாதத்தை எழுப்புவதாகவும், புட்டினின் உக்ரைன் கொள்கைக்கு ஆதரவு தேடுவதற்கும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களைத் திசைதிருப்புவதற்காகவும் வெறுப்பூட்டும் மேலைநாட்டு எதிர்ப்பு பிரச்சாரங்களில் ஈடுபடுவதாகவும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றஞ்சாட்டுகின்றன. ஆனால், அவர்களின் ஒற்றுமையின்மை ரஷ்ய ஜனநாயகத்தில் உண்மையில் ஒரு பெரும் பற்றாக்குறையை ஏற்படுத்துவதை அவர்கள் உணரவில்லை.'' - ஒரு சுயாதீன அரசியல் ஆய்வாளர் யூரி கொலொன்கவ் கூறுகிறார்.

ஆத்திரமூட்டும் செயல் என்று இக் கொலையைக் குறிப்பிட்ட புட்டின், நெம்ற்சொவ் கொலையாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்றும் சபதமிட்டார். கொலையாளிகள் கைதுக்கான பெறுமதியான தடயங்களை அளிப்பவர்களுக்கு 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்க ரஷ்ய பொலீசார் அறிவித்தனர். நெம்ற்சோவ் யூத இனத்தவர் என்பதால் இஸ்லாமிய தீவிரவாதிகள் அல்லது புட்டினுக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காக எதிர்க்கட்சிகள் என்பதுள்பட, பல கோணங்களில் தாம் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ரஷ்ய பொலீசார் தெரிவித்தனர். ஆனால், ஒன்று மட்டும் நிச்சயமானது. நெம்ற்சோவ் கொலை உலகின் கண்களில், விசேடமாக மேலைநாடுகளிடையே புட்டினுக்கு உண்மையிலேயே களங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அமெரிக்கா, நேட்டோ உள்பட, மேலை நாடுகள் ஏற்கனவே அவரை இலக்குவைத்துள்ளன. உக்ரைன் நெருக்கடி ஆரம்பித்ததிலிருந்து பெரும் கண்டனங்களை ரஷ்ய அதிபர் எதிர்கொள்ளும்போது, இக் கொலை அவரது கண்டனகாரர்களின் குரல்களை மேலும் ஓங்கச்செய்திருக்கிறது. எல்லா வல்லமையும் மிக்கவரான ரஷ்ய அதிபர் தனது உக்ரைன் கொள்கைகளில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வேளையில், அதற்குப் பொருத்தமான விதத்தில் இக் கொலை நிகழ்ந்திருக்கிறது. ஜனநாயக நடைமுறையின்மை, ரஷ்ய ஆட்சியாளர்களை ஜாக்கிரதைகொள்ளவைப்பதில் செய்தி நிறுவனங்களின் தோல்வி, உக்ரைன் விவகாரத்தில் அரசாங்கம் உரிய விதத்திலும் பொறுப்புடனும் செயல்பட வலியுறுத்துவதில் ரஷ்ய சிவில் சமூகத்தின் தயக்கம், இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஓர் இணைந்த வேலைத்திட்டத்துடன் ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடாத எதிர்க்கட்சிகளின் பாரிய தவறு போன்ற இவை அனைத்தும் அதிபர் விளடிமிர் புட்டினுக்கு மாத்திரமல்ல ரஷ்ய தேசத்துக்கும் களங்கத்தையே சேர்த்திருக்கிறது.



## இலங்கை - இந்திய அரசியலில் மீனவர் பிரச்னை

# இந்திய மீனவர் ஊடுருவல் நியாயமானதா?

பாரம்பரிய கடல் பிரதேசம்; அதில் மீன்பிடிக்க எங்களுக்கு உரிமை இருக்கிறது. எங்களுக்கு வாரத்தில் இரண்டு நாள்களோ அல்லது மூன்று நாள்களோ இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க இலங்கை அநுமதிக்கவேண்டும்.

தமிழக மீனவர்களின் கோரிக்கை இதுதான்.

மீனவர் பிரச்னை தொடர்பிலான முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தை 2013ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் தேதி சென்னையில் நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையிலும் இதனைத்தான் அவர்கள் வலியுறுத்தினார்கள். 2014 மே 12ஆம் தேதி இரண்டாவது சுற்றுப் பேச்சு கொழும்பில் நடைபெற்றது. அதிலும் இதனைத்தான் அவர்கள் வலியுறுத்தினார்கள். இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் எவ்வித முடிவும் எட்டப்படாமல் முடிவடைந்தது. மூன்றாவது சுற்றுப் பேச்சு மீண்டும் சென்னையில் நடாத்த முடிவு செய்யப்பட்டு, நடைபெற்றது.

இலங்கையில் முப்பது வருடகால யுத்தம் வடபகுதியை ஸ்தம்பிக்கச்செய்திருந்தது. அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் அனைத்தும் துண்டிக்கப்பட்டது. விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி என, மக்கள் செய்வதறியாது திண்டாடினர். கடல் என்றாலும்சரி தரையில் என்றாலும்சரி, நிம்மதியற்ற வாழ்வு. இந் நிலையில் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர் சமூகம் பெரும் பாதிப்புக்குள்ளானது.

இரவு நேரங்களில் கடற்றொழிலுக்கு போகமுடியாது. விடிந்தபின்னரே போகலாம். அதுவும், மீனவர்கள் நினைத்

**தீர்வு என்று இந்திய மீனவர்கள் எதிர்பார்ப்பது, இலங்கைக் கடல் எல்லைக்குள் சென்று, தாம் நினைத்தபடி மீன்பிடிக்கவேண்டும் என்பதுதான். இலங்கை மீனவர்கள்பற்றி அவர்களுக்கு கவலையில்லை. தமிழகத்தில் அநேகமானோருக்கு இந்த உண்மை தெரியும். ஆனாலும், அவர்கள் தெரிந்தும் தெரியாதவர்கள்போன்று இருக்கிறார்கள்**

கே. அசோக்குமார்



யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

தபடி கடற்கரைக்குள் பிரவேசிக்க முடியாது. கடற்கரைப் பகுதியில் வேலிகள் போடப்பட்டு, இடையிடையே காவலரண்கள். எந்நேரமும் கடற்புலிகள் ஊடுருவலாம் என்பதால் 24 மணிநேரமும் கண்காணிப்பு. இவை அனைத்தையும் எதிர்கொண்டுதான் வடபகுதி மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுத்தனர்.

ஒவ்வொரு மீனவருக்கும் கடலுக்கு செல்வதற்காக அடையாள அட்டை வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் தாங்கள் நினைத்த விதத்தில் கடலுக்கு செல்லமுடியாது. கடலுக்கு செல்வதற்காக காவலரண்களுக்கு மத்தியில் தனியான வழிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. தங்களிடமுள்ள விசேட அடையாள அட்டையை படையினரிடம் கையளித்து, கடலுக்கு செல்வதற்கான விசேட அனுமதி அட்டையை பெற்றுக்கொண்டு செல்லவேண்டும்.

இயந்திர படகுகள் இல்லை. அவுட் போட் என்ஜின்கள் பயன்படுத்தக்கூடாது. தெப்பமோ, தோணியோதான் பயன்படுத்தவேண்டும். துடுப்புகளை மட்டுமே பயன்படுத்தவேண்டும். கடற்படையினரின் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் தெரியவேண்டும்; சுமார் 5 கிலோ மீற்றர் தூரம். கொடுக்கப்பட்ட நேரத்துள் கரைக்கு திரும்பவேண்டும்.

கரைக்கு வந்ததும் பிடித்த மீன்களை இராணுவத்தினரின் முன்னால் கொட்டிக் காண்பிக்கவேண்டும். அவர்கள் சோதனையிட்ட பின்னர்தான் மீனைச் சந்தைக்கு கொண்டுசெல்லவேண்டும். வழங்கப்பட்ட நேரத்துள் கரைக்கு திரும்பாவிடின் படையினரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகவேண்டும். இத்தனை துன்பங்களைக் கடந்துதான் வடபகுதி மீனவர்கள் தங்களது வயிற்றை நிரப்பிக்கொண்டார்கள்.

முதலாவது சுற்று பேச்சுவார்த்தை சென்னையில் நடைபெறும்போது இலங்கை சார்பாக சென்ற வடமாகாண மீனவ சம்மேளனத்தின் பிரதிநிதி, தமிழக மீனவர்களிடம் தாங்கள்பட்ட கஷ்டங்களை கூறும்போது கண்ணீர்விட்டு அழுதேவிட்டார். எல்லோரையுமே நெகிழவைத்த சம்பவம் இது.

ஆனால், இவை அனைத்தையும் கேட்டு, வடபகுதி மீனவர்கள்பட்ட துன்பங்களையெல்லாம் தெரிந்துகொண்ட பின்னரும் இலங்கை கடற்பரப்பில் தாங்கள் மீன்பிடிக்க வேண்டும் என்று இந்திய மீனவர்கள் கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு கிழக்கு மீனவர்கள் நிம்மதியாக தமது தொழிலை செய்ய முற்பட்டால், இடையூறாக தமிழக மீனவர்களின் ஆக்கிரமிப்பு ஏற்பட்டுள்ளது.


இழுவைப் படகுகள்மூலம் இலங்கையின் வடபகுதி கடலை இவர்கள் ஆக்கிரமித்து நிற்பது மட்டுமல்ல, வடபகுதி மீனவர்களின் வலைகள், வள்ளங்கள் அனைத்தையும் சேதப்படுத்துகின்றனர். சில வேளைகளில் வடபகுதி மீனவர்கள் தாக்கப்படுவதும் உண்டு. இவ்வேளையில், வடபகுதி மீனவர்களுக்கு துணையாக நிற்பது இலங்கை கடற்படைதான். கரையோரப் பகுதி மட்டுமல்ல, கடல் வளங்கள் அனைத்தும் இழுவைப் படகுகளினால் அழிக்கப்பட்டுவிட்டன. இந்திய கடற் பகுதியில் இழுவைப் படகுகள் பயன்படுத்துவதற்கு தடை இல்லை. எனினும், இலங்கையில் இது தடைசெய்யப்பட்டுள்து. ஆனாலும், அதே இழுவைப் படகுகளுடன் இலங்கைக் கடற்பரப்புள் நுழைந்து இங்குள்ள கடல் வளத்தையும் அழிப்பதில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்தாலோ, விரட்டினாலோ இலங்கைக் கடற்படையினர் அட்டூழியம் என தமிழக செய்தி ஊடகங்கள் கூறுகின்றன. தமிழக அரசியல்வாதிகளும் இதனை அரசியலாக்கிக்கொள்கிறார்கள்.

முப்பது வருட காலம் யுத்தம் காரணமாக வாழ்வாதாரமின்றி, அரசு கொடுக்கும் நிவாரணத்தில் வாழ்க்கையை நடாத்திக்கொண்டிருந்த வடபகுதி மீனவர்கள் இப்போது நிம்மதிப் பெருமூச்சுடன் கடலில் தொழில்செய்ய சென்றால் அங்கு தமிழக மீனவர்களின் இந்த ஆக்கிரமிப்பு.


இங்கைத் தமிழர்களுக்காக தமிழக மக்கள் குரல் கொடுப்பதும், ஆர்ப்பாட்டம் நடாத்துவதும், கண்ணீர் சிந்துவதும் பெரு நன்றிக்குரியதே. ஆனால், தமது உறவுகளுக்காக குரல் கொடுக்கும் இவர்கள் அந்த உறவுகளின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது என்பதை ஏன் மறந்துவிடுகின்றனர்?

திராவிட முன்னனேற்ற கழகமாக (தி. மு. க.) இருந்தாலும் சரி, அண்ணா திராவிட முன்னேற்ற கழகமாக (அ. இ. அ. தி. மு. க.) இருந்தாலும்சரி, தமிழக மீனவர்களின் பிரச்னைக்கு கச்சதீவை மீண்டும் இந்தியாவுக்கு சொந்தமாக்குவதன்மூலமே இப் பிரச்னைக்கு தீர்வுகாணலாம் என்கிறார்கள்.

1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்த மூலம் இந்திய அரசு தனக்கு சொந்தமான கச்சதீவை இலங்கைக்கு கொடுத்தது. இந்த ஒப்பந்தங்களில் ஒப்பந்த தேதியிலிருந்து பத்து வருடங்களுக்கு இந்திய மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்கவும், வலைகளைக் காயவைக்கவும் வழிபாடு நடாத்துவதற்கு அங்கு சென்றுவரவும் அனுமதி இருந்தது. ஆயினும், பத்து வருடங்களின் பின்னர் இந்த அனுமதி இல்லாத நிலையில், இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க




POACHING IN SRI LANKAN WATERS BY INDIAN FISHERMEN2




POACHING IN SRI LANKAN WATERS BY INDIAN FISHERMEN6




எல்லை தாண்டுகிறார்கள் என்றும், 1960ஆம் ஆண்டின் உச்ச நீதி மன்ற தீர்ப்புக்கு முற்றிலும் முரணாக, பாராளுமன்றத்தின் இரு சபைகளினதும் ஒப்புதல் இல்லாமல், இந்திய - இலங்கை அரசுகளுக்கிடையே 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தங்களின் வாயிலாக கச்சதீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டிருக்கிறது என்றும் கூறி, 2008ஆம் ஆண்டு அ. இ. அ. தி. மு. க. முதல்வராகவிருந்த ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

கச்சதீவு பகுதிக் கடலில் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிக்க உரிமை இல்லை என்று மத்திய அரசு மீண்டும் விளக்கம் அளித்தது. இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது, மோடி தலைமையிலான புதிய அரசும் இவ்வாறே கூறியது.

முன்னதாக, காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு மத்தியில் ஆட்சிப்பொறுப்பு வகித்தபோதும் இந்த வழக்கின் விசாரணையில் இதேபோன்ற விளக்கமே அளிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கின் விசாரணையின்போது மத்திய அரசு தரப்பில் அளிக்கப்பட்ட விளக்கம் 1974ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையேயான ஒப்பந்தத்தின் கீழ் இந்திய மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் பாரம்பரிய வழக்கப்படி மீன்பிடி வலைகளை உலர்த்திக்கொள்ளவும் அந்தப் பகுதியில் இளைப்பாறிச் செல்லவும் மட்டுமே உரிமையுள்ளதாக தெளிவுபடுத்தியது.

மீனவர்கள் பாதுகாப்பு பேரவை என்கிற அமைப்பின் தலைவர் பீற்றர் ராயப்பன் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கில், மத்திய அரசு கொடுத்த விளக்கத்துக்கு எதிராக வாதிடப்பட்டது.

முன்னைய காங்கிரஸ் கட்சி தலைமையிலான மத்திய அரசு இந்த வழக்குக்காக அளித்த விளக்கத்தில், 1974ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இருநாடுகளுக்குமிடையேயான ஒப்பந்தத்தின்படி 1976ஆம் ஆண்டுமுதல் அப்பகுதிகளில் இந்தியா கப்பல் செலுத்துவதை நிறுத்தியதைச் சுட்டிக்காட்டியதோடு, இந்திய நாட்டு மீனவர்களுக்கு கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்க உரிமையில்லை என்றும் விளக்கம் அளித்தது.

இதற்கு எதிராக நடைபெற்ற மனுதாரின் வாதத்தின் போது, 1974ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இருநாடுகளுக்குமிடையேயான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட உரிமைகளை மாற்றி தவறான தகவல்களை கூறுவதாக முறையிடப்பட்டது. மேலும், இந்த ஒப்பந்தம் தொடர்பாக 1974ஆம் ஆண்டில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சராகவிருந்த சுவரண்சிங் 1974ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் தேதி இந்திய பாராளுமன்றத்தில் பேசியபோது, கச்சதீவு பகுதியில் இரு நாட்டு மீனவர்களுக்கும் மீன்பிடி உரிமையும், இருநாட்டு மக்களுக்கும் இந்தப் பகுதியிலுள்ள ஆலயத்தில் வழிபாடு நடாத்தவும் உரிமை உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளதை எடுத்துரைத்து வாதாடப்பட்டது. எனினும், இந்திய உச்ச நீதிமன்றம் கச்சதீவு கடலில் மீன்பிடிக்க உரிமை இல்லை என்பதை திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.


ஆனால். தமிழகத்தில் மீண்டும் கச்சதீவை மீட்பதுதான் ஒரேவழி என குரல் எழுப்பப்படத் தொடங்கிவிட்டது. இப்போது, மூன்றாவது தடவையாக சென்னையில் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் சற்று மாறுதலாக, வருடத்தில் 83 நாள்கள் இலங்கைக் கடலில் மீன்பிடிக்க அநுமதி வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை தமிழக மீனவர்கள் முன்வைத்துள்ளனர்.

இரண்டு நாள் பேச்சுவார்த்தைக்காக சென்னை சென்ற இலங்கைக் குழுவினர் ஒரே நாளில் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு திரும்பினர். காரணம், 83 நாள்கள் என்ற விடயத்தில் தமிழக மீனவர்கள் திட்டவட்டமாக இருந்தனர். பேச்சு வார்த்தைக்குச் சென்ற இலங்கைக் குழுவினருக்கு இதில் முடிவெடுக்க அதிகாரம் இல்லை. எனவே, நாடு திரும்பிய பின் அறிவிக்கிறோம் என்று அவர்கள் தெரிவித்தனர். வட மாகாண மீனவர் சமாஜத்தின் தலைவர் எமிலியான் பிள்ளை இப் பேச்சுவார்த்தைக்குச் செல்லவில்லை. 'என்னை அழைக்கவில்லை' என்கிறார் இவர். பேச்சுவார்த்தைக்குச் சென்றவர்கள் விடயத்தில் மீனவர் பிரதிநிதிகளுக்கு திருப்தியில்லை. துடுப்பையோ, தோணியையோ, வள்ளத்தையோ, வலையையோ பார்த்திராதவர்களும் பேச்சுவார்த்தைக்குச் சென்றுள்ளனர் என்று இவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிய ஒரு விடயத்தில் தமிழக செய்தி ஊடகங்கள் விவாதமேடை நடாத்துகின்றன. 'அடுத்த நாட்டின் எல்லையைத் தாண்டுபவர்களைச் சுடுவதற்கான அதிகாரம் இருக்கிறது' என்றுதான் ரணில் விக்கிரமசிங்க கூறினாரே தவிர, எல்லை தாண்டும் மீனவர்களை சுடுவோம் என்று அவர் கூறவில்லை. ஆனால்,




A snapshot of Indian poaching in Sri Lankan waters.







எல்லைதாண்டும் மீனவர்களைச் சுடுவோம் என இலங்கைப் பிரதமர் கூறிவிட்டாரென்று தமிழக செய்தி ஊடகங்களில் தமிழக அரசியல்வாதிகள் விவாதம் நடத்தினர். தமிழகத்தில் விடுதலைச் சிறுத்தைகளும், சீமான் போன்றோரும் கடும் கண்டனத்தையும் வெளியிட்டிருந்தனர். இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் இலங்கை வந்தபோது பிரதமர் ரணில், தான் அவ்வாறு கூறியமைக்கு வருத்தத்தையும் தெரிவித்திருந்தார்.

தமிழக முதல்வராக செல்வி ஜெயலலிதா இருந்த காலத்திலிருந்து, தற்போதைய முதல்வர் பன்னீர்ச்செல்வம்வரையில் இலங்கையில் தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படுவதைச் சுட்டிக்காட்டி, இந்திய பிரதமருக்கு தொடர்ந்து கடிதம் எழுதிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், தமிழக மீனவர்கள் எல்லைதாண்டிச் செல்வதைத் தடுக்கவோ அல்லது செல்ல வேண்டாம் என்று அவர்களுக்கு அறிவுறுத்தல்கள் கொடுக்கவோ அவர்கள் முயலவில்லை.

பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றதன்பின்னர் மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வு கிடைத்துவிடும் என்று தமிழக மீனவர்கள் நம்பினர். தீர்வு என்று அவர்கள் எதிர்பார்ப்பது, இலங்கைக் கடல் எல்லைக்குள் சென்று, தாம் நினைத்தபடி மீன்பிடிக்கவேண்டும் என்பதுதான். இலங்கை மீனவர்கள் பற்றி அவர்களுக்கு கவலையில்லை. தமிழகத்தில் அநேகமானோருக்கு இந்த உண்மை தெரியும். ஆனாலும், அவர்கள் தெரிந்தும் தெரியாதவர்கள்போன்று இருக்கிறார்கள்.

பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் போது மீனவர்கள் பிரச்னைபற்றி ஏதாவது திட்டவட்டமான முடிவை எடுப்பார் என்று எதிர்பார்த்திருந்தபோதும் அவரும் இருநாட்டு மீனவர் பிரதிநிதிகளுக்கிடையேயான பேச்சுவார்த்தையின்மூலமே தீர்வுகாணப்படவேண்டும் என்று கூறிவிட்டார்.

கடற்றொழில் அமைச்சராகவிருந்த டாக்டர் ராஜித சேனாரத்தின தனது இந்திய விஜயத்தின்போது பிரதமர் மோடி உள்பட இந்திய அமைச்சர்களுக்கு தமிழக மீனவர்களின் ஆக்கிரமிப்பு முதல், இலங்கையில் கரையோர கடல் வளம் எவ்வாறு அழிக்கப்பட்டுள்ளது என்பதுவரை மிக மிக தெளிவாக ஆதாரங்களுடன் எடுத்துக்கூறியிருந்தார். அவர்களும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பிரதமர் நரேந்திர மோடி இலங்கையில் மீனவர்கள் பிரச்னைபற்றிப் பேசும்போது, இருதரப்பிலும் இது ஒரு சீவனோபாய, மனிதாபிமான பிரச்னை என்ற உணர்வோடு இது அணுகப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இலங்கை - இந்திய அரசியல் தலைவர்கள் அல்லது ராஜதந்திரிகளின் விஜயங்களின்போது நட்புரீதியான உறவை வலுப்படுத்தும் நோக்குடன், மீனவர்கள் பரஸ்பரம் விடுதலைசெய்யப்படுவது சம்பிரதாயமாகிவிட்டது.

தமிழ்நாட்டில், அரசியல் செல்வாக்கு மிக்கவர்களான இழுவைப் படகுகளின் உரிமையாளர்கள் மீனவர்களுக்கு நிர்ப்பந்தத்தைக் கொடுக்கும்போது மீனவர்கள் என்ன செய்யமுடியும்? எல்லை தாண்டியாவது தொழில்புரிய வேண்டும். இதனால், தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்பட்டாலும், வள்ளங்களை பாதுகாப்பில் வைத்துக்கொண்டு, மீனவர்களைமட்டும் விடுதலைசெய்யுமாறு அமைச்சர் ராஜீத சேனாரத்தின உத்தரவிட்டிருந்தார்.

இவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட படகுகள் பல விடுவிக்கப்பட்டன. முதற்கட்டமாக, ஒருதொகைப் படகுகளை தமிழக மீனவர்கள் எடுத்துச்சென்றுவிட்டனர்.

இலங்கை ஜனாதிபதி இந்தியா சென்றபோதும், இந்திய பிரதமர் இலங்கை வந்தபோதும் தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படுவது குறைந்தது. இது, வடபகுதி மீனவர்களுக்கு சந்தேகத்தையும் ஏற்படுத்தியது. அரசாங்கம் எங்களை கைவிட்டுவிட்டது; கடற்படையும் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கிறது. தமிழக மீனவர்களின் வருகை மட்டும் குறையவேயில்லை என்று வடபகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

வடபகுதி மீனவர்களின் இந்தக் கருத்துக்கு முற் றுப்புள்ளிவைக்கும் விதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் யாழ்ப்பாணத்தில் அவர்களைச் சந்தித்துப் பேசியபோது, தமிழக மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புள் நுழைந்தால் கைதுசெய்யப்படுவார்கள்; கடற்படையினரின் கைதுசெய்யும் நடவடிக்கை தொடரும் என்று திட்வட்டமாக அறிவித்தார். இந்த அறிவிப்பு வடபகுதி மீனவர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. அதேவேளை, தமிழக மீனவர்களுக்கு குழப்பத்தையும் அது ஏற்படுத்தியிருக்கிறது.

அண்டை நாட்டு எல்லைக்குள் அத்துமீறி நுழைகிறோம் என்பதை இன்னமும் தமிழக மீனவர்கள் புரிந்துகொள்கிறார்களில்லையா அல்லது அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்களா என்ற சந்தேக வினா வலுப்பெறுகிறது. ■

# நிலக்கீழ் நீரில் கலந்த கழிவு எண்ணெய்



**சுன்னாகம் அனல் மின் நிலையத்திலிருந்து பரவியதாக கருதப்படும் கழிவு எண்ணெய், குடாநாட்டில் வாழும் நாலு லட்சம் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம்**

தொகுப்பு: மைந்தன்

யாழ்ப்பாண குடாநாட்டில் கழிவு எண்ணெய் மாசு நிலக்கீழ் நீரில் கலந்தமை மிகவும் பாரதூரமான விளைவை ஏற்படுத்தப்போகின்றது. யாழ்ப்பாணத்தின் வலிகாமம் பிரதேசத்தில் குறிப்பாக, சுன்னாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, உடுவில், மானிப்பாய், சண்டிருப்பாய், சங்கானை, சுதுமலை, தாவடி, கொக்குவில் ஆகிய பிரதேசங்களில் உள்ள கிணறுகள் பலவற்றில் குடிதண்ணீருடன் எண்ணெய் மாசாக கலந்திருப்பது அப்பகுதி மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது; அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இதில், பதினோராயிரத்து 472 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 856 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. கூடவே, எண்ணெய் மாசு வடமாகாணசபைமீதும், இலங்கை அரசுமீதும் கடுமையான விமர்சனங்களை முன்வைக்கும் விடயமாகவும் ஆகியிருக்கிறது.

சுன்னாகம் அனல் மின் நிலையத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள கிணறுகளில், இலங்கை தரநிர்ணய நிறுவகத்தால் குடிநீரில் இருக்கலாமென அநுமதிக்கப்பட்ட எண்ணெய் மாசின் அளவைவிட (1 மில்லிகிராம்/லீற்றர்) அதிக அளவில் எண்ணெய் மாசாக உள்ளது என, 2012ஆம் ஆண்டிலேயே தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையின் நீர்ப்பகுப்பு ஆய்வுகளிலிருந்து அறியமுடிகிறது. இதே கிணறுகளில், 2014ஆம் ஆண்டில் இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபை மேற்கொண்ட ஆய்வுகளிலும் எண்ணெய் மாசு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையில் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் வலிகாமம் நிலத்தடி நீரின் எண்ணெய் மாசு தொடர்பாக சமர்ப்பித்த அறிக்கையில், நிலத்தடி நீரில் எண்ணெய் மாசு கலந்திருப்பதற்கு சுன்னாகத்தில் உள்ள அனல் மின் நிலையமே காரணமாக கருதப்படுகிறது என்றும், 1958ஆம் ஆண்டுமுதல் சுன்னாகத்தில் அனல் மின் நிலையம் இயங்கிவருகிறது என்றும் குறிப்பிட்டார். அவர் முன்வைத்த காரணங்கள் வருமாறு:

1. ஆரம்பத்தில் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான டீசல் அனல் மின்பிறப்பாக்கியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. யுத்தகாலத்தில் விமான குண்டுவீச்சால் சேதமடைந்த எரிபொருள் தாங்கியிலிருந்து ஆயிரத்து 500 கன மீற்றருக்கும் அதிகமான டீசல் வெளியேறியுள்ளது. ஒரு பகுதி டீசல் எரிந்துபோக, பெரும்பகுதி அருகாமையில் உள்ள தாழ்வான குளத்தைநோக்கி வடிந்தோடியுள்ளது. இது ஊர் மக்களால் குளம் என அழைக்கப்பட்டுள்ளது.

2. இதன்பின்னர் சுன்னாகம் அனல் மின் நிலைய வளாகத்தில் 2009ஆம் ஆண்டுவரை 'அக்றிக்கோ' என்னும் நிறுவனத்தால் டீசல் மின் பிறப்பாக்கிமூலம் மின்சாரம் உற்பத்திசெய்யப்பட்டது. போர்க்காலம் என்பதால் இப்பகுதியினுள் வேறுயாரும் சென்றுவரமுடியாத நிலையில், சுற்றாடல் அதிகாரிகளால் எவ்வித கண்காணிப்பும் மேற்கொள்ளப்படவில்லை. நிலத்தடி நீரை மாசுறுத்தியதில் அக்றிக்கோ நிறுவனத்துக்கும் பங்கு இருப்பதாக மத்திய சுற்றாடல் அதிகாபர சபையின் அறிக்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3. அக்றிக்கோ நிறுவனத்தின் பின்னர், 'நொதேர்ண் பவர்' என்ற நிறுவனம் நீதிமன்றத்தால் அண்மையில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்படும்வரை டீசல் மின் பிறப்பாக்கிகளின்மூலம் மின் பிறப்பித்துவந்துள்ளது. 2013ஆம் ஆண்டே இந் நிறுவனத்துக்கு சுற்றாடல் பாதுகாப்பு அநுமதி இலங்கை முதலீட்டுச் சபையால், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஒப்புதலுடன் வழங்கப்பட்டுள்ளது. அதுவரை



யில், இந்நிறுவனமும் சுற்றாடல் தொடர்பான அக்கறையின்றியே இயங்கியிருக்கிறது. அக்றிக்கோ நிறுவனம் எண்ணெய்க் கழிவுகளை வெளியேற்றிய இடத்திலேயே இந் நிறுவனமும் தொடர்ந்து அதனை வெளியேற்றிவந்திருக்கிறது. அத்தோடு, இந் நிறுவனத்தின் மின்பிறப்பாக்கி புதியது அல்ல. வெளிநாட்டிலிருந்து பாவித்த நிலையிலேயே தருவிக்கப்பட்டுள்ளது.

4. சுன்னாகம் அனல் மின்நிலைய வளாகத்தில் 2014ஆம் ஆண்டுமுதல் இலங்கை மின்சார சபை ‘உதுறு ஜனனி’ என்ற மின் நிலையத்தை இயக்கிவருகிறது. நவீன இலத்திரனியல் தொழில்நுட்பத்துடன்கூடிய புதிய மின்பிறப்பாக்கி என்பதால், இதுவரையிலும் சுற்றுச்சூழலுக்கு இதனால் எவ்வித பாதிப்பும் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

தூய குடிநீர் பெறுவது ஒருவரின் அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று. அதை வழங்கவேண்டியது அரசின் தார்மீக கடமை. அந்தவகையில், நிலத்தடி நீரில் எண்ணெய் மாசாக கலந்திருக்கும் இவ் விவகாரத்தை உரிய முறையில் எதிர்கொண்டு, மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீரைக் கிடைக்கச்செய்யவேண்டிய பொறுப்பு இலங்கை மத்திய அரசுக்கு மாத்திரமல்லாமல் வடக்கு மாகாண சபைக்கும் உண்டு. அதனடிப்படையில், வட மாகாணசபை இது தொடர்பாக சில நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகிறது.

1. குடிநீர் விநியோகம் - பாதிக்கப்பட்ட வலி. தெற்கு, வலி. வடக்கு பிரதேச சபைகள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் குடிநீரை விநியோகித்துவருகின்றன. இப் பிரதேச சபைகளுடன் இணைந்து வடமாகாண விவசாய அமைச்சுக்கு உள்பட்ட நீர்வழங்கல் பிரிவின் நீர்த்தாங்கி வாகனங்களின் மூலமும் நீர் விநியோகிக்கப்பட்டுவருகிறது. மத்திய அரசின் அனர்த்த முகாமைத்துவ பிரிவும் நீர்வழங்கல் வடிகால் சபையும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன. மருதங்கேணியில் அமையவுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின்மூலம் பாதிக்கப்பட்ட இப்பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் எதிர்காலத்தில் குடிநீர் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

2. நிபுணர் குழு - விஞ்ஞான ஆய்வுகளின்மூலம் பெறப்படும் துல்லியமான முடிவுகளே சரியான தீர்வுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் அவசியம் என்பதால், வடக்கு மாகாண முதலமைச்சரின் பணிப்பின்பேரில் நிலத்தடி நீரில் எண்ணெய் மாசு தொடர்பாக ஆராய்வதற்காக நிபுணர் குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துறைசார் வல்லுநர்களைக் கொண்டுள்ள இந்நிபுணர் குழு, எண்ணெய் மாசின்மூலம் அது பரவும் திசை, குடிநீரில் உள்ள மாசுக்களின் வகைகள் மற்றும் அளவுகள், எண்ணெய் மாசு இப்போதும் பரவுமாயின் அதனைத் தடுப்பதற்கான பொறிமுறைகள், எண்ணெய் மாசை இல்லாமல் செய்வதற்கான வழிமுறைகள் போன்றவற்றைக் கண்டறியும் நோக்கில் ஆய்வுகளை முன்னெடுத்துவருகின்றது.

இவர்களது ஆய்வுக்கு கொழும்பில் இயங்கும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகமும் அநுசரணை வழங்கிவருகிறது. இது, இலங்கை மத்திய அரசுக்கு சொந்தமான நிறுவனம் ஆகும். இந் நிறுவனத்தின் ஆய்வாளர்கள் யாழ்ப்பாணம் வந்து, வடமாகாண நிபுணர் குழுவுடன் இணைந்து நீர்மாதிரிகளை ஆய்வுக்காக எடுத்துச் சென்றிருக்கின்றனர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் தொண்டைமானாற்றில் அமைந்துள்ள வடமகாண நீரியல் ஆய்வு மையத்திலும் இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. றேடார் உபகரணத்தைப் பயன்படுத்தி, நிலத்தின் கீழுள்ள எண்ணெயின் இருப்பிடத்தைக் கண்டறிவதற்காக வடமாகாண அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு மில்லியன் ரூபாவை ஒதுக்கீடுசெய்ய ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 1.3 மில்லியன் ரூபா பெறுமதியான கருவியொன்றை அமெரிக்காவிலிருந்து உடனடியாகத் தருவிப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தமது அன்பளிப்பாக இதனை வழங்கவுள்ளனர்.

சுன்னாகம் அனல் மின்நிலையம் தவிர்ந்த வேறு காரணிகளும் எண்ணெய் மாசுக்குக் காரணமாக அமைந்துள்ளனவா என்பது தொடர்பிலும் நிபுணர் குழு கவனம் செலுத்தும்.

3. தூய குடிநீருக்கான செயலணி - மாகாண சபை தனித்து இயங்காமல் மத்திய அரசின் துறைகளும் இணைந்து செயல்பட்டாலே தீர்வினை விரைந்து எட்டமுடியும் என்பதால் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கி வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மற்றும் விவசாய அமைச்சரின் இணைத் தலைமையின்கீழும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் துணைத் தலைமையின் கீழும் தூய குடிநீருக்கான செயலணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலணி வாராவாரம்கூடி இதுவரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்பற்றி மீளாய்வு செய்வதோடு அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் தீர்மானிக்கிறது.

வடக்கு மாகாண சபை எதிர்கொள்ளும் சவால்கள்பற்றியும் வடக்கு விவசாய அமைச்சர் அந்த அறிக்கையில் தெரி

வித்திருக்கிறார்:

1. நிலத்தடி நீரில் எண்ணெய் மாசு என்பது வடக்குக்கு மாத்திரமல்ல, இலங்கைக்கே இதுவரையில் முன்னுதாரண மற்ற ஓர் அனர்த்தம் என்பதால் இதனை எதிர்கொள்வதில் சில தடங்கல்களும் தயக்கங்களும் நிலவுகின்றன. இதனால் பொருத்தமான நடவடிக்கைகளை அடையாளம் கண்டு செயல்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

2. குடிநீரில் எண்ணெய் மாசு தொடர்பாக விழிப்பு ணர்வை ஏற்படுத்தவேண்டும் என்றும் விரைந்து நடவடிக் கைகளை எடுக்கக் கோரியும், பாதிக்கப்பட்ட பிரதேச மக்க ளும், மருத்துவர்களும் கவனயீர்ப்பு நிகழ்ச்சிகளை தூய நோக்கோடு ஏற்பாடுசெய்து வந்துள்ளனர். இது அவசியமா னதும்கூட. ஆனால், இந்த ஜனநாயக வாய்ப்பைப் பயன்ப டுத்தி பிரச்னையின் பரிமாணத்தை மிகப் பன்மடங்காக உருப்பெருப்பித்துச் சுய லாபம்பெற பல்வேறு சக்திகளும் களம் இறங்கியுள்ளன.

சுன்னாகம் முதல் காங்கேசன்துறை வரையிலான பிரதே சவாழ் மக்கள் எண்ணெய் மாசு தொடர்பான அபாயத்தை எதிர்நோக்குகிறார்கள் யாழ்ப்பாணத்தில் குடிப்பதற்கு உகந்த நன்னீர் உள்ள மூன்று இடங்களில் சுன்னாகம் மற்றும் அதை அண்டிய பிரதேசம் முதன்மையானது. இங்கிருந்தே காங்கேசன்துறை முதல் மதவாச்சிவரை புகையிரதமூலம் நீர்விநியோகம் 1990கள் வரை நடைபெற்றது. வடமராட்சி கிழக்கின் வல்லிபுரம் மற்றும் மணற்காட்டு பிரதேசத்திலும் நன்னீர்ப்படுக்கைகள் காணப்படுகின்றன. தீவகத்தின் அல் லைப்பிட்டியும் குடிப்பதற்குகந்த நன்னீர்ப் படுக்கைகளைக் கொண்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளிவரும் கழிவு எண்ணெய் மற்றும் கிறீஸ் ஆகியன நிலத்தடி நீரில் கலப்பதால் உயிரினங்கள் வாழமுடியாத பேரழிவு அபாயத்தை வலிகாமம் தெற்கு மற் றும் வடக்குப் பிரதேசம் எதிர்நோக்குகிறது.

இலங்கை மின்சார சபை சுன்னாகத்தில் 1958 முதல் மின் உற்பத்தியில் ஈடுபட்டுவருகிறது. காலப்போக்கில் இம் மின் உற்பத்தி நிலையமானது லக்சபானாவிலிருந்து வரும் தேசிய மின் வழங்கலுடன் இணைக்கப்பட்டது. போர் நடைபெற்ற காலத்தில் லக்சபானா இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலை யில் வடபகுதிக்கான, குறிப்பாக யாழ் மாவட்டம் முழுவதற்கு மான மின்சாரத்தை சுன்னாகம் மின் உற்பத்தி நிலையமே மின்பிறப்பாக்கிகள்மூலம் வழங்கிவந்தது. இலங்கை மின் சார சபை காலத்துக்குக்காலம் வெவ்வேறு தனியார் நிறுவ னங்களை ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தி மின் உற்பத்தியில் ஈடுபட்டுவந்தது. 2013இல் மீண்டும் இம் மின் உற்பத்தி நிலையமானது லக்சபானவுடன் இணைக்கப் பட்டது. தற்போது யாழ் குடாநாடு முழுமைக்குமான மின் சாரமானது தேசிய மின் வலையமைப்பிலிருந்தே வழங்கப்ப டுகிறது. அத்துடன், நொதேர்ண் பவர் மற்றும் உதுறு ஜெனனி ஆகியவற்றின்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சா ரமானது மின்னமுத்த சீராக்கலுக்கு மட்டுமே பயன்படுத்தப் படுகிறது.

கடந்த 2012 முதல் மின் உற்பத்தி நிலையத்துக்கு வடக்கு மற்றும் கிழக்காக உள்ள விவசாய நிலங்கள் மற்றும் வீடுக ளில் கிணறுகளில் எண்ணெய்க் கசிசவுகள் தெரிய ஆரம் பித்தன. 2013இல் நிலத்தடி நீரில் மேலும் பரவ ஆரம்பித்த கழிவு எண்ணெய்ப் படலம் 2014இல் யாழ்ப்பாணத்தில் நில விய வரட்சி காரணமாகவும் மேலும் பல கிலோ மீற்றர்க ளுக்கு பரவியது.

நிலத்தடி நீரில் பரவிவரும் கழிவு எண்ணெய் காங்கேசன் துறைவரை பரவும் அபாயம் இருப்பதாக ஆரம்ப கட்ட ஆய் வுகள் தெரிவிக்கின்றன. சுன்னாகம் கிழக்கு, வடக்கு, மயி லணி, சூராவத்தை, ஏழாலை, ஊரெழு, மல்லாகம், புன்னா லைக்கட்டுவன், கட்டுவன், குப்பிளான் வரையான பகுதிக ளில் நிலத்தடி நீரில் எண்யெயும் கிறீசும் முதலில் கலக்கத் தொடங்கியது. மழை பெய்ய ஆரம்பித்த பின்பு தினமும் புதிய இடங்களுக்கு எண்ணெய் பரவியது.

நீண்ட காலமாக இயங்கிவரும் சுன்னாகம் மின் நிலையத் தால் திடீரென பாதிப்பு எவ்வாறு ஏற்பட்டது? பாதிப்பு ஏற் பட்டிருப்பதுபற்றி பொதுமக்கள் வலி. தெற்கு பிரதேச சபைக்கும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ் பிராந்திய அலுவலகத்துக்கும் அறிவித்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் ஏன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை? உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையோ யாழ்ப்பாணத்தில் இயங்கும் மத்திய சுற் றாடல் அதிகார சபையோ யாழ் பல்கலைக்கழக விவசாய பீடமோ இவ்விடயம் குறித்து அக்கறை காட்டாது இப் பிர தேச மக்களை, விவசாயத்தை, உயிரினங்களை, நீர்வளத்தை பாதுகாக்க முற்படாமல் இரண்டு ஆண்டுகளாகியும் மௌனமாக இருப்பது ஏன்? என்ற இக் கேள்விகள் பொது மக்கள் மத்தியில் நிலவுகின்றன.

2012இல் மின் நிலையத்துக்கு கிழக்கு பகுதியில் உள்ள பத்துக்கும் அதிகமான குடியிருப்பாளர்களும் விவசாயிக ளும் கிணற்றில் உள்ள எண்ணெய்ப்படலம் குறித்து முறை யிட்டிருக்கிறார்கள். அன்று, இதுதொடர்பில் உரியவர்கள் அக்கறைகாட்டி, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப் பைத் தடுக்க முன்வராததால் இன்று இம் மின் நிலையத்திலி ருந்து வெளியேற்றப்படும் கழிவு எண்ணெய் மற்றும் கிறீஸ் ஆகியன பல கிலோ மீற்றர்கள்வரை பரவியுள்ளது.

“கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் எமக்கு தொண் டையில் கடி, தண்ணீரை விழுங்கினால் விளாங்காய்க் கயர் அடைப்பதுபோல் இருந்தது. தலைவலி இருந்தது. தண்ணீ ரைப் பரிசோதித்ததில் எண்ணெய் கலந்திருப்பது தெரியவந் தது. வீடு கழுவினால் நிலம் ஒட்டுவதுபோல் இருக்கும். உடைகளைத் தோய்த்தால் கராஜில் வேலைசெய்பவர்களு டைய உடைபோல் மாறிவிடும்'' என்று சுன்னாகம் கிழக்கு பகுதியில் வாழும் பொதுமகன் ஒருவர் குறிப்பிடுகிறார்.

எண்ணெய் கலந்த கிணற்று நீரை நீண்ட நாள்கள் பலர் அருந்தியிருக்கிறார்கள். பெரும்பாலானோருக்கு தொடர்ச் சியான வயிற்றுளைவும் வயிற்றுப்போக்கும் இருந்தது. கிணற்று நீரைப் பரிசோதித்தபோது எண்ணெயும் கிரீசும் கலந்திருப்பது உறுதியானது.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியே றும் கழிவு எண்ணெயும் ஏனைய கழிவுகளும் ஆரம்ப நாள் களில் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டன. பின்னர், காலப் போக்கில் மின் நிலையச் சூழலில் உள்ள ஒதுக்குப்புறமான நிலத்திலே விடப்பட்டுவந்தது. ஆரம்ப நாள்களில் மரத்தா லான மின்கம்பங்கள் கறையான் முதலானவற்றால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காக நிலத்திலே கொட்டப் பட்ட எண்ணெயில் ஊறவிடப்பட்டே வீதிகளில் நாட்டப் பட்டன. தற்போது சீமெந்து தூண் பயன்படுத்தப்பட்டுவரு கிறது. இவ்வாறு கொட்டப்பட்ட எண்ணெய் ஒருகட்டத் தில் பாழடைந்த கிணறு ஒன்றினுள் விடப்பட்டது. கிணற் றினுள் கருங்கற்கள் போடப்பட்டு எண்ணெய் விடப்பட்

டது. கிறேசர் போடப்பட்டு இக் கிணறு மூடப்பட்டது. அண்மைக்காலத்தில் நிலத்திலே துளையிட்டு கிணறுகள் தோண்டப்பட்டு கழிவு எண்ணெய் உட்செலுத்தப்பட்டது என சந்தேகிக்கப்படுகிறது. நிலத்திலே உள்ள கழிவு எண்ணெய்த் தாங்கிக்கு மேலாக கட்டடம் ஒன்று இருப்பதாக பணிபுரியும் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது நிலத்திலே விடப்பட்ட எண்ணெயும் கிணறுகளும் மறைக்கப்பட்டுள்ளன. எண்ணெய் நிலநீர் மட்டத்தைவிட பல மடங்கு உயரத்துக்கு சேமிக்கப்பட்டதால் அழுத்தம் காரணமாக நீரூற்றினுள் வேகமாக கலக்க ஆரம்பித்தது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை 2012 முதல் 2014 ஒகஸ்ட் வரையான காலப் பகுதியில் சுன்னாகத்தில் உள்ள 150 கிணறுகளைப் பரிசோதித்ததில் 109 கிணறுகளில் (73 சதவீதம்) நியம அளவைவிட மிகவும் உயரளவு எண்ணெயும் கிறீசும் கலந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. சுன்னாகம் மின் உற்பத்தி நிலைய வளாகத்துள் உள்ள கிணற்றில் 24.42 மில்லிகிராம் எண்ணெயும் கிறீசும் காணப்பட்டது. அதேவேளை, பொக்கணை முருகன் கோவில் கிணற்றில் 3.27 மில்லிகிராம் எண்ணெயும் கிறீசும் காணப்பட்டது. சுன்னாகம் கிழக்கு பகுதியில் உள்ள அநேக வீடுகளில் 2 தொடக்கம் 8 மில்லிகிராம் வரையிலான எண்ணெயும் கிறீசும் கலந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இலங்கைச் சட்ட நியமங்களின்படி நீரில் ஒரு மில்லிகிராமைவிட கூடுதலாக பெற்றோலியக் கழிவுகள் கலந்திருப்பின் மனித பாவனைக்கு உகந்ததல்ல என்று தேசிய நீழ்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவுறுத்துகின்றது. எனினும், சர்வதேச நியமத்தின்படி 0.2 மில்லிகிராமைவிட கூடுதலாக எண்ணெய் நீரில் கலந்திருப்பின் அந்நீரை மனித பாவனைக்கு எடுக்கமுடியாது.

ஆரம்பத்தில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உள்பட்ட பகுதி நிலத்தடி நீரே பாதிப்படைந்தது. தற்போது தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரதேசத்துக்கு உள்பட்ட மல்லாகம் பகுதியில் உள்ள கிணறுகளில் எண்ணெய் பரவ ஆரம்பித்துள்ளது. இந்நிலையில், மல்லாகம் நீதிமன்றில் இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் சுன்னாகம் கிழக்கு பகுதியில் பாதிக்கப்பட்ட 11 பொதுமக்களும் இலங்கை மின்சார சபைக்கு எதிராக தனித்தனியாக வெவ்வேறு வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

இயற்கைமீதான பேரிடர் நிகழ பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகிறது

1. சுன்னாகத்தில் இலங்கை மின்சாரசபைக்குரிய உபமின் நிலையம் அமைப்பதற்கு 1958இலேயே உரிய முறையில் அநுமதி அளிக்கப்படவில்லை என 1980களில் பொறியியலாளராகவிருந்து ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார். பிரதேசத்தை ஆய்வுசெய்த குழு சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பைச் சுட்டிக்காட்டி, இம் மின் நிலையத்தை வேறு இடத்தில் அமைக்க ஆலோசனை வழங்கியிருந்தது.

2. கடந்த 2009முதல் இலங்கை மின்சாரசபை ஆதனத்தில் இயங்கிவரும் தனியாருக்கு சொந்தமான நொதேர்ண் பவர் கம்பனியானது பிரதேச சபைகள் சட்டத்தின்கீழ் மின் உற்பத்தி நிலைய நிருமாணத்துக்கான அநுமதி எதனையும் பெற்றிருக்கவில்லை.

3. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளுக்கும் நியமங்களுக்கும் முரணாக, பிரதேச மக்களது சுகாதாரத்துக்கும் உடல் நலத்துக்கும் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் கழிவு எண்ணெய் பாரிய அளவில் நிலத்தினுள் விடப்பட்டமையால் அக்கழிவு எண்ணெய் நிலத்தடி நீரோட்டத்துடன் கலந்து தற்போது பல கிலோமீற்றர்கள்வரை பரவியுள்ளது.

4. பாதிக்கப்பட்ட பொதுமக்களும் சமூக நலன்விரும்பிகளும் வலிகாமம் தெற்கு பிரசேத சபை, சுற்றாடல் அதிகார சபை மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ் பணிமனை முதலான சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிட்டுள்ளனர்.

5. சுற்றாடல் மாசுபடுதலைத் தடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ள சுற்றாடல் அதிகார சபையினர் இவ்விடயத்தில் தலையிட்டு நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்கத் தவறியதுடன், நொதேர்ண் பவர் கம்பனி, இலங்கை மின்சார சபை, 2009க்கு முன்னர் இலங்கை மின்சார சபைக்காக மின் உற்பத்தி செய்த ஏனைய நிறுவனங்களுக்கும் காலத்துக்குக் காலம் உரிய அநுமதிப் பத்திரங்களை வழங்கி சுற்றாடலை மாசுபடுத்துவோரை பாதுகாத்துவந்துள்ளனர்.

6. வலிதெற்கு பிரதேச சபையானது பிரதேச சபைச் சட்டங்களுக்கு அமைவாக இலங்கை மின்சார சபைக்கு எதிராக 2012இல் வழக்கு தாக்கல் செய்திருப்பின் சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் மின் உற்பத்தியை நிறுத்தி, நிலத்தடி நீரில் கலந்துள்ள எண்ணெயை அகற்றுவதற்கு நீதிமன்றின் மூலம் நடவடிக்கை எடுத்திருக்கமுடியும். பொது மக்களது முறைப்பாட்டையடுத்தாவது உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்திருப்பின் பேராபத்திலிருந்து இந் நன்னீர் வளத்தையும் அங்கு வாழும் மக்களையும் பாதுகாத்திருக்கமுடியும்.

கழிவு எண்ணெய் கலந்த நீரை பாவனைக்கு அநுமதிப்பது ஒரு சமூகத்தின் அழிவுக்கே அதனை இட்டுச்செல்லும். கழிவு எண்ணெய் கலந்த நீரை அருந்துவதால் தோல், நுரையீரல், இரத்தப் புற்றுநோய், சிறுநீரக செயலிழப்பு, வலிப்பு போன்ற குணப்படுத்தமுடியாத நோய்கள் ஏற்படுமென மருத்துவரீதியாக தெரிவிக்கப்படுகிறது. கழிவு எண்ணெய் அடங்கிய நீரை விவசாய தேவைகளுக்கு பயன்படுத்துவதால் கழிவு எண்ணெயில் கலந்துள்ள பார உலோகங்கள் விவசாய விளைபொருள்களிலும் கலந்து, உடல்நலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இந் நீரை கால்நடைகள் அருந்துவதால், அவற்றை உணவாகக் கொள்வோருக்கு அதிக பாதிப்புகள் ஏற்படும்.

யாழ். குடாநாட்டின் நிலத்தடி நீரில் மலம், ஈயம், நச்சு உலோகம், கழிவு எண்ணெய் ஆகியன கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ள நிலையில் குடாநாட்டில் வாழும் நாலு லட்சம் மக்கள் இதனால் பாதிப்புக்களை எதிர்கொள்ளும் அபாயத்தில் உள்ளதாக யாழ் மாவட்ட தொற்றுநோய் தடுப்பு அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இந் நீரைப் பருகும் மக்களுக்கு புற்றுநோய், மலட்டுத்தன்மை, மூளை வளர்ச்சி குறைதல், சிறுநீரக பாதிப்பு, குறைபாடுள்ள குழந்தைகள் பிறத்தல் போன்ற பல சிக்கல்கள் உருவாக வாய்ப்புண்டு. இதனால், வலிகாமம் பகுதியில் நான்கு இலட்சம் மக்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

எனினும், நோய்த்தாக்க அறிகுறிகளை இன்னமும் 5 தொடக்கம் 10 வருடங்களிலேயே உணர்ந்துகொள்ளமுடியும். எனவே, இந்த மிகப் பெரிய பாதிப்புகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு அவசியமானது என்று அந்த அதிகாரி தெரிவிக்கிறார். ■

# ஒரு நாள் போட்டிகளில் ஒரு புத்தார்வம்

ஒவ்வொரு தொடரும் பலவித மாற்றங்களுக்கு உள்ளாகும்; பல சாதனைகள் முறியடிக்கப்படும்; எல்லைகள் விரியும். ஆனால், சில விஷயங்கள் எப்போதும் மாறுவதே இல்லை. அவுஸ்திரேலியாவின் ஆதிக்கம் அவற்றில் ஒன்று. நம்பிக்கையை அளித்துவிட்டு ஏமாற்றும் இந்தியாவின் பழக்கமும், நெருக்கடியில் திணறிச் சரியவிடும் தென்னாபிரிக்காவின் பழக்கமும், கிரிக்கெட்டைக் கண்டுபிடித்தும் உலக கிண்ணத்தை வெல்லமுடியாத இங்கிலாந்தின் இயலாமையும் மாறாமல் தொடர்கின்றன. கடுமையான போட்டிகளும், போட்டியே இல்லாத அலுப்பூட்டும் ஆட்டங்களும்கொண்ட இந்தத் தொடர், ஒரு விஷயத்தைத் தவறாமல் செய்தது. ஒருநாள் போட்டிகளின்மீதான ஆர்வத்தைப் புதுப்பித்திருக்கிறது. அதுவே இந்தத் தொடரின் மிகப்பெரிய தாக்கம் எனச் சொல்லலாம்.

இருபது ஓவர் போட்டி என்னும் கிரிக்கெட்டின் சுருங்கிய வடிவத்தால் இன்றைய இளம் ரசிகர்கள் அதிகம் கவரப்பட்டிருப்பதுபோலவும், கிரிக்கெட் வாரியங்களும் அவற்றுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பதுபோலவும் கடந்த சில ஆண்டுகளாக ஒரு கருத்து உலாவிவருகிறது. கிரிக்கெட் உலகில் நடப்பவையும் அக்கருத்துக்கு வலு சேர்ப்பனவாகவே இருந்துவந்தன. மறுபுறம், கிரிக்கெட்டை அதன் அழகியல் மற்றும் செறிவுக்காக ரசிப்பவர்கள் அவ்விளையாட்டின் நெடுங்கால வடிவமான 'டெஸ்ட்' போட்டிகள் மீது கவனம் குறைவதுகுறித்து அங்கலாய்த் துவருகிறார்கள்.

இடைப்பட்ட வடிவமான ஐம்பது ஓவர்கள்கொண்ட ஒருநாள் போட்டிகள்பற்றி யாரும் பெரிதாக அக்கறைப்படவில்லை. அவ்வடிவம் விலக்கப்பட்டுவிடும் என்றுகூட பேச்சுக்கள் எழுந்தன.

ஆனால், நடந்துமுடிந்த உலக கிண்ண போட்டிகளுக்கு இருந்த வரவேற்பு இந்தப் பேச்சுக்களை அர்த்தமிழக்கச் செய்தன. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் கிரிக்கெட் உலக கிண்ண போட்டிகளுக்கு 2015இலும் வழக்கமான மவுசு குறையவில்லை.

இம்முறை, உலக கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றியுள்ளது. அவ்வணி வெற்றிவாகை சூடுவது ஐந்தாவது முறை. ஒன்றுக்கு மேற்பட்ட தடவை இக் கிண்ணத்தை வென்றிருக்கும் ஏனைய அணிகள் இந்தியாவும் மேற்கிந்திய தீவுகளும்தான். இவ்விரு அணிகளும் தலா இருமுறை வென்றிருக்கின்றன.

இம்முறை அவுஸ்திரேலியா வென்றாலும், வழக்கம்போல அது எதிர்பார்க்கப்பட்டதாக இருக்கவில்லை. 1999இலிருந்து உலக கிண்ணத் தொடர்களின் ஒரு போடிட்டியில்கூட தோற்றிராத அவ்வணி 2011இல் கால் இறுதியில் இந்தியாவிடம் தோற்று வெளியேறியது. 2015இலும் முதல் சுற்றில் நியூசிலாந்து அணியிடம் தோற்றது. இங்கிலாந்து அணியைத் தவிர டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் தகுதி பெற்ற இதர ஒன்பது அணிகளும் தொடரில் வலிமையை வெளிப்படுத்தின. அவுஸ்திரேலியாவுக்கு இணையாக இந்தியா, நியூ சிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய அணிகள்மீதும் நம்

**ஒவ்வொரு தொடரும் பலவித மாற்றங்களுக்கு உள்ளாகும்; பல சாதனைகள் முறியடிக்கப்படும்; எல்லைகள் விரியும். ஆனால், சில விஷயங்கள் எப்போதும் மாறுவதேயில்லை. அவுஸ்திரேலியாவின் ஆதிக்கம் அவற்றில் ஒன்று**

கோபாலன்




பிக்கை ஏற்பட்டது.

ஆனால், அரை இறுதியில் இந்தியா, இறுதிப் போட்டியில் நியூசிலாந்து என இரு வலிமையான அணிகளையும் அநாயாசமாக எதிர்கொண்டு எளிமையாக வென்றது அவுஸ்திரேலியா. இந்தியாவும் நியூசிலாந்தும், தொடரில் முன்னர் ஆடிய அனைத்து போட்டிகளிலும் வெற்றிபெற்றிருந்ததால் உண்டான நம்பிக்கைகளை தவிடுபொடியாக்கியது அவுஸ்திரேலிய அணி. முதல் சுற்றுப் போட்டியில் நியூசிலாந்து அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்திருந்தது. ஆனால், அதிலும் கடைசிவரை போராடித் தோற்றது. மற்றைய போட்டிகள் அனைத்திலும் வென்று சீராக முன்னேறி, இறுதிக் கட்டப் போட்டிகளில் எதிரணியை எத்தருணத்திலும் முன்னிலை எடுக்கவிடாமல் ஒற்றைமுனைப் போட்டியாக மாற்றி வெற்றிபெற்று, உலக கிண்ணத்தை உயர்த்திப் பிடித்தது. ஆஸி. கப்டன் மைக்கல் கிளார்க்கின் கையில் பிரகாசித்த அந்தக் கிண்ணமும் அந்தக் கிண்ணத்தைவிடவும் ஒளிர்ந்த கிளார்க்கின் முகமும் 2011, அவுஸ்திரேலியாவின் ஆதிக்கத்துக்கு ஒரு விதிவிலக்கு என்ற செய்தியையே உணர்த்தின.

ஆனால், மற்றைய அணிகளும் சில போட்டிகளிலேனும் பாராட்டும் விதமாகவும் நம்பிக்கைதரும் வகையிலுமான ஆட்டத்தை வெளிப்படுத்தின. 2011இல் உலக கிண்ணத்தை வென்ற பின் துணைக்கண்டதுக்கு வெளியே அந்நிய மண்ணில் ஒரு டெஸ்ட் தொடரைக்கூட வென்றிராத இந்திய அணி, அவுஸ்திரேலியாவிடமும் நியூசிலாந்திடமும் அவர்கள் மண்ணில் படுதோல்விகளைச் சந்தித்திருந்தபோது, அவ்விரு நாடுகளில் நடக்கும் உலக கிண்ணத்தை இந்தியா வெல்லும் என்று தொடர் தொடங்கும்போது யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், பாகிஸ்தானுடனான முதல் போட்டியில் வென்றவுடன் 'திருப்பித் தரமாட்டோம்' என்ற வாசகத்தை இந்திய ரசிகர்கள் உற்சாகமாக உச்சரிக்கத் தொடங்கினர். அடுத்த போட்டியில் வலிமைமிக்க தென்னாபிரிக்காவை வென்றதும் உற்சாகம் பன்மடங்கானது. முதல் சுற்றில் இந்தியா எதிர்கொண்ட மேற்கிந்திய தீவுகள், சிம்பாப்வே, அயர்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய அணிகளை வெல்வதில் இந்திய அணிக்கு பெரிதாக எந்த சவாலும் இருக்கவில்லை. கால் இறுதியிலும் ஒப்பீட்டளவில் வலிமை குறைந்த வங்காள தேசத்தை வென்று அரை இறுதிக்குள் நுழைந்தது.

அரை இறுதியில் அவுஸ்திரேலியாவை எதிர்கொண்டபோதுதான் சாயம் வெளுத்தது. போட்டியில் தோற்றதைவிட, பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் தன்னம்பிக்கையையும் வெற்றிக்கான முனைப்பையும் வெளிப்படுத்தாததே கிரிக்கெட்டை நன்கு அறிந்த ரசிகர்களைக் குமுறவைத்தது. ஏனெனில், அவர்கள் அவுஸ்திரேலியாவின் தன்னிகரற்ற வலிமையை அறிந்திருந்தனர். யாரேனும் ஒரு வீரராவது அசாதாரண ஆட்டத்தை வெளிப்படுத்தாதவரையில் இந்திய அணி வெல்வது சாத்தியமல்ல என்று கணித்திருந்தார்கள். ஆனால், அந்தப் போட்டியில் இந்திய வீரர்களிடம் தொடரில் அதுவரை தென்பட்ட சிறப்புக்கள் எல்லாம் காணாமல்போயின.

கிண்ண வாய்ப்பை இறுதிப் போட்டியில் நழுவவிட்டாலும் தொடரில் ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் விமர்சகர்களின் பாராட்டுக்களை

யும் ஆதரவையும் பெற்றது நியூசிலாந்து அணிதான். சொந்த மண்ணில் அவ்வணி எப்போதும் சோடைபோனதில்லை. ஆனால், இம்முறை இறுதிப் போட்டிவரை அனைத்து போட்டிகளிலும் வென்றமை அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. குறிப்பாக, சுற்றுப்போட்டியில் அவுஸ்திரேலியாவையும் அரை இறுதியில் தென்னாபிரிக்காவையும் வென்றமை அவ்வணி இதுவரை சாதித்திராத மைல்கல்லாக பார்க்கப்பட்டது.

எப்போதும் வலிமை பொருந்திய முதல்தர அணியாக இருந்தும் ஒருமுறைகூட உலக கிண்ணத்தை வென்றிராத தென்னாபிரிக்காவுக்கு இம்முறையும் அது கைகூடவில்லை. முதல்சுற்று ஆட்டங்களில் சில வெற்றிகளைப் பெற்றாலும் அவ்வணி நெருக்கடியில் அடங்கிவிடும் என்பதும் வெளிப்பட்டது. பாகிஸ்தானுடன் எளிதாக வென்றிருக்கக்கூடிய போட்டியில் தோற்றது அதற்கு ஒரு சான்று. ஆனால், அதைச் சரிசெய்துகொள்ளாமல் அதேபோல் நியூசிலாந்திடம் தோற்றது.

மற்றைய டெஸ்ட் ஆடும் அணிகளான பாகிஸ்தான், இலங்கை, மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகள் ஒருசில வெற்றிகளில் எளிதாக கால் இறுதிக்கு தகுதிபெற்றன. பாகிஸ்தான் தென்னாபிரிக்காவை வென்று, பாராட்டைப் பெற்றது. அவ்வணியின் பந்துவீச்சு குறிப்பாக, வேகப் பந்துவீச்சு வழக்கம்போல் சிறப்பாகவே இருந்தது. கால் இறுதியில் அவுஸ்திரேலியாவிடம் தோற்றாலும் பந்து வீச்சாளர்கள் தங்கள் பங்கை சிறப்பாகவே செய்தார்கள். வஹாப் ரியாஸ் அப் போட்டியில் ஓட்டம் எதுவும் கொடுக்காமல் வீசிய ஓர் ஓவர் உலக கிண்ண வரலாற்றில் ஆகச் சிறந்த ஓவர்களில் ஒன்றாக பாராட்டப்பட்டது.

2007, 2011 உலக கிண்ணங்களில் இறுதிச் சுற்றுவரை தகுதிபெற்ற இலங்கை, இம்முறை பெரிய அணிகளில் இங்கிலாந்தை மட்டுமே வென்றது. மேற்கிந்திய தீவுகள் அணி, பாகிஸ்தானை வென்றது. கிறிஸ் ஹெய்ஸ், சிம்பாப்வேக்கு எதிராக இருநூறுக்கு மேற்பட்ட ஓட்டங்களை எடுத்தமை மற்றும் கால் இறுதிப்போட்டியுள் நுழைந்தமை என்பவற்றால் இந்த உலக கிண்ணம் அண்மைக்காலத் தொடர்களில் ஒப்பீட்டளவில் சிறந்த ஒன்றுதான். நியூசிலாந்துக்கு எதிரான கால் இறுதியிலும் மோசமான களத் தடுப்புத்தான் அவ்வணியின் தோல்விக்கு காரணம்.

சிறிய அணிகளில் அதிக கவனம் ஈர்த்த பங்களாதேஷ், தனது பிரிவில் இருந்த சிறிய அணிகள் அனைத்தையும் வென்று, இங்கிலாந்து என்ற பெரிய அணியையும் வென்று கால் இறுதியுள் நுழைந்தது.

கிரிக்கெட் விளையாட்டைத் தொடங்கிய இங்கிலாந்து நாட்டின் அணி முதல் சுற்றில் வெளியேறியதோடு, சொல்லிக்கொள்ளும்படி ஒரு வெற்றியையும் பெறவில்லை. இன்னும், உலக கிண்ணத்தை வென்றிராத பெரிய அணியாகவே இது நீடிக்கிறது.

20-20 போட்டிகள் பரவலானபின் கிரிக்கெட் வியையாட்டு துடுப்பாட்டத்துக்கு சாதகமாகி, பந்துவீச்சுக்கான முக்கியத்துவம் குறைந்துவிட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. இது விளையாட்டின் தரத்தை சீர்குலைக்கும் போக்காகவும் பார்க்கப்பட்டது. இன்று, அணியின் மொத்த ஓட்டங்கள் 50 ஓவர்களில் 400ஐக் கடப்பது சகஜமாகிவிட்டதால் இந்த வாதம் வலுப்பெறுகிறது. இந்த வாதங்கள் 2015 உலக கிண்ணம் குறித்த பேச்சுக்களில் வலுவாக முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனால், இதே உலக கிண்ணத்தில் பெரிய அணிகளே 200 ஓட்டங்களுக்குள் சுருண்டிருக்கின்றன. சுற்றுப் போட்டிகளில் அவுஸ்திரேலியாவை 151 ஓட்டங்களுக்கு சுருட்டியது நியூசிலாந்து. பதிலுக்கு, அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தின் ஒன்பது விக்கட்டுகளை வீழ்த்திவிட்டுத்தான் தோற்றது. இறுதிப் போட்டியிலும் அதுவரை வலிமையாக இருந்துவந்த நியூசிலாந்து அணியை 183 ஓட்டங்களுக்கு சுருட்டியது அவுஸ்திரேலிய அணி. பந்துவீச்சின் நிலைபற்றிப் பேசும்போது இவற்றையும் கணக்கில் கொள்ளவேண்டியிருக்கிறது.

திறமையுள்ள துடுப்பாட்டக்காரர்களும் பந்து வீச்சாளர்களும் சமான அளவிலேயே இந்தத் தொடரில் சாதித்திருக்கிறார்கள்.

அணிகளின் வெற்றி, தோல்வி ஒருபுறம் இருக்க, கிறிஸ் ஹெயில், மார்ட்டின் கப்டில் போன்றவர்களின் இரட்டைச் 'சதம்'; ட்ரெண்ட் போல்ட், மிற்செல் ஸ்டார்கின் பொறிபறக்கும் பந்துவீச்சு; நெருக்கடியில் அசராமல் போட்டியை வெற்றிகரமாக முடிக்கும் மகேந்திரசிங் தோனியின் ஆளுமை; இந்த மனிதருக்கு எப்படித்தான் பந்துபோடுவது என பந்துவீச்சாளர்களை தலையைப் பிய்த்துக்கொள்ளவைக்கும் அதிசய துடுப்பாட்டத்தைக் காட்டிய க்லென் மக்ஸ்வெல், ஏபி டிவில்லியர்ஸ் ஆகியோரின் புதிரான புயல்வேகம்; திறமைபெற்ற அணிகளைச் சிறுமைப்படுத்துவதையே தன் ஆட்டத்தின் இயல்பாகக்கொண்ட அவுஸ்திரேலியா என கிரிக்கெட்டின் அழகுகள் அரங்கேறிய இந்த உலக கிண்ண தொடரை அவ்வளவு எளிதில் மறக்க முடியாது.

சிறிய அணிகள் எனச் சொல்லப்படும் அயர்லாந்துபோன்ற அணிகள் ஆடிய விதமும் இந்தத் தொடரின் முக்கிய அம்சங்களில் ஒன்று. பெரிய அணிகளுக்கு அதிர்ச்சிதந்து, ஆட்டத்தின் கணிக்கவியலாத் தன்மையை நிரூபிக்கும் இந்த அணிகள் ஆட்டத்துக்கு அழகு சேர்க்கின்றன. இந்நிலையில், இந்த அணிகளைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் வருத்தமளிக்கின்றன. அடுத்த உலக கிண்ணத்தில் டெஸ்ட் போட்டியில் ஆடும் தகுதிபெற்ற அணிகளை மட்டும் அநுமதிப்பதுகுறித்து சர்வதேச கிரிக்கட் கவுன்சில் ஆலோசித்துவருகிறது. இது நடைமுறைக்கு வந்தால் அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம், 2015இல் முதன்முறையாக உலக கிண்ணத்துக்கு தேர்வுபெற்ற ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் அணிகளுக்கு இடமிருக்காது. ஏற்கனவே, உலகின் இருபது நாடுகள் கூட சர்வதேச கிரிக்கெட் விளையாட்டில் பங்கேற்பதில்லை. ஆனால், அவ்விளையாட்டுக்கு உலக கிண்ணம் நடாத்தப்படுகிறது. இந்நிலையில், இருக்கும் நாடுகளையும் துரத்துவது தவறான அணுகுமுறை.

போட்டிகளின் சுவாரஷ்யத்தைக் கூட்டுவது இதற்கான காரணமாக சொல்லப்படுகிறது. சுவாரஷ்யத்தைக் கூட்ட சிறிய அணிகளை வெளியேற்ற வேண்டியதில்லை. சிறிய அணிகளிடமிருந்து வெளிப்படும் திறமைக் கீற்றுகள் ரசிகர்களைப் பெரிதும் ஆச்சரியப்படுத்திவருகின்றன. சிறிய அணியாக வகைப்படுத்தப்பட்டுள்ள அயர்லாந்து அணி தொடர்களை வென்றிதில்லை என்றாலும் சர்வதேச போட்டிகளில் கலந்துகொள்ளத் தொடங்கியதுமுதல் கவனிக்கத்தக்க வெற்றிகளைப் பெற்றிருப்பதை மறக்கலாகாது.

1983 உலக கிண்ணத்தை வெல்லும் வரை சர்வதேச இந்தியாவும் சிறிய அணியாகத்தான் பார்க்கப்பட்டது. ■



யாழ்ப்பாணம்

வி. தட்சணாமூர்த்தி

(1933 - 1975)

# ஒரு வரலாற்று அதிசயம்

**1960** ஆம் ஆண்டு; யாழ்ப்பாணம் பரமேஸ்வரா கல்லூரி (தற்போதைய யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) மண்டபத்தில் குமாரி கமலாவுடைய பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

மண்டபம் நிரம்பி வழிந்தது.

குரு, வழுவூர் இராமையாபிள்ளை நட்டுவாங்கம். சுவாமிமலை இராஜரத்தினமும் இராதாகிருஷ்ணனும் பாட்டு.

அரங்கில் திரைவிலகியதும் நிசப்தம் நிறைகிறது.

பஞ்சரத்தின கீர்த்தனைகளில் ஒன்றான "சாதிஞ்சனே ஓ மனசா…'' (ஆரபி) வர்ணம்.

அவருக்கேயுரிய அந்தக் கம்பீரத்துடன் ஜொலிப்போடு அமர்ந்து தாளத்தைத் தட்டியவண்ணம், கணீரென்ற அந்த வெண்கல குரலில், "சாதிஞ்சனே ஓ மனசா…'' முதல் அடியைப் பாடி ஆரம்பிக்கிறார் இராமையாபிள்ளை. உடனே, இராஜரத்தினமும் இராதாகிருஷ்ணனும் திகைப்போடு ஒருவரையொருவர் பார்க்கிறார்கள். வழக்கத்திலும் பார்க்க கணிசமான அளவில் துரிதமான கதி.

வேறு வழியில்லை; அவர்களும் தொடர்கிறார்கள்.

முடியாத ஒரு வேகத்தில் ஆரம்பித்துவிட்டதை இராமையாபிள்ளை உணர்கிறார். அது, முதலாம் காலம். அது இரட்டிப்பாகி, பின்னர் அது மேலும் இரட்டிப்பாகும். பல்லவியைவிட சரணம் இன்னமும் வேகமாக தொடங்கப்படவேண்டுமென்பதில் இராமையாபிள்ளை மனதுள் சற்று பின்வாங்குகிறார்.

ஆனால், அவரது பிரதம மாணவி கமலா, மறுபுறத்திலிருந்து மேடையுள் எழிலாக பிரவேசிக்கவும் அவருடைய தயக்கமெல்லாம் மறைந்து, நம்பிக்கை பெருக்கெடுக்கிறது. நிதானத்துடன் மேடையின் நடுவேவந்த கமலாவின் கால்களில் திட்டமான காலப்பிரமாணம். கண்களில் தெறிக்கும் அசைவுகளும், உதடுகளில் மலரும் சிரிப்பும் சவாலை அவர் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வதைப் பிரகடனம்செய்கின்றன.

முதலாம் காலத்தில் ஜதிக்கோவைகளுக்கு அவரின் தீர்க்கமான அடவுகளும் சிற்பநிலைகளும் அவையை மூச்சுவிடவிடாமல் ஈர்க்கின்றன.

லகுவாக அமைகின்ற இரண்டாம் காலம். மூன்றாம் காலத்தில், சண்டமாருதமாகும் சொல்கட்டுக்களுடனான ஜதிக்கோவைகளில் மீண்டும் மூச்சைப்பிடிக்கிறார்கள். மின்னலாய் ஓர் அழகுநிலை. வேகமான பாய்ச்சல், சுழற்சி அடவுகளுடன் முத்தாய்ப்பாகும் அறுதி.

அவையில், ஆர்ப்பரித்தெழும் பலத்த கரகோஷம். மின்னல் வேகத்தில் ஒவ்வோர் அடவும் மீண்டும் மீண்டும் சிலிர்ப்பிலாழ்த்துகிறது.

வர்ணம் முடிகிறது. அவைமுழுவதும் எழுந்துநின்று எழுப்பும் கரகோஷம் ஓயவில்லை.

திரை மூடுகிறது; கமலா நேராக பக்கவாத்தியகாரர்களிடம் செல்கிறார்.

"என்ன இராஜரத்தினம்…?'' கமலா சிரித்துக்கொண்டே கேட்கிறார். எதிர்பார்க்கக்கூடிய விதத்தில் அவருக்கு மூச்சுவாங்கவில்லை; அவ்வளவாக வியர்க்கவுமில்லை. உண்மையிலே, மீண்டும் இன்னொருதடவை அதனை உடனே ஆடத் தயார் என்பதுபோலவே அவர் தெரிகிறார். இராஜரத்தினமும் இராதாகிருஷ்ணனும் 'நிபந்தனையற்ற மன்னிப்புக்கோரி', தமது கைளை உயர்த்துகிறார்கள். இராமையாபிள்ளையின் முகம் ஆச்சரியத்தில் அறைந்துபோயிருக்கிறது. அவருடைய மாணவி அவரை ஏற்றிவைத்த புதிய உன்னதத்தின் உச்சத்தில் அவர் பிரமித்துப்போனார்.

"வேகமாக ஆரம்பித்தது நான்தான். உடனேயே நான் அதனை உணர்ந்துகொண்டாலும், என்னால் எதுவும் செய்யமுடியவில்லை. ஆரம்பித்த கதியைக் கூட்டுவதோ குறைப்பதோ என் இயல்பு அல்ல. கமலா… அன்று அற்புதமாய் ஒளிர்ந்தார். இன்னொருவரால் அது முடிந்திருக்காது. அப்போது மாத்திரமல்ல, எப்போதுமே முடியாது.''

கண்களில் நீர்மல்க, மூன்று தசாப்தங்களின் பின்னர், அப் பெரும் நாட்டிய ஆசான் இச் சம்பவத்தை நினைவுபடுத்திக் கூறுகிறார்.

குமாரி கமலாவைப்பற்றி 'சுருதி' சஞ்சிகை இரண்டு இதழ்களில் தொடராக வெளியிட்ட விவரண கட்டுரைகளில் குரு வழுவூர் இராமையாபிள்ளையையும் செவ்விகண்டிருந்தார்கள். 'பரதம் என்றால் கமலா' என்று புகழ்பெறும் அந்த வரலாற்று தாரகையின் அதி உன்னத மேன்மையைச் சொல்ல, பரதநாட்டிய உலகின் மிகப்பெரும் மேதையான வழுவூர் இராமையாபிள்ளை, இந்த யாழ்ப்பாணத்து நிகழ்வைச் சொல்கிறார்.

கமலா என்ற அந்த வரலாற்று நர்த்தகியின் வரலாற்றில் வரலாறு படைத்த இது எப்படி நிகழ்ந்தது?

'…ஏறி உயர்ந்த மலை இல்லையாயினும் என்ன? இருந்தன தோள்கள் என்றே, கூறி உழைத்தபின் ஆறி, கலைகளில் ஊறிச் சிறந்த யாழ்ப்பாணம்' அதன் காரணம்.

யாழ்ப்பாணம்; யாழ்ப்பாணத்து அரங்கு; யாழ்ப்பாணத்து ரசிகர்கள் என்ற இவை ஏற்படுத்திய உந்துதல், வழுவூராரை அந்த நிலைக்கு உள்ளாக்கியது.

வழுவூராரென்ன, இந்திய கலைஞர்களுக்கு யாழ்ப்பாணம் ஒரு சங்கப்பலகையாகவே திகழ்ந்தது. தவில், நாதஸ்வர கலைஞர்கள்; இசை, நடன கலைஞர்கள்; நாடக கலைஞர்கள்; சினிமா கலைஞர்களும்கூட எல்லோருமே அப்படித்தான் கருதினார்கள். கிட்டப்பா, கே. பி. சுந்தராம்பாள், ராஜலக்ஷ்மி, எஸ். டி. சுப்புலக்ஷ்மிபோன்ற புகழ்பெற்ற நாடகக் கலைஞர்கள், மதுரை தங்கம் தியேட்டரையும் வண்ணார்பண்ணை தகரக் கொட்டகையையுமே (மனோகரா தியேட்டர்) அக் காலத்தில் தங்களுக்கான அங்கீகாரமாக கருதினார்கள்.

எனினும், இதில் ஒரு பரஸ்பர உறவோடும் அந்நியோன்யத்தோடும் கலந்த சிறப்பைப் பெறுவது தவில், நாதஸ்வரம். யாழ்ப்பாணத்து இக் கலை ரசனையின் மூலமாக அமைவதும் இத் தவில், நாதஸ்வரமே.

இலங்கைக்கு 'வீசா' தேவைப்படாதிருந்த அக் காலத்தில், இந்தியாவின் வேதாரணியம்போன்ற இடங்களிலிருந்து திருவிழா பருவகாலங்களில் தவில், நாதஸ்வர கலைஞர்கள் படகுகளில்வந்து

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய ஊர்களில் இறங்குவதும், உள்ளூர் கலைஞர்கள் இவர்களைத் தம்முடன் இணைத்து மேளம் கட்டுவதும் (குழுக்கள் அமைத்தல்) வழக்காகவிருந்தது. இதுதவிர, இந்தியாவின் பிரபல தவில், நாதஸ்வர வித்வான்கள் உள்ளூர் கலைஞர்களுடனுமிணைந்து, வழுவூராரின் அதே மன உந்துதலுடனேயே தவில், நாதஸ்வர கச்சேரிகளை நிகழ்த்தினார்கள்.

அம்மாபேட்டை பக்கீர்பிள்ளை, அம்மாசத்திரம் கண்ணுசாமி பிள்ளை, திருமுல்லைவாயில் முத்துவீர்பிள்ளை, மலைக்கோட்டை பஞ்சாபிகேச பிள்ளை, நாச்சியார்கோவில் ராகவப்பிள்ளை, நீடாமங்கலம் சண்முகவடிவேல் என்று, இந்தியாவில் தனித்த புகழோடு தவில் கலைஞர்கள் பலர் சிறந்த காலத்தில், தவில் வாசிப்பில் திருப்பமான பல மாற்றங்களைத் தோற்றுவித்தவர் தவில் உலக மாமன்னர் என்று போற்றப்படுகின்ற நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. தவிலில் தனியாவர்த்தனம் வாசிப்பதை அறிமுகப்படுத்திய அவர், இரண்டு நாதஸ்வரம், ஒரு தவில் என்றிருந்தபோது, இன்னொரு தவிலையும் கூடவே இணைத்து, நாதஸ்வர கச்சேரிகளில் லயவிந்யாசத்துக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியபோது, இந்த இரண்டு அம்சங்களிலும் இந்த லய சிம்மங்களுக்கு யாழ்ப்பாணமே சமர்க்களமாகியது.


யாழ்ப்பாணத்தில் 'காளையேற்றம்' இருந்ததில்லை. ஆனால், 'மேளச் சமா' வாழ்வோடிணைந்திருந்தது.

சென்னை சங்கீத வித்வத் சபையின் 'சங்கீத கலாநிதி' (1956) விருதைப்பெற்ற முதல் நாதஸ்வர கலைஞர், திருவீழிமிழலை சகோதரர்களில் ஒருவரான சுப்பிரமணியபிள்ளை. (சகோதரர்களில் மற்றையவர் நடராஜசுந்தரம்பிள்ளை) திருவீழிமிழலை சகோதரர்களுக்கு இருபத்தைந்து ஆண்டுகளாக தவில் வாசித்துக்கொண்டிருந்த நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை ஒரு கட்டத்தில் அவர்களுக்கு தொடர்ந்து வாசிக்க மறுத்தபோது, அவருக்கு பதிலாக திருவீழிமிழலை சகோதரர்கள் யாழ்ப்பாணத்து காமாட்சிசுந்தரம்பிள்ளையைத் தம்மோடு இணைத்தார்கள். 'மீனாட்சி இல்லாவிட்டால் காமாட்சி' என்று அப்போது எழுந்த சுலோகம், தவில், நாதஸ்வர கலையின் வரலாற்றில் யாழ்ப்பாணத்து உறவையும் உன்னதத்தையும் உணர்த்தி நிலைக்கிறது.

தவில் வாசிப்பில் நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை மற்றொரு சிறப்பையும் ஏற்படுத்தினார். வழக்கமாக அமைந்த குழுவினருடன், சிற்சில வேளைகளில் மேலதிகமான ஒன்றிரண்டு தவில்களையும் இணைத்து, அதில் லயவிந்யாசத்தை மேலும் மேன்மையுறவைத்தார். 'ஸ்பெஷல் தவில்' என்ற இந்த வகையுள் யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தி அற்புத அவதாரமானார். அது, தவில் வாசிப்பில், யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்திக்குப் பின்னான புதுயுகமாக மலர்ந்தது.

தவில் என்ற ராஜவாத்திய சாம்ராஜ்யத்தில், மாமன்னர் நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பொன்முடியாக ஒளிர்கிறார் யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தி. வரலாற்றில், ஓர் அதிசயம் அவர்.

**- மாலி**




யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தி; மறைந்துவிட்ட ஓர் அதிசயம்.

வாழ்ந்தால், இப்போது 82 வயதாக விருக்கும். ஆனால், 42 வயதிலேயே மறைந்துவிட்டார்.

அந்த அதிசய வாசிப்பைக் கேட்ட வர்கள், கேட்டு வியந்தவர்கள் இருக்கி றார்கள். அந்த அதிசய வித்துவத்தின் மேன்மையைச் சொல்லவல்லவர்க ளும் ஒருசிலர் இருக்கிறார்கள். அவர் கள் சொல்ல வெளிப்பட்டால் கடைசி யில், "... மனுஷனா, மனுஷனால் இது முடியுமா?... தெய்வம், தெய்வ அவதா ரம்" என்றே எல்லோரும் முடித்துவிடு கிறார்கள்.

மறைந்து நாற்பது ஆண்டுகளாகி விட்டபின்னர், அரிதான விதத்தில், தவில்மேதை தட்சணாமூர்த்தியின் விவரண சித்திரம் ஒன்று வெளியாகி யிருக்கிறது.

காணொளி நறுக்குகள் எதுவுமே யில்லை. ஆனால், 'மங்கல இசை மன் னர்கள்' நூலில் தட்சணாமூர்த்தியை நிலைக்கவைக்கும் இசை அறிஞர் பி. எம். சுந்தரமும், தட்சணாமூர்த்தியு டன் அக் காலத்தில் இணைந்து வாசித்த திருவாளபுத்தூர் ரி. ஏ. கலிய மூர்த்தி, அரித்துவாரமங்கலம் ஏ. கே. பழநிவேல், தஞ்சாவூர் டி. ஆர். கோவிந்தராஜன், கோட்டூர் என். வீரா சாமிபோன்ற கலைஞர்களும் சிலர், அந்த அற்புத கலைஞனுக்கு இந்த விவரண சித்திரத்தில் அழியா உயிர் கொடுக்கிறார்கள்.

லண்டனில் வசிக்கும் தமிழ், இசை ஆர்வலர் இ. பந்மநாப ஐயரின் முயற்சியில், அம்ஷன் குமார் தயாரித்தி ருக்கிறார். தட்சணாமூர்த்தி பவுண்டே ஷன் வெளியீடாக வெளிவந்திருக்கி றது.

மிகப்பெரும் அருந்தேடலில், தட்ச ணாமூர்த்தியின் வாசிப்பு அடங்கிய 26 மணிநேர ஒலிப்பேழையையும் இவர்கள் தயாரித்திருக்கிறார்கள்.

### தமிழ் சினிமாவில்

# சாதி, வீரம், மீசை!

**பெருமிதம், பண்பாட்டுச் சித்தரிப்பு என்பவற்றின் பெயரால் ஒரு சாதியின் அடையாளத்தை முன்னிறுத்துவதோ வன்முறையை நியாயப்படுத்துவதோ அபாயகரமானது**

ரோஸ்பட்



சாதி, வீரம், மீசை - இந்த மூன்று சொற்களின் அடிப்படைப் பொருளைப் பார்த்தால் இவை ஒவ்வொன்றுக்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால், தமிழ் மரபில் இந்த மூன்று வார்த்தைகளுக்கும் வலிமையான ஓர் இணைப்பு உருவாகிவந்திருக்கிறது. பல உயர்சாதிப் பிரிவுகள் தங்களுடைய சொந்த தொழில்களுக்கு அப்பால் மீதமிருந்த மிகுதியான நேரங்களில் தங்களைச் சமூகத்தில் உயர்ந்த நிலையிலேயே தக்கவைத்துக்கொள்ளத் தேவையான வேலைகளையே செய்துவந்திருக்கின்றனர். அதற்கு அவர்கள் கண்டுபிடித்த வழி, பிறரைத் தம்மிலும் தாழ்ந்தவராகக் கட்டமைப்பது. சாத்தியமான எல்லா வழிகளிலும் அவர்கள் அதைச் செய்துவந்தனர். சாதி, மதம், சம்பிரதாயம் ஆகியவை இதற்குத் துணையாய் வடிவமைக்கப்பட்டன. பிறரை அச்சுறுத்தி, தங்களுக்குக்கீழே வைத்திருப்பதற்காக எதையும் செய்யத்துணிந்திருந்தனர்.

ஆனால், இன்று (சாதி பேதமின்றி) அன்றாட வாழ்க்கை அனைவருக்குமே சவாலாகிவிட்ட நிலையில் இதற்கெல்லாம் நேரமில்லாதுபோயிற்று. கல்வி பயில்வது கட்டாயமானது. அது, இளம் தலைமுறையினரை மாற்றியது. அனைத்தையும் மறந்து ஒற்றுமையுடன் இருக்கின்றனர். சாதி முன்னிறுத்தல் வன்முறைகள் அதிகமிருந்த பல மாவட்டங்கள் இன்று அமைதியாக இயங்கிக்கொண்டிருக்கின்றன.

தேவர் சாதியை எப்போதும் பெருத்த மீசையும் வீச்சருவாள் தூக்கும் சண்டியராகவுமே தமிழ் சினிமா சித்தரிக்கிறது. இலக்கிய உலகில் ஆரம்பித்து இயக்குநர், நடிகர், கவிஞரென எல்லாத் துறைகளிலும் தேவர் சாதியினர் நிறைந்திருக்கிறார்கள். ஐஏஎஸ், ஐபிஎஸ் சேவைகளிலும் உள்ளனர். இப்படி, எல்லா மட்டத்திலும் கல்வியில் தேர்ந்து நவீன உலகில் பிரவேசித்துவிட்டார்கள் இந்தத் தலைமுறையினர். ஆனால், திரைத் துறையில் இருப்பவர்கள் சும்மா இருக்கும் சங்கை ஊதப்பார்க்கிறார்கள். மீண்டும் அதே வன்ம மனநிலையையும் சாதித் திமிரையும் விதைக்கும் வகையில் சாதிப் பெருமைக் கதைகளைச் சொல்ல முயல்கிறார்கள். இது, எதிர்காலத் தமிழ் சமூகத்தைப்பற்றிய பயத்தை உண்டாக்குகிறது. காலம் என்னதான் பாடம் கற்பித்தாலும் எப்படியோ பல்வேறு துறைகளில் தங்கள் ஆதிக்கத்தைப் பெருமள

> 'தேவர் மகன்' படம் சாதிப் பெருமைக்கு எதிரான படம்தான். பழமையிலிருந்து விடுபட்டு, நவீன உலகிற்கேற்ப வாழவேண்டும் எனச் சொன்ன படம்தான். ஆனால், அதில் தேவர் இனத்தவரின் உணர்வைச் சொல்வதற்காக எழுதப்பட்ட பாடல், அந்தச் சாதியினரின் சாதிப் பெருமையைத் தூக்கிப் பிடிக்கவும் பிற சாதியினரை சீண்டவும்தான் பயன்பட்டது



கொம்பன்

வில் பிடித்துவிடும் இவர்கள் மீண்டும் சாதி முன்னிறுத்தலை நாசூக்காக தொடங்குகிறார்கள்.

சாதி அடையாளத்தை தூக்கிப்பிடிக்கும் படங்கள் தொடர்ந்து வெளியாகிக்கொண்டிருப்பதுதான் அச்சமிக்க உணர்வையும் அதுபற்றிய விவாதங்களையும் உண்டாக்குகின்றன. இன்று, 'கொம்பன்' படமும் அந்த வரிசையில் தான் நிற்கிறது.

இதற்கு முன்பே வீரத்தில் உயர்ந்ததாக, வன்முறையில் ஊறியதாக, சாதிப் பெருமை மிகுந்ததாக தேவர் சாதி போன்ற சாதியை முன்னிறுத்தும் படங்கள் வெளிவந்திருக்கின்றன. தேவர் மகன், விருமாண்டி, பருத்தி வீரன், குட்டிப்புலி, மதயானைக்கூட்டம், திலகர், கொம்பன் என இப் பட்டியல் நீள்கிறது.

தேவர் மகன் படத்திலேயே, சாதி முன்னிறுத்தல் சண்டைகளையும் அதன் விளைவுகளையும் அதை விரும்பாத தலைமுறையினரின் விருப்பத்தையும் பதிவுசெய்தாகிவிட்டது. சாதி வேண்டாம், சண்டை வேண்டாம் என்பதுபோன்ற சில வசனங்களையும் காட்சிகளையும் வைத்து நல்ல கருத்துள்ள படைப்பு என்ற பெயரையும் வாங்கிவிடுகிறார்கள். ஆனால், சமூகத்தில் அவை எற்படுத்திய சிலபல விளைவுகள் நேரடியானவை அல்ல. அதனால், அவை அடையாளம் காணப்படுவதில்லை. ஆனால், அவை வீரியமானவை.

தேவர் மகன் படத்துக்குப் பின்னர் அதில் இடம்பெற்ற "போற்றிப் பாடடி பெண்ணே தேவர் காலடி மண்ணே…'' பாடல் தலித்துக்கள் இருக்கும் இடமெல்லாம் ஒலிக்கப்பட்டது. பலத்த சத்தமாக அதைக்கேட்டு தலித்துக்கள் சீண்டப்படுவதும், தலித்துக்கள்மீது தாக்குதல் நடப்பதும் தொடர்ந்தது. தேவர் மகன் படம் சாதிப் பெருமைக்கு எதிரான படம்தான். பழமையிலிருந்து விடுபட்டு, நவீன உலகிற்கேற்ப வாழ வேண்டும் எனச் சொன்ன படம்தான். ஆனால், அதில் தேவர் இனத்தவரின் உணர்வைச் சொல்வதற்காக எழுதப்பட்ட பாடல் அந்தச் சாதியினரின் சாதிப் பெருமையைத் தூக்கிப் பிடிக்கவும் பிற சாதியினரை சீண்டவும்தான் பயன்பட்டது. அந்தப் படத்தின் நல்ல செய்தி அதிகம் நினைவுகூரப்படவில்லை.

இயக்குநர் சேரனின் 'பாரதி கண்ணம்மா' படத்தில் தேவர் வீட்டுப் பெண் ஒருத்தி சமூக அடுக்கில் கீழே இருக்கும் சாதிப் பையனைக் காதலிக்கிறாள் என்ற கதையை ஏற்றுக்கொள்ள முடியாத தேவர் அமைப்புக்கள் தியேட்டர்களுக்குச் சென்று படத்தைத் திரையிடக்கூடாது என்று கூறியதுடன், மறுத்த தியேட்டர் உரிமையாளர்களிடம் கண்ணம்மாவும் பாரதியும் ஒன்றாகச் சிதையேறும் காட்சியை நீக்கவேண்டும் என்று மிரட்டிய சம்பவங்களும் நடந்தன. படம் வெளியிடப்பட்ட தென்மாவட்ட தியேட்டர்களுக்குள் நாட்டு வெடிகுண்டுகள் வீசப்பட்டன. அதன்பின்னர் அங்கு நிகழ்ந்த சாதிக் கலவரங்களுக்கு அது அடித்தளம் போட்டது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் வந்தது 'மதயானைக் கூட்டம்'. நிலப்பிரபுத்துவ சமூகத்தில் ஓர் ஆணின் இரண்டாம் தாரத்தின் வாழ்கை நிலையை அழகாக பதிவுசெய்திருந்தாலும்கூட, படம் முழுவதும் தேவர் சாதிச் சித்தரிப்பே நிறைந்துகிடக்கிறது. எல்லாமே விமர்சனம் அற்ற சித்தரிப்புக்கள். தேவர் சாதியின் சடங்குகள், சம்பிரதாயங்கள், சண்டைகள் ஆகியவற்றைத் துல்லியமாக ஆவணப்படுத்திய இயக்குநர் விக்ரம் சுகுமாரனின் நோக்கத்தை மீறி, மீண்டும் சாதியத்தை முன்வைக்கும் பிற்போக்குத்தனத்தையே படம் முன்னிறுத்தியது. சாதிப் பெருமையையும் பழிவாங்கலையும் படம் மீள்பதிவு செய்தது.

பெருமாள்பிள்ளையின் இயக்கத்தில் அண்மையில் வந்த 'திலகர்' பட

மும் நல்ல கருத்தை முன்னிறுத்தினாலும் படம் முழுவதும் சாதிப் படிமங்களும் கொடூர வன்முறையும் பழிவாங்கலுமே மனதில் பதிவதாக அமைகின்றன. பொறியியல் படித்த இளைஞனை ஆத்திரமும் பழிவாங்கும் உணர்வும் கொண்டவனாக சித்தரித்துள்ளது. அதாவது, எவ்வளவு படித்தாலும் குறிப்பிட்ட சாதியினர் கொலைவெறியைக் கைவிடமாட்டார்கள் என்னும் செய்தி வெளியிடப்பட்டது.

கொம்பன் படத்தை இயக்கிய முத்தையாதான் குட்டிப்புலியையும் இயக்கினார். அதிலும், முழுக்கமுழுக்க சாதியும் மீசையும் வன்முறையும்தான் முன்வைக்கப்பட்டன. படம் முழுவதும் சாதிப் பெருமைதான் வீசியது. அப்போது எவரும் எதிர்ப்புக் காட்டவில்லை. இப்போது, மேலும் கொம்புடன் கொம்பனைக் களம் இறக்கியிருக்கிறார்.

பெரிய மீசை, ஏத்திக் கட்டின வேட்டி, எகத்தாளமான பார்வை என, படம் முழுவதும் கார்த்தி பொளந்து கட்டுகிறார். அவர் வீரத்தை ஊரே தூக்கிவைத்துக் கொண்டாடுகிறது. அரசநாடு, நல்ல நாடு, செம்மநாடு ஆகிய மூன்று ஊர்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு கட்ட பஞ்சாயத்து செய்கிறார் சூப்பர் சுப்பராயன். அரசநாட்டு கொம்பன் கார்த்தி இதற்குத் தடையாகவிருக்க, முட்டிக் கொள்கிறது. இரத்தம் தெறிக்கத் தெறிக்க பழிவாங்குதலோடு படம் முடிகிறது. படமெங்கும் தாழ்த்தப்பட்ட மக்களையோ அல்லது வேறு சாதிக்காரர்களையோ மறந்தும்கூட காட்டவில்லை. சுய சாதிப் பெருமையை தங்கள் சாதிக்காரர்களைவைத்தே பறை சாற்றுகிறார்கள்.

படத்தில் சாதி முன்னிறுத்தல் வசனங்கள், காட்சிகள் நீக்கப்பட்டுவிட்டதாக தெரிகிறது. சில இடங்களில் சாதி வேண்டாம் என்கிற வசனங்கள் இருந்தாலும் சாதியப் படிமங்களும் இடம் மற்றும் இனம் சார்ந்த அடையாளங்களும் முறுக்கிய வீரமும் அதன் பெருமையுமே படம் நெடுக பதிவாகியுள்ளன. படத்தில் ஓரிடத்தில்கூட வன்முறை வேண்டாம் என்ற வசனமோ காட்சியோ இல்லை. பெண்களும் தனி மனித இழப்புகள் மற்றும் பாதிப்புக்கள் சார்ந்த அச்சவுணர்வில் பேசுகிறார்களேதவிர, பொதுவாக சாதிய வன்முறைகளை கேள்விக்குள்படுத்தவில்லை.

ஒருவேளை, ஆங்காங்கே பின்தங்கிய கூட்டம் இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். அவர்களின் கதையைச் சொல்ல முயன்றால், அவர்களை மேம்படுத்தும் வழியுடன் கதையைச் சொல்வதுதான் ஒரு நல்ல படைப்பாளிக்கான அடையாளம். ஆனால், அவர்களின் வீரத்துக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிப்பதுபோன்று படம் எடுப்பது கருத்தியல் ரீதியில் மிகமிக ஆபத்தானது.

சாதிப் பெருமை பேசும் ஒவ்வொரு படத்திலும் இறுதியில் அதே சாதியைச் சேர்ந்தவரையோ சக பிரிவினரையோ அல்லது பிரதான நாயகனையோ கொடூரமாக கொலைசெய்வதன்மூலம் இயக்குநர்கள் சொல்லவரும் செய்திதான் என்ன? அதனால், விளையும் தாக்கம் என்ன? படம் பார்க்கும் சாதிக்காரர்கள் மேலும் பெருமிதத்துடன் மீசையை முறுக்கியபடி செல்கிறார்கள். அவர்களால் அச்சுறுத்தப்படும் நிலையில் இருக்கும் சாதிக்காரர்கள் முகம் சுளிக்கிறார்கள்.

பல படங்கள் சாதிப் பெருமையை முன்னிறுத்த எடுக்கப்படுகின்றன. ஆனால், குறிப்பிட்ட சில படங்கள் மட்டுமே பிரச்னைக்குள்ளாக்கப்படுவது ஏன்? தொடர்ந்து முன்னணி நடிகர்கள் மற்றும் பெரிய பட்ஜட் படங்களுக்கு மட்டும் எப்படியோ சர்ச்சைகளும் தடைகளும் வந்தவண்ணம் இருக்கின்றன. எந்தக் காரணங்களுக்காக இப்படங்கள் சர்ச்சைக்கும் தடைகளுக்கும் உள்ளாகின்றனவோ அதே காரணங்களைக்கொண்ட பல படங்கள் முகமறியா நடிகர்கள் நடிக்க வெளிவந்துகொண்டுதான் இருக்கின்றன. தமிழ் சினிமாவின் சந்தை நிலவரத்தைப் பார்த்தால் இதற்கான காரணம் புரியும்.

இங்கு ஒரு படைப்பு தனியே எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றால் மிகக் குறைவுதான். ஆனால், அந்தப் படைப்பை தாங்கிப் பிடிப்பவர்களால் அதன் தாக்கமும் விளைவுகளும் கூடும் வாய்ப்பு இருக்கிறது. யாருக்கு சந்தை அதிகமிருக்கிறதோ அவர்கள் இத்தகைய படங்களில் நடிக்கும்போதுதான் அது ஏற்படுத்தும் விளைவுகள் பற்றிய அச்சம் அதிகமாகிறது.

கமல்ஹாசன் தன் படத்துக்கு 'சண்டியர்' என்று பெயர் சூட்டியபோது டாக்டர் கிருஷ்ணசாமி எதிர்த்தார். தலைப்பு மாற்றப்பட்டது. ஆனால், சில மாதங்களுக்கு முன்னர் 'சண்டியர்' என்கிற தலைப்பில் ஒரு படம் வெளியானபோது மருத்துவர்கிருஷ்ணசாமி எங்கே போனார்?

வன்மமும், சாதிப் படிமங்களும் நிறைந்ததாக ஒரு படைப்பை உருவாக்குவதற்கு இப்போது என்ன தேவை இருக்கிறது? படத்தில் ஆயுதம் வேண்டாம்; சண்டை வேண்டாம் என்று ஓரிடங்களில் வசனங்களை வைத்துவிட்டு, நல்ல கருத்துத்தானே சொல்லப்பட்டிருக்கிறது. இதில் என்னதான் உங்களுக்கு பிரச்னை என்று கேள்வி எழுப்புகிறார்கள். அந்த ஓரிரு நல்ல கருத்துக்களுக்காக படம் முழுவதும் மீசையை முறுக்கிவிட்டு, கொம்பு சீவி ஆட்களை அரிவாளோடு திரியவிடுகிறார்கள். படத்தின் ஒவ்வொரு காட்சியிலும் சாதிய முன்னிறுத்தலே இருக்கும்போது, சாதிக் கட்டமைப்பையே தம்முடைய ஆழ்நிலை மனதில் வைத்திருப்பவர்களின் உணர்ச்சிவசத்தை திரையரங்கங்களில் பார்த்திருக்கிறார்களா? அல்லது, திரையரங்கங்களுக்கு வெளியேதான் பார்த்திருக்கிறார்களா? ஒவ்வொரு காட்சிக்கும் ஒவ்வொரு முறுக்கலுக்கும் வலது கால்கள் இடது காலின்மீது விழுகின்றன. மீசைகள் தடவிக்கொடுக்கப்படுகின்றன. யாரேனும் எதிராக வாய்திறந்தால் அவர்கள் தாக்கப்படுகிறார்கள்.

சாதி சார்ந்த வரலாறு மற்றும் பண்பாட்டு பதிவுகளை கவனத்துடன் பதிவுசெய்ய மிகுந்த பொறுப்புணர்வு தேவை. வரலாற்றைத் தங்களுக்கு ஏற்றவாறு பயன்படுத்திக்கொள்பவர்களால் வரலாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

பாரதி ராஜா 'நான் சுத்த தேன்டா' என்று வசனம் எழுதுகிறார். சேரன், பிள்ளைமார் சமூகத்தில் பிறந்தாலும் முக்குலத்தோர் பெருமையைக் காட்டுகிறார். இஸ்லாமியனாக இருந்தாலும் அமீர் முக்குலத்தோர் பெருமையைக் காட்டுவார். மேலும் பல இளம் இயக்குநர்களும் இதையே செய்கிறார்கள். தமிழ் சினிமாவில் பலரும் ஓர் ஆபத்தான விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இது மிக மோசமான விளைவுகளையே சமூகத்தில் ஏற்படுத்தும்.


பெருமிதம், பண்பாட்டுச் சித்தரிப்பு ஆகியவற்றின் பெயரால் ஒரு சாதியின் அடையாளத்தை முன்னிறுத்துவதோ வன்முறையை நியாயப்படுத்துவதோ அபாயகரமானது. வன்முறைப் பாதை ஒருவழிப் பாதை; திரும்பவே முடியாது. அதில் பிரவேசிக்காமல் இருப்பதுதான் நல்லது. ■

# ARAS ART SCHOOL

# அரஸ் ஆர்ட் ஸ்கூல்

ஆறிலிருந்து அறுபதுவயதுவரை ஓவியம் வரைய
ஆர்வமுள்ள அனைவரும் ஓவியநுணுக்கங்களை
ஏராளமான படங்களுடன் வீட்டிலிருந்தபடியே
எளிய முறையில் கற்றுக்கொள்ள ஓர் அரிய வாய்ப்பு !

## 36 ஓவிய பயிற்சிப் பாடங்களின் தொகுப்பு



ARAS ART SCHOOL
34/6 SRI GANESH FLATS
ST MARY' S ROAD
R. A. PURAM,CHENNAI
TAMILNADU,INDIA
PIN/ZIP-600028
PHONE +919940544416
+91 04424936918


பாடங்களைப்பெற...
ARAS ART SCHOOL"என்ற பெயரில் டி.டி எடுத்து' அனுப்பலாம். அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கிலும் செலுத்தலாம்.

கட்டண விபரங்கள்: UK 40 P0UNDS
EUROPE 45 EURO
CANADA 65 DOLLARS

AXIS BANK
A/C NO : 913020019432776
MICR CODE : 600211023
IFS CODE : UTIB0000676

arasoviyar@gmail.com
oviyaras@yahoo.co.in

எங்கள் இ மெயிலுக்கு உங்கள் முகவரியை அனுப்பவும். பாடங்கள் மூன்றே நாட்களில் உங்கள் இல்லத்திற்கே வந்து சேரும்.


Kumaran Silks
Since 1955
INDIA'S one and ONLY at panagal park
Panagal Park, T Nagar,
Chennai-17. INDIA.
Ph : 2434 3544/3727/3757
/kumaransilks
Shop online:www.kumaransilksonline.com

# Lycamobile
Call the world for less



**Special rates with UK plan**

# SRI LANKA

**3p /min**
Landline + Mobile

**£12 a month**

**1000 UK mins**

**2GB DATA**

**Unlimited UK texts**

**Unlimited calls and texts from Lycamobile to Lycamobile**

To buy: Text 12044 to 3535



# No Roaming Charges

**when you use your Lycamobile abroad in 17 destinations**

Australia Austria Belgium Denmark France Germany Ireland Italy Netherlands Norway Poland Portugal Romania Spain Sweden Switzerland USA

**Order your free SIM at www.lycamobile.co.uk/srilanka or call 020 7132 0322**


Top-up your SIM online or where you see the following signs:

top-up PayPoint epay payzone TESCO Sainsbury's ASDA WHSmith Martin McColl

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Special International rates for UK Plans customers offer ('the offer') is valid for calls from the UK to standard international landline and mobile numbers only and for customers with UK PLAN 7.5 or more. (Except UK plan 5). Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. These rates are valid until 31-05-2015. Lycamobile UK Plan ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. 4G availability is subject to handset model and location. The offer is valid from 01.01.2015. Customers must buy a bundle or top-up for no roaming costs on calls and texts. Customers must buy a specific data bundle for no roaming costs on data – full details at lycamobile.co.uk. Free Lycamobile to Lycamobile calls when roaming are restricted to a total of 100 minutes (applicable to both inbound and outbound calls). No roaming costs are only available for a continuous period of 59 days.

Lyca mobile
Call the world for less


Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers & Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909